# உள்ளம் என்கிற கோயிலிலே

## ரமணிசந்திரன்



# உள்ளம் என்கிற கோயிலிலே

ரமணிசந்திரன்

# அத்தியாயம்-1

மகதிக்கு அந்த விடுமுறை ரொம்பப் புதுமையானதாக இருந்தது, மெய்யாகவே புதுமைதான், அவளுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அனுபவித்து அறியாத புதுமை!

எந்தக் கடமையும் இல்லாமல் கையில் ஓரளவு தாராளமாகச் செலவு பண்ணக் கூடிய அளவு பணத்தோடு விருப்பம் போல வாழ்வது என்றால் ...... அது என்னவென்றே தெரியாதவளுக்கு எப்படி இருக்கும்?

திடீரென்று கடவுள் இறக்கையைக் கொடுத்து எங்கே வேண்டுமானாலும் பறந்து போ என்பது போல!

ஒரே ஒரு சிறு கட்டுப்பாடு, தஞ்சையைச் சுற்றிலும் இருக்கும் பழைய கோயில்களை. அதிலும் சற்றுச் சிதிலமான கோயில்களைச் சுற்றிப் பார்த்துக் குறிப்பெடுக்க வேண்டும், விடுமுறை தந்தவருக்கு அவள் ஆற்றவேண்டிய சிறு கடமை,

ஆனால் மகதியைப் பொறுத்த வரையில் இது கட்டுப்பாடோ. கடமையோ ஆகாது,

உவமை சொல்வதானால். வாழைப்பழத்தை மறுக்கிற குரங்கு உண்டா என்பதுதான் சரியாக இருக்கும், எனவே மறுப்பதைப் பற்றிய எண்ணமே அவளுக்குத் தோன்றவில்லை,

ஆனால் விடுமுறை என்று வாய் சொன்னபோதும். மனதளவில் வேலையின் ஒரு பகுதியாகவே ஆய்வாளர் எண்ணியிருக்கலாம், மற்றபடி அவரது ஆராய்ச்சியின் கருப் பொருளான பழைய கோயில்களைப் பார்த்துக் குறிப்பெடுக்கும்படி அவர் கூறத் தேவையில்லை,

ஆனால் பழைய கோயில்களையும் அவைகளின் அமைப்பையும். கருவறைத் தெய்வங்கள் தவிரப் பிரகாரங்களிலும். தூண்களிலும் சின்னச்சின்ன இடங்களைக் கூட விடாமல் பார்த்துப் பார்த்துச் செதுக்கிவைத்திருக்கும் அற்புதச் சிலா ரூபங்களை பார்த்துப் பார்த்து ரசிக்கிறவள் அவள்,

அன்றைய ஆடை அணிமணிகள். அணிந்திருக்கும் விதம். அதிலேயே அவர்களது சமூக நிலை. கூடவே அந்தச் சிலைகள் வெளிப்படுத்தும் முக பாவங்கள் என்று ரசிக்கத் தொடங்கிவிட்டாள் என்றால் அவளுக்கு நேரம் காலமே மறந்துவிடும், பசி தாகமோ நினைவே வராது!

அந்த அளவுக்கு அதில் “ஈடுபாடு! நேரம் காலம் தெரியாமல் கோயில் மூடுகிற நேரத்தில் கூட அங்கங்கே நின்று பார்த்துக் கொண்டிருப்பாள்,

வீட்டிலும்தான் அவளது வரவுக்காகக் காத்திருப்பவர் யார்?

முதலில் அவளுக்கு வீடே ஏது?

அவள் சிறு வயதாக இருக்கும்போது. பெரிய பணக்காரர் ஆக வேண்டும் என்று கருதி அவளுடைய தந்தை ஏதேதோ தொழில்களைத் தொடங்கினாராம், ஆனால் எதையுமே உருப்படியாக நடத்தியதாகக் கேள்வியில்லை,

இருந்த சொத்துபத்துகள். அம்மாவின் நகைகள். தட்டுமட்டுச் சாமான்கள் வரை போன பிறகு. கடைசியாகக் கடன்காரர்களுக்குப் பயந்து வீட்டை விட்டு ஓடிவிட்டாராம்,

வடக்கே எங்கேயோ போய் இறந்துவிட்டதாகத் தகவல் மட்டும் கிடைத்ததாம்,

அம்மாவுக்கு மன நோய் மட்டும்தானோ. மற்றும் என்னவோ?

வாழ்வு முடியப் போகிறது என்கிற நிலையில் பெரியப்பா. அப்பாவுடைய அண்ணன் வீட்டில் கொண்டு விட்டு விட்டு உலகையே விட்டுப் போய்விட்டாள்,

அவளுடைய பெரியப்பா வீட்டில் வசித்த காலத்தில் இது பற்றிய ஏளன விளக்கங்களை அவள் அடிக்கடிக் கேட்க நேரும், கேட்டுத்தான் ஆக வேண்டும், தப்ப முடியாது,

பெரியம்மா ஒரு மூச்சுக் கொட்டி முடித்த பிறகுதான் அவளுக்காகப் போட்டு வைத்திருக்கும் உணவுத் தட்டையே மகதி தொட முடியும்,

பெரியப்பா எதையும் கண்டுகொள்ளவே மாட்டார்,

அவரைப் பொறுத்த வரையில் நியாயமானபடி பிரித்துக் கொடுத்த சொத்தைக் கண்டபடி வீணாக்கிய தம்பி ஒரு முட்டாள், அதைத் தட்டிக் கேட்காத மனைவி ஓர் உதவாக்கரை, இருந்து இன்னும் கடனையும் ஏற்றாமல் இப்போதேனும் இருவரும் போனதே நல்லது,

தம்பி உருப்படியாகச் செய்த ஒரே காரியம் மகளின் படிப்புக்காக ஒரு பாலிசி எடுத்தது மட்டுமே என்று எண்ணுவார்,

ஆனால் அதைக் கூட அவர் தொண்டைக்கு வெளியே வரவிட்டது இல்லை, ஏனெனில். “இவள் படித்துப் பெரிதாக என்ன கிழிக்கப் போகிறாள்? பேசாமல் ஏதாவது கோயிலிலே மணியடிக்கிற வேலை கிடைத்தால் அதுவே பெரிது, நிம்மதியாக

மணியடித்துவிட்டு உண்டக்கட்டி வாங்கித் தின்றுவிட்டு சந்தோஷமாகக்  கோயிலிலேயே சுற்றிக் கொண்டிருப்பாள், அதை விட்டு. மகள் என்னமோ பெரிய டாக்டர் இஞ்சினீயர் ஆகப் போகிறாள் என்று படிப்புக்குப் பாலிசி எடுத்து. இருந்த ஐந்து பத்தையும் உங்கள் தம்பி வீணாக்கி வைத்திருக்கிறாரே! இதைக் குறிப்பிட்ட காலத்திலே கிடைக்கிற வைப்புநிதியாகப் போட்டிருந்தால் கைக்குப் பணமாகவேனும் கிடைத்திருக்கும், இப்ப புஸ்தகமும் ஃபீசுமாக வீணாக அல்லவா போகிறது!" என்று சுகந்தா பலமுறை உரக்கக் கூறி வருத்தப்பட்டிருக்கிறாள்,

அவளது பேச்சின் உட்கருத்து பெரியப்பாவுக்கோ பெண்ணுக்கோ புரியாமல் போகவில்லை,

அந்தப் பேச்சுக்கு மாறாக ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு. அப்புறம் அந்த வீட்டில் யாராலும் வாழ முடியுமா. என்ன?

ஆனால் முக்கியமாக விஷயம் என்னவென்றால். பெரிய படிப்பு இல்லை என்றாலும். கல்லூரி வரை மகதியின் படிப்பு தொடர்ந்தது,

மேலே அவளது படிப்புக்கு பத்து ரூபாய் செலவு செய்யவும் சுகந்தி தயாரில்லை, சாதாரணப் படிப்புக்கே அப்படி என்றால் செலவு பண்ணித் திருமணம் செய்து வைத்து விடுவாளா?

"சோறு துணி கொடுத்து விடுகிறோம், அதுவே பெரிது, தின்றுவிட்டு வீட்டோடு கிடக்கட்டும், அதற்கு மேல் பைசா செலவு பண்ணமுடியாது!"

மூன்றாம் நபர் யாரோ மகதியைப் பற்றி ஏதோ கேட்டிருப்பார்கள் போலும், தானாகவே இரண்டு நாட்கள் இப்படி இரைந்து கத்திவிட்டு. மறுப்பில்லாததாலோ என்னவோ ஒருவாறு சுகந்தி ஓய்ந்தாள்,

திருமணம் அது இதென்று அப்போதைக்கு மகதிக்குப் பெரிய கனவுகள் இல்லை என்றாலும். எதிர்காலம் பற்றிய கவலை இருந்தது,

எப்படியாவது தன் காலில் நிற்க வேண்டும் என்ற ஆசை, ஆனால் அது நடக்கவும் பணம் வேண்டுமே என்கிற கவலை!

ஏதோ ஒரு சாதாரணமான வேலை பார்ப்பது என்றாலும் அதற்கும் உரிய தகுதி வேண்டுமே! அந்தத் தகுதியைப் பெறவும் பணம் தேவைப்படும்! என்ன செய்வது?

மேலே இருப்பவரும் அது பற்றி யோசித்தார் போலும்!

அவள் கல்லூரிப் படிப்பை முடித்த சமயம் அது, கல்லூரி ஆண்டுவிழா மலரில் அவளது கட்டுரை ஒன்று வெளியாயிற்று,

அந்த ஊர்க் கோயில் அருகே இருந்த. கோயிலைச் சார்ந்த ஒரு

பழைய கட்டிடம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை அது, கோயிலை அருகிருந்து பரமரிக்கும்படியாக . அந்தக் கோயிலைக் கட்டிய சோழ மன்னன். ஒரு சிவபக்தருக்கு. அவர் வசிப்பதற்கு அந்த மாளிகையைக் கொடுத்துப் பராமரிப்புச் செலவுக்காக வருமானத்துக்கும் ஏற்பாடு செய்திருந்ததாக அந்தத் “தல வரலாறு” பற்றிய புத்தகத்தில் இருந்து மேற்கோள் காட்டி மகதி எழுதியிருந்தாள், வாசகசாலையில் இருந்து எடுத்துப் படித்த ஒரு சிற்ப வரலாறு பற்றிய புத்தகத்தில் இருந்தும் சில மேற்கோள்கள் காட்டியிருந்தாள்,

விழாவுக்கு வந்த ஆய்வாளர் ஒருவர். மகதியைப் போறுத்தவரையில் அன்றைக்கு அவளுக்குத் தெய்வம்! பெயர் சூட்சுமன், அவளது கட்டுரையைப் படித்துப் பார்த்துவிட்டு. அவளுக்கு வேலை தர முன் வந்தார்,

சூட்சுமன் என்கிற அவரது புனைபெயர் ஓரளவு மகதிக்கு அறிமுகம் ஆனதுதான், அவ்வப்போது பத்திரிகைகளில் தமிழ் நாட்டில் உள்ள தொன்மையாக கோயில்கள். கட்டிடங்கள் பற்றி எழுதுவார்,

அவளது ஆவலுக்கு முழுத் தீனியாக இருக்காது, இன்னும் கொஞ்சம் நுணுக்கமாகவும் பெரிதாகவும் எழுதி இருக்கலாமே என்று நினைப்பாள், ஆனால் இது போன்ற ஆர்வத்துடன் ஒருவர் எழுதுவதே சிறப்பல்லவா?

சூட்சுமன் அவளைத் தன்னிடம் பணி புரிய அழைத்தார் என்பதே மகதிக்குப் பெரு மகிழ்ச்சியாக இருந்தது, அதுவும் அந்த வீட்டை விட்டு வெளியேறும் வாய்ப்பும் கிடைக்குமே,

பெரியம்மாவுக்கு ஏதோ வேலை என்கிற சாக்கிலேனும் அவள் எங்கோ போய்த் தொலைந்தால் நல்லது என்பதுதான்,

தன்னால் ஆன வேலைகளை மகதி செய்வாள்தான், ஆயினும் தண்டச்சோறு என்கிற அடைமொழியோடுதான் சுகந்தி அவளைப் பெரும்பாலும் அழைப்பதே!

முக்கியமான ஒன்று, வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும் அவளுடைய சொந்த மகளை யாரேனும் இவளோடு ஒத்திட்டுக் குறைவென்று கூறி விடுவார்களோ என்ற கவலை அவளுக்கு எப்போதுமே உண்டு, தாயைக் கொண்டு பிறந்திருந்த மகதி ஒப்பனைகள் இல்லாமலே அழகியே!

பிரச்சினை வருமுன்பே மைத்துனர் மகள் கிளம்பிவிட்டால் நல்லதுதானே? ஆனாலும் ஓர் எச்சரிக்கை செய்தே அனுப்பினாள்,

சம்பாதிக்கும் வாய்ப்பை விடாமல் மகதி போவது நல்லதுதான், ஆனால் வயதுப் பெண், காதல் கீதல் என்று சொல்லிக்கொண்டு

கல்யாணச் செலவுக்கு இங்கே வந்து நிற்கக் கூடாது, அவளுடைய பெற்றோர் ஒன்றும் மகளுக்காகக் கொட்டி வைத்துவிட்டுப் போகவில்லை! இத்தனை நாள் சோறு போட்டதே அதிகம்! இதற்கு மேல் நயாபைசா பேராது!

ஆனால் பெரியப்பாவுக்குக் கொஞ்சம் ரத்தம் துடித்ததோ என்னவோ? பெண்ணுக்கு என்ன சம்பளம். எங்கே தங்குவது. வருவது எல்லாச் செலவுக்கும் கட்டி வருமா என்பதை எல்லாம் விசாரித்தார்,

கோயில் கோயிலாகச் சுற்றி வருவதுதான் முக்கிய வேலை, அங்கங்கே தங்குமிடம் ஏற்பாடு செய்வது ஆய்வாளரது பொறுப்பு, கோயில்களைப் பற்றி எழுதுவதால் பெரும்பாலும் அந்தந்தக் கோயில்களிலேயே அதற்குத் தகுந்தவாறு இடம் கொடுத்து விடுவார்கள் என்றார் அவர், உணவுக்கும் பிரச்சினை இராது என்றார்,

எப்படியும் உணவு உறைவிடம் பற்றிய செலவுகள் சூட்சுமனே ஏற்றிருந்தார்,

அது போக அவர் தருவதாகச் சொன்ன தொகை அதிகமில்லை, ஆனாலும் ரொம்பக் குறைவென்றும் சொல்ல முடியாது, பெரிதாகச் செலவு செய்து பழக்கம் இல்லாத மகதிக்கு அதில் வருத்தம் தோன்றவில்லை,

பெரியப்பா குடும்பத்துக்கும் அப்படித்தான்,

தொல்லை விட்டது என்பது அம்மாவுக்கும் பெண்ணுக்கும், தம்பி மகளுக்கு ஒரு வேலை கிடைத்து. கௌரவமான வாழ வழியும் கிடைத்தது என்ற நிம்மதி பெரியப்பாவுக்கு,

கிட்டத்தட்ட அவரது வயதில் உள்ள பெரிய மனிதரின் பாதுகாப்பும் சேர்ந்தல்லவா கிடைத்திருக்கிறது! சூட்சுமன் பற்றி அவர் விசாரித்ததிலும் தப்பாக யாரும் எதுவும் சொல்லவில்லை,

அவரது ஆராய்ச்சிதான் அவரது வாழ்க்கையாக இருந்தது, ஒரு பெரிய நிறுவனத்தின் மூலமாக இந்த ஆராய்ச்சிக்காக அவருக்கு நல்ல வருமானமும் வந்து கொண்டிருந்தது, உதவியாளர் என்ற பெயரில் மகதியின் செலவுக்கும் சூட்சுமன் முறையாக ஏற்பாடு செய்யவே பெரியப்பாவுக்குத் திருப்தியாகிப் போயிற்று,

முதலில் சூட்சமனின் ஆராய்ச்சிக் குறிப்புகளை விரித்து எழுதுவது மட்டுமே மகதியின் வேலையாக இருந்தது, அவர் தந்தி மொழியில் ஓரிரு வார்த்தைகளில் சுருக்கிக் குறித்து வைத்தவை, மகதி அவைகளைக் கட்டுரையாக மாற்ற வேண்டும், கிட்டத்தட்டப் பிரதி எடுப்பது போன்றதுதான், எழுத்துப் பிழைகளை மட்டுமே அவள் திருத்தலாம்,

அதுவும் அவரிடம் காட்டி அவரது அனுமதியைப் பெற்ற பிறகே, தானாக யோசித்துச் செய்வதற்கு ஒன்றுமில்லாத இந்த வேலை அவளுக்கு விரைவிலே முடிந்து போகும், இந்த வேலை நேரம் போக மற்ற சமயங்களில் கோயிலின் தல புராணம் படிப்பதும் அங்கே உள்ள சிற்ப வேலைப்பாடுகளை ஆராய்வதும் அவளது பொழுது போக்காக இருந்தது, மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு!

பார்த்து ரசிப்பதோடு இருந்து விடாமல். அந்தக் கோயில்கள் கட்டப்பட்ட காலம். சிற்பங்களின் கலை நயம் . நிவந்தங்கள். மானியம் பற்றிய விவரங்களை ஆராய்வாள், அங்கங்கே உள்ள வாசகசாலைகளில் உள்ள புத்தகங்களையும் பயன்படுத்துவாள், அந்தக் காலத்தின் சரித்திரம் அறிந்தவர்களிடமும் போய் பேசி விவரம் அறிவாள், எல்லாவற்றையும் இணைத்து ஆதாரத்துடன் குறிப்புகள் எழுதி வைப்பாள்,

அவளது சொந்தத் திருப்திக்காக எழுதி வைக்கும் குறிப்புகள் அவை, சும்மாவேனும் ஒருநாள் அவைகளைப் பார்வையிட்ட சூட்சுமன் மெல்ல இந்தக் குறிப்புகளைத் தன் கட்டுரைகளில் பயன் படுத்தத் தொடங்கினார்,

விஷயம் தெரிந்தவர்கள் மத்தியில் அவைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கவே அவளது குறிப்புகள் இப்போது அவளது பணிப் பொறுப்புகளில் இணைக்கப்பட்டு அவரது மேஜையில் வைக்கப்பட்டன,

ஆனால் அவர் அதை வெளிப்பட உரைக்காமல். “ஏதோ பரவாயில்லை மகதி, நீ இன்னும் கொஞ்சம் முயற்சி செய்தால் பணி ஓரளவு நன்றாகவே இருக்கும் என்று நினைக்கிறேன்,” என்று தட்டிக் கொடுப்பது போலப் பேசி. இன்னும் உழைக்க வைத்தார்,

அவளும் உற்சாகத்துடன் உழைத்தாள், அந்தந்தக் கோயில்களில் மக்கிக் கொண்டிருந்த ஓலைச் சுவடிகள். பழைய புத்தகங்கள். செப்புத் தகடுகள் எல்லாம் தூசி தட்டப்பட்டன,

வாசகசாலை பொறுப்பாளர்களும். சரித்திர ஆசிரியர்களும் அவளது ஆர்வத்தைப் பார்த்துவிட்டு அவர்களாகவே உதவினார்கள்,

எல்லாம் படித்து ஆராய்ந்து. அந்தந்த திருத் தலங்கள் பற்றிய தெளிவான விவரம் சேகரித்து. அதை மகதி எழுதிக் கொடுக்கலானாள்,

மகதியின் விரிவாக்கங்கள். மற்ற குறிப்புகள் எல்லாமே சூட்சுமனுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்து விட. அவரைப் போன்ற மற்ற ஆராய்ச்சியாளர்கள் கூட்டத்தில் அவரது மதிப்பு உயர்ந்தது,

முக்கியமாகப் பஞ்சலோகச் சிலை வார்ப்பு பற்றிய அவளது குறிப்புகள், எப்படிக் குங்கிலியமும் தேன் மெழுகும் கலந்து பிசைந்து முழுமையாகச் சிலை வடிவங்களை அமைப்பார்கள்,. பிறகு கறையான் புற்று மண்ணை எடுத்துப் பிசைந்து மெழுகுச் சிலை மேல் சீராகப் பூசித் தீயில் சுடுவார்கள்,. குங்கிலியமும் தேன் மெழுகும் தீயில் உருகி வடிந்து விட. இப்போதுள்ள சுட்ட கறையான் புற்று மண் கூட்டில் தேவையான உலோகக் கலவையை சூடாக ஊற்றி கெட்டிப்பட்டதும் மண் கூட்டை உடைத்து சிலையை எடுத்து அலங்கார வேலைகளைச் செய்வார்கள் என்பது பற்றிப் பல்வேறு புத்தகங்களைப் படித்து. பலதோடு ஒப்பிட்டுப் பார்த்து மகதி எடுத்துக் கொடுத்த குறிப்புகள் சூட்சுமனின் மதிப்பை மிகமிக உயரத்துக்குக் கொண்டு போயின,

மெல்ல மெல்ல கடைசியாக மகதியின் கடின உழைப்பின் பயன்கள் எல்லாவற்றையும் அவர் தன் சொந்தப் படைப்பாகவே கருதத் தொடங்கிவிட்டார்,

பெரும்பாலும் மகதியையே எழுதி வைக்கச் சொல்லிவிட்டு. இந்த ஆராய்ச்சிகள் தொடர்பான கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக சூட்சுமன் அடிக்கடி வெளியூர் சென்று வரலானார்,

பலனாக சிலபல பரிசுகளும் பாராட்டுகளும் அவருக்குக் கிடைத்தன,

மானில அளவில் தலை சிறந்த ஆராய்ச்சியாளர் விருதும் அதன் மூலமாகப் பணமும் கிடைத்தது,

“ராமர் கட்டிய பாலத்துக்கு அணில் தன்னாலான பணியைச் செய்தது போல உன் குறிப்புகளும் ஓரளவு உதவின மகதி,” என்று அவளது பணிகளுக்கு ஒரு விதமான அங்கீகாரம் கொடுத்தார் சூட்சுமன்,

அதிலேயே மகதி உச்சி குளிர்ந்து போவாள்,

அது போன்ற தருணங்களில். கொஞ்சம் பணமும் கொடுத்து அவளுக்கு பிடித்தமானதை வாங்கிக் கொள்ளச் சொல்லுவார்,

மகதிக்கு உலகம் சொர்க்கலோகம் ஆகிவிடும்!

பெரியம்மாவிடம் திட்டு வாங்கியே பழக்கப்பட்டு விட்டிருந்த மகதிக்கு இந்த வாழ்வு மெய்யாகவே சொர்க்கமாகத்தான் தோன்றியது,

அணிலின் பணியையும் அங்கீகரித்த ராமபிரானைக் கிட்டத்தட்ட எட்டி விட்டவராகவே ஆராய்ச்சியாளர் சூட்சுமன் அவளுக்குத் தோற்றினார்,

அந்தக் கடவுளாகப் பார்த்துதான் சூட்சுமனைப் போன்ற ஒரு நல்ல மனிதரை அவளது உதவிக்காக அனுப்பியிருக்க வேண்டும் என்று எண்ணுவாள்,

ஆனால் அவருடைய ஆராய்ச்சியாளர் கூட்டத்துக்குள் மகதி சென்றது கிடையாது, அதை அவர் ஊக்குவித்ததும் கிடையாது, அவரது சமீப காலக் கட்டுரைகளை அவள் படித்ததும் கிடையாது,

அவளாக அது பற்றிக் கேட்கும்போதும். “அதெல்லாம் கொஞ்சம் உயர் நிலைக் கட்டுரைகள் மகதி, உன் இப்போதைய அறிவு நிலைக்கு அது புரிவது கஷ்டம், உனக்குத் தகுந்ததாக. நீ உன் அணியில் வேலையை ஒழுங்காகச்  செய், அது போதும், மற்றதை நானே பார்த்துக் கொள்ளகிறேன், எழுத்து தரம் குறையாமல் இருக்க வேண்டும் பார், உனக்குப் புரிகிறதோ இல்லையோ. படித்துப் பார்த்தால் ஏதாவது கருத்துச் சொல்லத் தோன்றும், எப்படியும் என் தரத்துக்கு உன்னால் வர முடியாது, நீ தப்புத் தப்பாக ஏதாவது உளறினால். அப்புறம் எனக்கு எரிச்சல் வரும், எதற்கு வீண் பிரச்சினை?” என்று கூறி விடுவார்,

தமிழகத்தில் சில பரிசுகளைப் பெற்ற பிறகு. திடுமென சூட்சுமன் பணியில் மும்முரமாக ஈடுபட்டார், இதைப் பார். அதைக் குறிப்பெடுத்து வா என்று மகதியை விரட்டி வேலை வாங்கினார்,

அப்படி அவள் எடுத்த குறிப்புகளைச் சரியான வரிசையில் அடுக்கி வைக்கவில்லை என்று ஒருநாள் கத்தினார்,

இல்லாத காரணங்களைத் தேடி உருவாக்கிக் குத்திக் குதறிய பெரியன்னையோடு ஒத்திடுகையில் இதெல்லாம் ஒன்றுமே இல்லை என்பது மகதியின் கருத்து,

அத்தோடு சூட்சுமன் சாரின் கத்தலில்  வன்மம் இருக்கவில்லை, “ஆத்திரக்காரனுக்கு அண்டாவுக்குள் கூடக் கை நுழையாது” என்பார்களே. அது போன்ற வேலைப் பரபரப்பில் முன்னே இருப்பதைச் சரியாகக் கவனியாமலே கத்துகிறார் என்று புரிந்துகொண்ட மகதி இந்தக் கத்தலைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவே இல்லை!

மாறாகத் தன்னால் ஆன உதவிகளைச் செய்துவிட்டு ஒதுங்கிப் போய்விடுவாள்,

சுமார் ஒரு மாத காலம் நீடித்த இந்தக் களேபரத்தின் பின் சூட்சுமன். தான் டெல்லிக்குப் போவதாக அறிவித்தார்,

அங்கே பெரிய அளவில் நடக்க இருக்கும் ஆராய்ச்சியாளர்களின் கூட்டத்தில். பல போட்டியாளர்களுக்கு இடையே தன் கட்டுரையைக் கொடுத்து முக்கியமாகவர்களிடம்

கலந்து பேசி. முதல் பரிசுக்காக பாடுபடப் போகிறார், அதற்காக பல நாட்கள் அவர் அங்கேயே தங்கியிருக்க நேரும், ஏனெனில். சிபாரிசிலேயே பரிசுகளையும் பணத்தையும் குவிக்கும் பலரோடல்லவா உண்மை உழைப்பாளியான அவர் போட்டியிட வேண்டியிருக்கிறது!

சுமார் ஒரு மாத காலமாக ஓட ஓட அவளை சூட்சுமன் விரட்டிய காரணம் தெளிவாகிவிட. மகதிக்குச் சிரிப்பு வந்தது!

“முயற்சி மெய் வருந்தக் கூலி தரும் சார், இவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்திருக்கிறீர்களே!” என்றாள் பாராட்டுதலாக,

ஆனால் லேசாக முகம் கன்ற சந்தேகமாகப் பார்த்தார் சூட்சுமன்,

தப்பாக என்ன சொன்னோம் என்று மகதி யோசிக்கும்போதே அவர் முகம் மாறிவிட மேலே தன் பயண விவரம் உரைத்தார்,

எப்போது வேலை முடிந்து திரும்பி வருவார் என்பதை அங்கே போய். இருக்கிற சூழ்நிலையைப் பார்த்துதான் அவர் சொல்ல முடியும், எப்படியும் ஒரு பத்து இருபது நாட்களில் உள்ள நிலைமை ஓரளவு தெரிந்துவிடும், அதன்பின் அவளுக்குத் தெரிவிப்பார்!

சூட்சுமன் இங்கில்லாத நாட்களை மகதி விடுமுறைக் காலமாக விருப்பம் போலக் கழிக்கலாம், விடுமுறைக்கும் ஊதியம் தரும் அவருக்காக. சோழர் காலத்துச் சிற்ப நுணுக்கங்களைக் குறிப்பெடுக்கும் சிறு பணி மட்டும் அவள் சேர்த்துச் செய்ய வேண்டும்,

விடுமுறை சம்பளத்தோடு கூடியது என்பது மகதிக்கு மகிழ்ச்சி அளித்தது!

அவளது ஆனந்தத்துக்குக் கேட்பானேன்? இதற்கு மேல் அவளுக்கு என்ன வேண்டும்?

ஓர் இளம் பெண்ணுக்கு என்னென்னவோ தேவை இருக்கலாம்,

ஆனால் அது பற்றி மகதி அதிகம் கவலைப்பட்டதில்லை,

அவளைப் பொறுத்த வரையில் வேலை என்கிற சாக்கில் அவளுக்குப் பிடித்தமான விதமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள், அது அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது,

ஊதியத்தைத் தந்த ஆய்வுக் கட்டுரையாளருக்கும் திருப்திதான்!

ஆனால் இளம் பெண்ணான அவளுக்கு இந்த வாழ்வு போதுமானதாக இருக்கவில்லை என்பதை மகதி பின்னர்தான் தெரிந்துகொண்டாள்,

பெற்றோரை இழந்து பெரிய தந்தை வீட்டில் அனுபவித்த கடின

வாழ்வில் இருந்து வெளியேறியதே அவளுக்கு சந்தோஷம்தான், பிடித்தமான வேலையும் உரிய ஊதியமுமாக மகிழ்ச்சியோடு வாழ்வதாகவே மகதி எண்ணிக் கொண்டிருந்தாள்,

இதைத் தாண்டி ஓர் அற்புத உலகம் இருக்கக் கூடும்,. இருக்கிறது என்று அவள் கற்பனை கூடச் செய்தது இல்லை, ஆனால் அப்படி சொர்க்க போகம் இருக்கிறது என்பதை அவள் அனுபவித்துத்தான் அறிந்து கொள்ள வேண்டியிருந்தது!

ஆனால். சொர்க்கம் என்று ஒன்று இருந்தால் நரகமும் உண்டுதானே?

# அத்தியாயம் - 2

அன்று வீட்டுக்கு வரவே நிரஞ்சனுக்குப் பிடிக்கவில்லை, அலுவலகத்தில் வேலை முடிந்து வீட்டுக்குப் போனால் அங்கே நிம்மதியாக எதையோ படித்துக்கொண்டோ. பார்த்துக் கொண்டோ. கண்ணை மூடி ஏதாவது இசையைக் கேட்டுக்கொண்டோ. சோஃபாவில் இலகுவாகச் சாய்ந்து கிடக்க முடியாது,

எந்த விருந்தினர் வந்தாலுமே. எந்நாளும் போல இறுக்கம் தளரக் கிடக்க முடியாதுதான், நம்முடைய பழக்கங்களை ஒதுக்கி. விருந்தினருக்காகச் சில பல மாற்றங்களை ஏற்பது குடும்ப வாழ்வில் தவிர்க்க முடியாதது,

அவற்றை அவன் தவிர்க்க நினைத்ததும் கிடையாது, எத்தனையோ காலமாக நாம் பழகி வைத்திருக்கும் விருந்தோம்பலின் தன்மை அது,

ஆனால் அவன் வீட்டுக்கு வரும் இன்றைய விருந்தாளிகள் சும்மாவே டென்ஷன் பார்ட்டிகள்!

முக்கியமாக ஆள் அவனுடைய பெரிய அத்தை சரளா,

அத்தைக்குத் திருமணமாகிச் சென்று முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டபோதும். இந்த வீட்டின் வீட்டின் பட்டத்து இளவரசி தானேதான் என்பதில் அவளுக்குச் சந்தேகம் வந்ததே கிடையாது,

ஒவ்வொரு தரம் வரும்போதும். வீட்டினர் அனைவரையும். முக்கியமாக நிரஞ்சனுடைய தாயார் பானுமதியை ஆட்டிப் படைக்காமல் அவள் திரும்பிச் சென்றதே கிடையாது,

அது கூட வீட்டில் எல்லோருக்கும் பழகிப் போய்விட்டது,

என்ன. ஒரு பத்துப் பதினைந்து நாட்கள்தானே என்று எல்லோரும் பொறுத்துப் போய் விடுவார்கள்,

எனவே அது போன்ற ஆர்ப்பாட்டங்கள் சரளாவுக்கும் சலித்துப் போய்விட. அவள் இப்போது வேறு விதமாக ஒரு திட்டமிட்டாள், அவளுடைய மகளை அந்த வீட்டு மகாராணி ஆக்கி விடுவதே அந்தத் திட்டம்!

திட்டம் தெரிந்ததும் அம்மாவும் பிள்ளையும் கதிகலங்கிப் போயினர், அவ்வப்போது வந்து போகும் தலைவலியை நிரந்தரமாக வீட்டில் குடி புக வைப்பதா?

அப்பா கிருபாகரனைப் பொறுத்தவரையில் அவருக்கு அரை மனது!

தங்கை சற்று ஆர்ப்பாட்டக்காரிதான், ஆனால் இந்த வீட்டுப் பெண், அந்த உரிமையைச் சற்று அதிகம் காட்டுகிறாள் என்பார்,

அவருடைய பெற்றோர் இருந்தால் மகளை விட்டுக் கொடுப்பார்களா என்பது அவரது வாதம், சொந்தம் விட்டுப் போகக் கூடாது என்ற எண்ணம் வேறு,

“மாமா மாமா” என்று தங்கை மகள் வழியும்போது அவருக்கு உச்சி குளிர்ந்துவிடும்,

“சரளா எப்படி இருந்தால் என்ன? ஐஸ் பிரியமாகப் பழகுகிறாள், அது போதாதா?” என்று ஒருநாள் கிருபாகரன் கூறவே. பானுமதி கதிகலங்கிப் போனாள்,

நாத்தனார் மகளின் இரட்டை வேஷம் அவளுக்கல்லவா முழுதாகத் தெரியும்!

அவளுக்கு மட்டுமல்ல, நிரஞ்சனுக்கும் அத்தை பெண்ணைப் பற்றி நன்றாகவே தெரியும்,

தாய் எட்டடி என்றால் குட்டி பதினாறடி பாயும் என்பார்களே அந்த மாதிரி ரகம் அவள், சின்ன வயதில் இருந்தே அவனது பொருட்களை நாசம் பண்ணுவதில் அவளுக்குத் தனி ரசனை!

வளர வளர இன்னும் மோசம், அவனுடைய நண்பர்களிடம் அவள் பேசிப் பழகிய விதம் அவனை முகம் கன்ற வைத்திருக்கிறது,

அவனுடைய நல்ல நண்பர்கள் யாருமே ஐஸ்வர்யா வந்திருப்பது தெரிந்தால் வீட்டுப் பக்கம் தலை காட்ட மாட்டார்கள்,

அதிலும் அந்த நண்பர்களோடு சேர்ந்து உழைப்பும் முதலுமாகப் போட்டுப் பெரிதாகத் தொழில் தொடங்கலாம் என்று அவர்களிடையே பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தது,

கூடுதலாக இன்னும் ஒரு தொழில்தானே,. உழைக்கிற வயதில் செய்யட்டுமே என்று கிருபாகரனும் மகனிடம் தலையாட்டி வைத்திருந்தார்,

பானுமதியுடைய தந்தை மகள் வழிப் பேரனுக்குப் பெரிய சொத்தோடு கணிசமான தொகையையும் கொடுத்திருந்தார், அதுவும் சேர்ந்து அத்தையின் முடிவை. அதாவது இந்த வீட்டு சம்பந்தியாகும் எண்ணத்தை ஊக்கியிருக்குமோ என்ற சந்தேகம் நிரஞ்சனுக்கு ஏற்பட்டிருந்தது,

ஏற்றாற்போல. “உன் தொழிலுக்கு எம்டியாக இவளைப் போடு நிரஞ்சா, என்மகள் ரொம்ப அதிருஷ்டக்காரி, பெயரே எப்படி வைத்திருக்கிறேன் பார்! அதனாலேயே பானை பிடித்தவள் பாக்கியமாக உனக்குப் பணம் கூரையைப் பிய்த்துக்கொண்டு

கொட்டும்,” என்று அத்தைக்காரி அவனுக்கு ஆலோசனை வேறு சொல்ல முகம் மாறாமல் காப்பது அவனுக்குப் பெரும் பாடாகிப் போயிற்று,

ஆனால் அவனுக்கு ஒன்று நிச்சயம், அத்தை மகளை மணந்தால். அவனுடைய நண்பர்கள் இந்தக் கூட்டுத் தொழில் முயற்சியையே விட்டு விடுவார்கள்! அவர்கள் யாரையும் நிமிர்ந்து பார்க்க அவனாலும் முடியாது,

முகத்தில் அடித்தாற்போல நேரடியாக மறுத்து விடலாம் என்று பார்த்தாலோ. தகப்பனாரைச் சமாளித்தாக வேண்டும்!

கிருபாகரன் நல்ல தந்தைதான், குடும்பத் தொழில் என்று பிடிவாதமாக அதே கூட்டுக்குள் அடைக்காமல். அவனது விருப்பத்துக்குத் தொழில் தொடங்கச் சம்மதித்ததோடு. அவனுக்கு உதவி தேவைப்பட்டால் தயக்கமின்றிக் கேட்கும்படியும் கூறியிருந்தார்,

ஆனால் தங்கை என்று வந்துவிட்டால். அவரது நியாய அநியாயங்கள் எல்லாம் முக்காடு போட்டு இழுத்து மூடிக்கொள்ளுமே!

கடைசிக்காலத்தில் “தங்கையைக் கண் கலங்காமல் பார்த்துக்கொள்,” என்று சொல்லிவிட்டுப் பாட்டி இறந்ததாக அவ்வப்போது சொல்லுவார், அதனாலேயே தங்கையின் ஆட்டத்தை அவர் தடுத்தது கிடையாது,

போகட்டும், தட்டுமுட்டுச் சாமான்கள் எதை வேண்டுமானாலும் கொண்டு போகட்டும்,. தேவைப்பட்டால் மீண்டும் வாங்கிக் கொள்ளலாம், அப்படி வாங்க முடியாத நிலையில் அவர்களைக் கடவுள் வைக்கவுமில்லை என்று தாய் மகன் இருவருமே அவைகளைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டனர்,

அதன் பலன்தானோ என்னவோ. ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து. மனிதனையே கடிக்க வந்துவிட்டனர் என்று நிரஞ்சன் தாயிடம் பொருமினான்,

அவனுடைய தாய்க்கும் இதில் அடியோடு பிரியம் இல்லை! அவளால் வாய்விட்டு சொல்ல இயலாவிட்டாலும் மனதளவில் முழு மறுப்புதான்,

கிருபாகரனிடம். அவர் சொல்வதை நேரடியாக மறுத்தால் விறைத்துக்கொள்வார், போய்க் கல்யாணத் தேதியையே நிச்சயம் பண்ணிக்கொண்டு வந்தாலும் வந்துவிடுவார், வீட்டுத் தலைவராக மரியாதை காட்டியே பழகிய அவரிடம் மூர்க்கத்தனமாக மறுப்பது ரொம்பக் கடினம்!

எனவே. வெகு கவனத்துடன் நண்பர்களோடு தொடங்க இருக்கும் தொழில் பற்றியே அவரிடம் பன்னிப் பன்னிப் பேசினான்,

“சின்னப் பையன் அல்லவா? முதல் முயற்சி வேறு, செய்ய இருக்கும் தொழில் தவிரப் பையன் மனதில் வேறு நினைப்பே இல்லை, அவசரப்படாமல் மெல்லப் பார்ப்போம்,” என்று தந்தையே அவருடைய தங்கையிடம் சொல்லவும் வெற்றிக் களிப்பில் துள்ளிக் குதித்தான்,

சந்தோஷமாக வந்து சொன்ன தாயிடம். “இனிச் சமாளித்து விடலாம் அம்மா, இப்போதைக்குத் தள்ளிப் போட்டு விட்டதால். அப்பாவிடம் எடுத்துச் சொல்ல அவகாசம் கிடைக்கும், பொதுவாக நெருங்கிய உறவுக்குள் திருமணம் அவ்வளவாக நல்லதில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள் என்று மெதுவாக விளக்கிச் சொன்னால் அப்பா ஏற்றுக் கொள்வார், ஒரு தரம் என்னிடம் ஒத்துக்கொண்டுவிட்டால். அப்புறம் அத்தை என்ன கெஞ்சினாலும் மாற மாட்டார்!” என்றான் மகிழ்ச்சியோடு,

மெய்யாகவே அவன் நம்பிச் சொன்னதுதான், அது உண்மையும் கூட,

ஆனால் தந்தையைப் பற்றி அறிந்திருந்த அளவு. அவன் தன் தந்தையுடன் பிறந்த அத்தையம்மாளைப் பற்றி அறிந்திருக்கவில்லை,

அண்ணனின் குணத்தைப் பற்றி ஓரளவு நன்றாகவே அறிந்திருந்த சரளாவும். விஷயத்தை ஆறப் போட விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள்,

அதே சமயம் “பிறகு மெல்லப் பார்ப்போம்” என்று கிருபாகரன் சொல்லிவிட்ட பிறகு. “ஙைஙை“ என்று தொணதொணக்கவும் அவளுக்குமே தைரியமில்லை,

“நான்தான் பிறகு பார்க்கலாம் என்று சொல்கிறேனே அப்படி உனக்கு அவசரம் என்றால் வேறு இடம் பார்,” என்று கூறிவிட்டார் என்றால். அத்தோடு எல்லாம் முடிந்துவிடும், மகளை அண்ணனுடைய மருமகளாக்கிவிட்டு. இங்கே ஒரு மகாராணி போல அமர்ந்து பானுமதியை விரட்டுவது பகலில் கண்ட கனவாகிவிடும்,

எனவே சூட்டோடு சூடாக சரளா வேறு ஒரு திட்டம் தீட்டினாள்,

மகளின் ஒத்துழைப்பில் சரளாவுக்கு முழு நம்பிக்கை உண்டு என்றாலும். அவளது புத்திசாலித்தனத்தில் அவ்வளவாக நிச்சயம் கிடையாது, எனவே திரும்பத் திரும்பச் சொல்லி மகளுக்கு உருவேற்றினாள்,

பாதித் தூக்கத்திலும் கூடத் தான் சொன்னதை மகள் அப்படியே நிறைவேற்றுவாள் என்ற நம்பிக்கை ஏற்பட்டதும். மறுபடியும் முன்

அறைப் பக்கம் சென்று அண்ணன் மகன் வருகைக்காகக் காத்திருந்தாள், ஆனால் விடிகாலை வரை காத்திருந்தும் நிரஞ்சன் வருவதற்கான அறிகுறியே தென்படவில்லை,

வயதுப் பையன். இப்படி இரவில் வீட்டுக்கு வராமல் சுற்றுவது பற்றி அண்ணனிடம் வத்தி வைக்க வேண்டும் என்று ஆத்திரத்துடன் நினைத்தாள்,

ஒழுங்காகக் கல்யாணம் காட்சி என்று செய்து வைத்தால் இப்படி வெளியே ராத் தங்குவானா என்று விஷயத்தைத் தனக்கு எப்படித் சாதகமாகத் திருப்பி விடலாம் என்று

திட்டமிடும்போதுதான் அவளுக்கு ஷாக் அடித்தது,

பையன் வீட்டுக்கு வராதது அவளுக்கு எப்படித் தெரியும். சரியாகத் தூங்கவில்லையா என்று அக்கறையாக விசாரிப்பது போலத் தொடங்கி. அப்படித் தூங்காவிட்டாலும் பையன் நடமாட்டம் அண்ணி அறைவரை கேட்காதே என்று அவளுடைய குசும்புக்கார அண்ணி பானுமதி அப்பாவி மாதிரி முகத்தை வைத்துக்கொண்டே புருஷனிடம் போட்டுக் கொடுத்துவிட்டால். அப்புறம் அத்தோடு தீர்ந்தது,

“ஆமாம். நீரு வருவதையும் போவதையும் கண்ணில் விளக்கெண்ணை போட்டுக்கொண்டு கவனிப்பதுதான் உன் வேலையா? ஏதேனும் கோள் மூட்டத்தான் இங்கே வந்தாயா என்று தொடங்கி. நீ கேட்டதும் சலாம் போட்டுக்கொண்டு உன் பெண் கழுத்தில் பையன் தாலி கட்டவில்லை என்கிற ஆத்திரத்தில் அநியாயப் பழி போடுகிறாயா? வாயை மூடிக்கொண்டு கிளம்பு” என்று கூட அண்ணன் முடித்து விடக் கூடும்,

அப்புறம் எல்லாம் அடியோடு கெட்டுப் போகும்,

ஊகூம், அப்படி எதுவும் நடக்க விட்டுவிடக் கூடாது,

நிரஞ்சன் கெட்ட பையன் அல்ல என்பது அவளுக்கும் நன்றாகவே தெரியும்,

அத்தோடு இவ்வளவு பணமும் கிடைக்குமே என்றுதானே அவளே இவ்வளவுக்கு இறங்கியது!

ஏதோ தொழில் தொழில் என்கிறானே. அது பற்றி நண்பர்களோடு நேரம் தெரியாமல் பேசிக் கொண்டு இருந்திருப்பான், போகட்டும், இன்றில்லாவிட்டால் இன்னொரு நாள், ஏதோ ஒரு நாள் இந்த சரளாவிடம் மாட்டாமலா போய்விடுவான் ............. என்று இதே ரீதியில் எண்ணமிட்டபடி. மகளை விடுவிக்கப் போனாள் சரளா,

ஆனால் சரளா எதிர்பார்த்தபடி நிரஞ்சன் வீட்டுக்கு வரவே

இல்லை,

நண்பர்களோடு சேர்ந்து சில கொள்முதல் வேலைகளைத் திட்டமிட்டுத் தொடங்கும் நிமித்தமாக அவர்களோடு வெளியூர் செல்வதாகக் கிருபாகரனுக்கு  ஒரு மெயில் மட்டுமே வந்தது,

மற்றபடி அவனது இருப்பிடமே யாருக்கும் தெரியாது போயிற்று,

ஒற்றைக்கு ஒரு பிள்ளை எங்கே எவளோடு சுற்றுகிறானோ என்பது கூட இல்லாமல் இப்படியா ஒரு மரக்கட்டை இருப்பாள் என்று மனதிற்குள் அண்ணன் மனைவியை வைத போதும். சரளாவால் வேறு ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று,

ஏனெனில் கிருபாகரனுக்கும் அருமைப் பிள்ளை மேல் சந்தேகமே வருவதாக இல்லை,

ஜாடை மாடையாக ஏதோ சொல்லிப் பார்த்தும் ஒன்றும் பலனில்லை என்று ஆனதும் சரளா ஒருவாறு மகளுடன் அவளுடைய ஊருக்குக் கிளம்பினாள்,

அப்போதும். “நீருக் கண்ணன் வந்ததும் ஒரு ஃபோன் போடு அண்ணா, அவனுக்குப் பிடித்தமான முந்திரிக் கொத்து செய்து எடுத்து வந்து கொடுத்துவிட்டுப் போகிறேன், “ என்று ஒரு போடு போட்டுவிட்டுத்தான் போனாள்,

ஆனால் அவள் அறியாதது ஒன்று உண்டு!

கண்ணில் படும் போதெல்லாம் தன் மகளுடைய வருங்காலக் கணவன் என்று முடிவாகிவிட்ட மாதிரியே அத்தை பேசுவதும். அந்த உரிமையை நிலை நாட்டுவது போல மகளை அழைத்து அவன் மேல் தள்ளாத குறையாக நடப்பதும் நிரஞ்சனுக்கு ஆத்திரத்தோடு அருவருப்பாகவும் இருந்தது,

கூடவே தந்தை எதையாவது முடிவெடுத்து அதை அவனிடம் நேரடியாகச் சொல்லி விடக் கூடாதே என்ற பயம் வேறு,

எனவே. மிகவும் தாமதமாக வீடு திரும்பியதோடு காரைச் சற்றுத் தள்ளி நிறுத்திவிட்டு கால் நடையாகச் சத்தமின்றி வீட்டுக்குள் சென்றான் அவன்,

அப்படி ஒளிந்து மறைந்து சென்றதாலேயே அவனது அறை வாயிலில் சரளாவை அவன் பார்க்க நேர்ந்தது,

அடங்கிய குரலில் அவள் பேசுவதும் தெரிந்தது,

இவள் இங்கே என்ன செய்கிறாள். யாருடன் பேசுகிறாள் என்று இன்னமும் மறைந்து நின்று கவனித்த அவனுக்கு அத்தையின் நடவடிக்கை அதிர்ச்சியை அளித்தது,

அவளது திட்டத்துக்கு உடந்தையாகச் செயல்பட்ட அந்தப் பெண் ஐஸ்வர்யாவை  நினைக்கையில் வாந்தியே வரும்போல இருந்தது,

இவ்வளவுக்குப் போகிறவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள், என்ன பொய் சொல்லவும் அஞ்ச மாட்டார்கள்,

அவர்களது பொய்களைத் தந்தை ஏற்றுவிட்டால் வாழ்க்கை நரகமாகிப் போகும்,

இதிலிருந்து தப்ப ஒரே வழி. கொஞ்ச நாள் கண் மறைவாக இருப்பதுதான்,

அத்தை கிளம்பி போன பிறகு திரும்பி வந்து. அப்பாவைச் சரிக்கட்ட வேண்டும், பக்கத்திலேயே அத்தையம்மாள் இல்லை என்றால் அது எளிதே!

ஓரளவு திட்டம் மனதில் தயாரானதும். பாக்கெட்டுகளைத் தடவிப் பார்த்தாள்,

அத்தை மகளுக்குப் பயந்து அறையில் வைக்காமல் எடுத்து வந்த அவனது கார்டுகள் எல்லாம் பர்சிலேயே இருந்தன,  லாப்டாப் காரில் இருந்தது, இவைகளே  போதும்!

வந்தது போலவே சத்தமின்றி வீட்டை விட்டு வெளியேறிக் காரை அடைந்தான், கிளம்பி விட்டான்,

நண்பனோடு வெளியூர் போவதாக. மறுநாள் கிருபாகரனுக்கு ஒரு மெயில் மட்டுமே வந்தது, தொடங்க இருக்கும் தொழில் தொடர்பாகத் தமிழ்நாடு முழுவதும் சுற்றி ஆய்வு நடத்தப் போவதால் திரும்பி வர நாளாகும் என்று முடித்திருந்தான்,

“செய்யட்டும், செய்யட்டும், இந்த வயதில்தான் இப்படிச் சுற்ற முடியும், எப்படியோ தொடங்குகிற தொழிலை நல்லபடியாகச் செய்தால் சரி,” என்றார் தந்தை!

மேலே ஒன்றும் சொல்ல மாட்டாமல் சரளாவும் கிளம்பிப் போனாள்!

நிரஞ்சன் முதலில் இலக்கற்றுதான் சுற்றினான்,

தப்பு செய்கிறவர்களுக்குப் பயந்து கிட்டத்தட்டத் தோற்றவன் மாதிரி. அவனல்லவா. தன் சொந்த வீட்டை விட்டு  வெளியேறி வந்திருக்கிறான் என்று அவமானமும் வெறுப்புமாக இருந்தது, தன்னிடமே எரிச்சல்!

அந்த எரிச்சலில். யார் என்ன பேசினாலும் அவனுக்கு அதை மறுத்தே பேசத் தோன்றியது, மற்ற நட்பினர் நேரடியாக மறுத்துப் பேசாமல் அமைதி காத்தாலும். தான் இப்போது யாருக்கும் இனிய

தோழன் அல்ல என்பது, நிரஞ்சனுக்கு நன்றாகவே தெரிந்தது,

“என்னவோ எனக்கு மூடு சரியில்லைம்மா, கொஞ்ச நாள் தனியாகக் கிடக்க வேண்டும், அதுவரை எந்த விதமான தொய்வும் இல்லாமல் நீங்கள் மூன்று பேரும். தொழில் பற்றிய மற்ற விவரங்களைத் திரட்டுங்கள், சென்னையில் வைத்தே நானும் ஒரு ப்ராஜெக்ட் தயார் பண்ணிக் கொண்டிருந்தேன், அதையும் கையில் வைத்துக் கொள்ளுங்கள், எதையும் மாற்றுவது சேர்ப்பது பற்றித் தயங்க வேண்டாம், கொஞ்ச நாளில் நானே உங்களோடு தொடர்பு கொள்ளுகிறேன், அதன்பின் ஒரு நல்ல நாளாகப் பார்த்து. வேலையைத் தொடங்கிவிடலாம்,” என்றுரைத்து அவர்களிடம் இருந்தும் விடை பெற்றுப் பிரிந்து சென்றான்,

அத்தையையும் அவளுடைய மகளையும் நினைக்கும் போதெல்லாம் மனம் குமுறிக் கொதித்தது, இந்த மாதிரிப் பெண்களைத் தவிர்ப்பதற்காகத்தான் பலர் சாமியார்கள் ஆனார்கள் போல என்று எண்ணினான்,

மறக்க விரும்பினாலும் குரங்கை நினைக்காமல் மருந்து குடிக்கிற கதையாக அவர்களது நினைவு வந்துகொண்டே இருந்தது,

இளவரசனாகக் கோலோச்சும் அவனது சொந்த வீட்டை விட்டல்லவா விரட்டி இருக்கிறார்கள், சொல்லாமல் கொள்ளாமல் யாரையாவது திருமணம் செய்துகொண்டு போய் நிற்பதுதான் அவர்களுக்குச் சரியான தண்டனை,

ஆனால் அதிலும் ஒரு சிக்கல், அப்படி அவன் மணப்பதானாலும் யாரோ ஒரு பெண்ணைத்தானே மணந்தாக வேண்டும்!

அவன் அம்மா தவிர அனைத்துப் பெண்களுமே ராட்சசிகள் ஆயிற்றே!

கசப்பும் வெறுப்புமாக அவன் இப்படிச் சுற்றிக் கொண்டிருந்தபோதுதான் நிரஞ்சன் ஒரு தேவதையைக் கண்டான்!

ராட்சசர்கள் இருந்தால் தேவதைகளும் இருப்பார்கள்தானே?

வேறு எண்ணமே அவனுக்குத் தோன்றவில்லை,

# அத்தியாயம் -3

முதல் தடவையாக நிரஞ்சன் அவளைப் பார்த்தபோது சாலையின் நடுவே கீழே விழுந்துவிட்ட ஒரு பள்ளிக் குழந்தையை அவள் தூக்கி விட்டுக் கொண்டிருந்தாள்,

சும்மாத் தூக்கிவிட்டது மட்டுமல்ல, பள்ளியில் இருந்து வீட்டுக்குக் கூட்டிப் போகும் பணியைச் செய்யும் ஆயா சாலையின் நடுவில் கையில் பிடித்திருந்த மற்றபிள்ளைகளை விடவும் முடியாமல். விழுந்த சின்னச் சிறுமிக்கு உதவி செய்யவும் முடியாமல் திணறித் தவிக்க. அவளிடம் கனிவானஒரு சைகையோடு. விழுந்த சிறுமியின் தோள் பை. சாப்பாட்டுப் பாத்திரம். தண்ணீர் பாட்டில் முதலிய பொருட்களை வேகமாகத் திரட்டி எடுத்து அவளையும் கையில் பிடித்துச் சாலையைக் கடந்து சென்று அந்த ஆயாவிடம் ஒப்படைத்தாள்,

கண் கலங்க. “ரொம்ப டாங்க்சும்மா, காரும் பஸ்சுமா வருகிறதாலே  ரோட்டிலே குதிக்காதேன்னாக்க இந்தப் பசங்க கேட்டாத்தானே? என்னமாச்சும் ஆகியிருந்தாக்க என் கெதி என்னாயிருக்கும்!” என்று பதட்டத்துடன் நன்றி சொன்னாள் ஆயா,

“ஒன்றும் ஆகாது ஆயா, எல்லோரும் மனிதர்கள்தானே? அவரவருக்கு என்ன அவசரமோ? இறங்கித் தூக்கி விடாவிட்டாலும். வாகனங்களை ஒதுக்கித்தானே ஓட்டிப் போனார்கள், ஆனால். நீங்களும் இன்னும் சற்றுக் கவனமாக இருங்கள், சின்னப் பிள்ளைகள் பாருங்கள்!” என்றவள் “பை!” என்று குழந்தைகளிடம் கையாட்டிவிட்டு விரைந்து சென்றுவிட்டாள்,

தேவதையேதான்!

அவளே சொன்னது போல வாகன ஓட்டிகள் மட்டுமல்ல. மற்றவர்களும் ஒதுங்கித்தான் போனார்கள், ஆனால். விழுந்த குழந்தைக்கு உதவ யாரும் முன்வரவில்லை,

ஆனால் அவள். அந்த தேவதை நின்று சிறுமிக்கு உதவியதோடு. ஆயாவுக்கு ஒரு சின்னக் குட்டு வைக்காமலும் விடவில்லை!

அவளது கையைப் பிடித்துக் குலுக்கிப் பாராட்ட வேண்டும் போல. நிரஞ்சனின் கை பரபரத்தது,

ஆனால் சுற்றுமுற்றும் பார்த்தும் அவள் கண்ணிலேயே தென்படவில்லை!

அவசரமாகப் போய்விட்டாளே! வேறே ஏதேனும் வேலை இருக்குமோ? அல்லது இயல்பாகவே அவளுக்கு வேக நடையோ?

பெயர் தெரியாத அந்தப் பெண்ணின் நினைவு அவனுக்கு அடிக்கடி ஏற்பட்டது! அவன் அறிந்த குரங்குப் பெண்களுக்கு நேர் விரோதம்!

அவளை எப்படியாவது பார்த்துப் பாராட்ட வேண்டும்!

பார்த்துப் பாராட்டியே ஆக வேண்டும் என்று நிரஞ்சன் ஊரெங்கும் சுற்றிப் பார்த்தான் ஆனால் அவளைக் காணவே முடியவில்லை,

என்ன இது? யார் என்றே தெரியாத ஒரு பெண்ணை இப்படித் தேடி அலைகிறோமே!

விட்டால் பழைய கதை ஒன்றில் வரும் அரச குமாரனைப் போலச் சித்திரத்தில் இருந்த பெண்ணைப் பார்த்து. “பெண்ணே பூச்சைண்டைக் கொடு” என்று பிதற்றத் தொடங்கி விடுவோமோ என்றுகூட அவனுக்குத் தோன்றலாயிற்று,

முதலில் அவள் இந்த ஊர்க்காரியே அல்லவோ என்னவோ? வந்த வேலை முடிந்து அவளது சொந்த ஊருக்கே அவள் போயிருக்கலாம், ஊரிலேயே இல்லாத ஒருத்தியைத் தேடி இரண்டு நாட்களாக அலைந்து கொண்டு என்ன முட்டாள்த்தனம்?

தன்னைத்தானே கடிந்துகொண்டு நிரஞ்சன் இயல்பாக நடந்துகொள்ள முயன்றான், அவனுக்குத் தேவை மன அமைதி, மாறுதல், புதிய சூழ்நிலை, மனதைக் கவரும் காட்சிகள்!

அந்த ஊர்க் குன்றுக் கோயில் வரலாற்றுச் சிறப்புடையது என்றார்கள், குன்றில் ஏறிப் பார்த்தால். சூழ்ந்து ஓடும் நதியும். பசுமையான நிலப் பரப்பும் மகிழ்ச்சியை அளிக்கும் என்று அவன் தங்கியிருந்த ஹோட்டலில் சொன்னார்கள்,

சரிதான் என்று கிளம்பிப் போனால். அந்தக் கோயிலில்தான் அவன் அவளை மீன்டும் பார்த்தான்,

அதுவும் ஊருக்கு உதவும் அவளுக்கே உதவி செய்யும்படியான நிலையில்!

அழகான சித்திரங்களைப் பார்த்தவாறே கோயிலுள் சுற்றி வந்தவன். முதலில் அந்த “அவள்” என்று கூடக் காணவில்லை, எப்படியோ கால் வழுக்கி. ஓரளவு மல்லாந்த நிலையில் ஒரு பெண் அவள் விழுந்து கொண்டிருந்தாள்,

மின்னலாய்ப் பாய்ந்து அவளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு பார்த்தால் ................................................................அந்த “அவளே”!

வியப்புடன் பார்த்தபடி அவன் நிற்க. சுதாரித்துக்கொண்டு விலகி நின்று நன்றி உரைத்தவள். அவன் முகத்தில் இருந்த

ஆச்சரியத்தைப் பார்த்துக் குழப்பம் அடைந்தாள்,

"வவந்து ...சார். உங்களை நான் அறிந்திருக்க வேண்டுமோ?" என்று தயக்கத்துடன் வினவினாள்,

இந்தக் கேள்வியின் காரணம் புரிந்து அவனுக்குச் சிரிப்பு வந்தது, வாயைப் பிளந்துகொண்டு நின்றானே!

அழகாக முறுவலித்து. "அதாவது ... நாம் முன்பின் அறிமுகம் ஆனவர்களா என்று கேட்கிறீர்கள், அதுதானே? பதில் .............. ஏதோ திரைப்படத்தில் வருமே. அது போல ஆ ...மாம். ஆனால் இல்லை என்றுதான் கூற வேண்டும்," என்றான் அவன்,

அவளது முகம் சுருங்கவும் அவன் அவசரமாக விளக்கம் கொடுத்தான், "தப்பாக எண்ண வேண்டாம், இரண்டு நாட்கள் முன்னதாக ஒரு பச்சை நிறச் சீருடை அணிந்த பள்ளிச் சிறுமி கீழே விழுந்தபோது உதவியதைப் பார்த்து மகிழ்ந்தேன், அதனால் எனக்குத் தெரிந்த முகம், ஆனால் கதாநாயகிக்கு சற்றுத் தள்ளி நின்று வாய் பிளந்து பார்த்தவனின் நினைவிருக்க வாய்ப்பில்லை, அதுவும் ஜாடையாக அந்த ஆயாவுக்கு ஒரு டோஸ் விட்டீர்களே. நான் உங்கள் விசிறியே ஆகிவிட்டேன்!"

விவரம் புரிய அவளும் புன்னகை செய்தாள், "அந்த ஆயா மேல் எனக்குக் கோபமே, அந்தக் குழந்தை க்ஷூவுக்குச் சரியாக லேஸ் கட்டாமல் அவசரமாக ஓடி வந்ததில் விழுந்திருக்கிறாள், பிள்ளைகளை வீட்டுக்குக் கூட்டி வரப் பணம் வாங்குகிறவள் அதெல்லாம் பார்க்க வேண்டாமா? அப்படி என்ன அவசரமாகக் கூட்டி வருவது? அதுதான்,"

"ஓ. இப்படி ஒரு காரணம் இருக்கிறதா? அதற்கு இன்னும் நன்றாகவே திட்டியிருக்கலாமே!"

"திட்டலாம், அப்புறம் அந்தப் பிள்ளைகள் ஆயாவைக் கொஞ்சமும் மதிக்க மாட்டார்கள், அது இன்னமும் ஆபத்துதானே?"

கண்கள் விரிய. " பிரமாதம்! அந்தச் சில வினாடிகளுக்குள் இவ்வளவு யோசித்திருக்கிறீர்களே! ரொம்பப் பிரமாதம்!" என்று இரண்டு நாட்களாக மனம் விரும்பியது போலப் பெரிதாகப் பாராட்டினான் நிரஞ்சன்,

"என்ன பெரிய பிரமாதம்? இன்று நானே விழுந்து வைத்திருக்கிறேனே!" என்றாள் அவள் சிறு சலிப்புடன்,

"என்ன செய்வது? மற்றவர்களுக்கும் உதவி செய்ய வாய்ப்புக் கிடைக்க வேண்டும் அல்லவா?" என்றான் புன்னகையோடு அவன்,

பதிலாக லேசாக முறுவலித்தபோதும். அவளது கண்கள்

இங்குமங்கும் தேடுவதைக் கண்டு தூணுக்கு அருகே அவனது பார்வையில் படக் கூடிய இடத்தில் விழுந்து கிடந்த மொபைலை எடுத்து அவளிடம் நீட்டினான்,

கண்கள் மலர "இரண்டாவது வாய்ப்பு!" என்றாள் அவள்,

இருவருமாகச் சேர்ந்து சிரித்த பின். "ஊருக்குப் புதிதா?" என்றுவினவினாள் அவள்,

"ம்! புத்தம் புதிது! நீங்களும் அப்படித்தானா? விடுமுறை போல? "

"விடுமுறை ... ? விடுமுறை என்றும் சொல்லலாம், அப்படி இல்லை என்றும் சொல்லலாம்!"

கிட்டத்தட்ட அவனைப் போலவே அவள் சொன்ன விதத்தில்அவனுக்குச் சிரிப்பு வந்தது,

"இப்போதும் உங்கள் முறைதான் விளக்கம் தருவது!"

மறுக்காமல் அவளும் சொன்னாள், "என் பாஸ் நம் கலைகள் பற்றி. முக்கியமாக பழைய கோயில்களின் அமைப்பு. காலம். கலைச் சிறப்புகள் பற்றிய ஆய்வாளர், ஓர் ஆராய்ச்சியைச் சமர்ப்பிப்பது பற்றி டெல்லிக்குப் போயிருக்கிறார், வரும்வரை ஊதியத்தோடு விடுமுறை, விடுமுறையை சந்தோஷமாகக் கழிப்பதோடு. அங்கங்கே பழைய கோயில்களில் ஓரளவு ஆராய்ச்சியும் செய்து குறிப்பெடுத்து வைக்க வேண்டும், அவ்வளவே,"

"அவ்வளவேதானா? ஆனால் உங்கள் பாஸ் ரொம்ப கிரேட்!" என்றான் அவன்,

"நிச்சயமாக கிரேட்தான், அவரது கட்டுரைகளுக்கு நிறையப் பரிசுகள் கிடைத்திருக்கின்றன," என்றாள் அவள்,

"நான் அதற்காகச் சொல்லவில்லை,"

"பின்னே?"

அவனோடு சேர்ந்து நடந்தபடியே பேசியவள் நின்று கேள்வி கேட்டாள்,

"சொன்னால் கோபப்படக் கூடாது," என்றான் அவனும் நின்று,

"இல்லை, சொல்லுங்கள்,"

"உங்கள் பாஸ் இப்படி விடுமுறையிலும் வேலை வாங்கியதால்தானே நீங்கள் இந்தக் கோயிலுக்கு வந்தீர்கள்? கூரையில் வரைந்திருக்கும் சித்திரங்களைப் மொபைலில் படம் எடுக்க முயன்று நீங்கள் கீழே விழுந்து , உங்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பை எனக்குத் தந்தவர் அவர்தானே? அதுதான் கிரேட்

என்றேன்,” என்று விளக்கி முடித்தான் அவன்,

துணிந்து சொல்லிவிட்டவனுக்கு உள்ளூர சிறு உதைப்புதான், முகஸ்துதியா என்று கோபப்பட்டுவிட்டால்? முதலிலேயே ஒரு தரம் முகம் சுளித்திருக்கிறாள்!

ஆனால் அவன் அஞ்சியதற்கு மாறாக அவள் கலீரென்று நகைத்தாள்,

“அவர் மட்டும்தான் கிரேட்டா? இந்தக் கோயில் தரையைப் பண்படுத்துவதாக நினைத்து பழைய கருங்கல்லைப் பேர்த்து எடுத்துவிட்டு. வழுவழுப்பாக இந்த மார்பிளைப் போட்டு நான் வழுக்கி விழும்படி செய்த கோயில் நிர்வாகம் கிரேட் இல்லையா?”

“பாராட்டுகிறீர்களா? திட்டுகிறீர்களா?”

“சார் ... “

“என் பெயர் நிரஞ்சன்,”

மேலே நடக்கும்படி சைகை செய்துவிட்டு அவள் சொன்னாள், “என் பெயர் மகதி, நிரஞ்சன் சார். நம் ஆலயங்களின் பழைய கருங்கல் தளங்களில் சிறு மேடு பள்ளங்கள் இருக்கும், அவைகளில் நடக்கும்போது கால் வழுக்காது என்பதோடு. “அக்குபிரஷர்” முறையில் நம் பாதத்துக்கும் மிகவும் நல்லதாம்! படித்தேன்,”

“ஆனால் கருங்கல் தரையில் விழுந்து வைத்தால் மண்டை உடைந்து போகாதா?”

“விழவே வாய்ப்பில்லாதபோது விழுந்து மண்டை உடைவது பற்றி யோசிப்பானேன்?”

பேசியபடியே இருவரும் சேர்ந்து கோயிலைச் சுற்றினார்கள்,

அங்கங்கே நின்று சிற்பங்கள். சித்திரங்களின் அழகை ரசித்தார்கள்,

மகதி தங்கியிருந்தது. கோயில் வளாகத்தைச் சேர்ந்த ஒரு விடுதியில்,

அவன். அந்த ஊரில் ஒரு பெரிய ஹோட்டலில்,

இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு எதுவும் யாருக்குமில்லை,

அந்த ஊரில் இன்னும் சில பழைய கோயில்கள். ரொம்பவும் பழையவை இருந்தன, மிகவும் சிதிலமான நிலையில் இருந்த கோயிலும் சிலைகளும் இருவருக்குமே ஆத்திரத்தைத் தந்தன,

“சுத்த மோசம் இந்த அரசர்கள், அந்தச் சமயத்தில் பெரிதாகக்

கட்டிப் பெருமைப் பட்டிருப்பார்கள், தொடர்ந்து அந்தக் கோயிலைப் பராமரிக்க ஏற்பாடு செய்ய வேண்டாமா? இதில் இன்னும் கொடு "ரம் வேறு, அதேபோல வேறு எந்த மன்னனுக்கும் செய்து கொடுத்து விடக் கூடாது என்று விரலை வெட்டி விடுவார்களாமே!" என்றான் நிரஞ்சன்,

"அது கொடுமைதான், ஆனால் அதற்கு ஈடாகப் பல தலைமுறைகளுக்குத் தேவையான பொருளையும் அந்தச் சிற்பிகளுக்கு அந்த மன்னர்கள் கொடுத்திருக்கிறார்கள். நிரஞ்சன், அந்தச் சிற்பிகளும் வரப் போவதை அறிந்தே. தங்கள் முழுத் திறமையையும் வெளிக்காட்டியே கோயில்களை அமைத்திருக்கிறார்கள், தன் பெயர் நிலைக்கும் என்கிற பெருமிதமும். எண்ணிப் பார்க்க முடியாத பெரும் செல்வமும் விரும்பியே அந்த நிலையை அவர்கள் ஏற்குமாறு செய்திருக்கின்றன என்பது என் ஊகம்," என்றாள் மகதி,

"என்னவோ? இப்படிப் பராமரிப்பில்லாமல் பாழடைய விடுவதற்கு அந்த மன்னர்கள் இந்தக் கோயில்களைக் கட்டாமலே இருந்திருக்கலாம், " என்றான் அவன்,

"அப்படி அசட்டையாக எந்த அரசனும் விட்டதில்லை. நிரஞ்சன், ஒரு கோயிலை அமைத்தால் அதன் பராமரிப்புக்காக நிறைய ஏற்பாடுகளை அந்த மன்னர்கள் செய்துதான் இருக்கிறார்கள், அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள், கோயிலுக்கென்று சொத்துகள் கொடுத்திருக்கிறார்கள், நிவந்தங்கள். மானியங்கள் ...அவை பற்றிக் கூறும் கல்வெட்டுகளும் செப்புத் தகடுகளும் இன்னமும் இருக்கின்றன, ஆனால் அந்தச் சொத்துகளைத்தான் இப்போது காணவில்லை, நாளாக ஆக. நம் மக்களுக்குக் கடவுளிடம் இருந்த பக்தி குறைந்து பேராசை பேயாய்ப் பிடித்து விட்டது, மனச்சாட்சியே இல்லாமல் அந்தச் சொத்துக்களை எல்லாம் சூறையாடி விட்டார்கள்!" என்றாள் மகதி வருத்தத்துடன்,

கீழ்க்கண்ணால் பார்த்துவிட்டு. "மகதி ப்ளீஸ்" என்றான் அவன் கெஞ்சுதலாக,

"எஎன்ன?" என்றாள் அவள் புரியாமல்,

"எப்போதோ நடந்தது, யார் யாரோ என்னென்ன காரணங்களுக்காக இந்தத் தப்புத் தவறுகளைச் செய்தார்களோ? அதற்காக இந்தத் தாமரை முகம் வாடினால் எனக்குப் பிடிக்கவில்லைம்மா, சற்ற முன் கோயில் தூண்களில் இருந்த சிற்பங்களின் யோகா போஸ் பற்றிக் கண்கள் பளபளக்க என்ன ஆர்வமாய் விவரித்தாய்! கண்ணைச் சிமிட்டக் கூட முடியாமல் எவ்வளவு அழகாக இருந்தாய். தெரியுமா?" என்று ரசனையோடு

விவரித்தான் நிரஞ்சன்,

அவள் முகம் அழகாக இருந்ததாமா? அவன் கண் சிமிட்டாமல் ரசித்தானாமா?

தன்னையறியாமல் முகம் சூடேறிச் சிவந்தது அவளுக்கு,

கருத்தடர்ந்த இமைகள் வண்டுகளாய்ப் படபடக்க. செய்வது அறியாமல் திகைத்தாள் அவள், அவளுக்கு இது புது அனுபவம்!

“ஹையோ. இது இன்னமும் அழகு!” என்று பரவசப் பட்டான் அவன்,

“எஎன்னிடம் இப்படி யா ...ரும் பேசியது இல்லை ” என்று தடுமாறியவள் இன்னமும் திகைத்தாள், “இஇப்படி யாருடனும் நான் நின்று பேசியதும் இ ...ல்லை ...”

“அது நன்றாகவே தெரிகிறது!” என்று விரலை நீட்டி அவளது கன்னத்தைத் தொட்டான் நிரஞ்சன்,

கதகதவென்று சூடு தெரிந்தது,

“உன்னைப் பார்க்கப் போகிறோம் என்றதுமே என் மகளுக்கு வெட்கத்தில் கன்னம் சிவந்துவிட்டது!” என்று சரளா சொல்லக் கன்னங்களில் ரூ”ஜைத் தடவிக்கொண்டு வந்து நிற்கும் ஐஸ்வர்யாவின் நினைவு வந்தது அவனுக்கு,

மற்ற விரல்களும் சேர்ந்து அவளது கன்னங்களை வருடின,

நெஞ்சு படபடத்தது மகதிக்கு, அங்கிருந்து ஓடி விட வேண்டும் போலத் தோன்றியபோதும். கால்கள் வேரோடிவிட்டவை போல அசைய மறுத்தன,

கூட்டத்தில் செல்லும்போது. எங்கேனும் சேர்ந்து அமர்ந்திருக்கும்போது ஆண்கள் உடல் பட நேர்ந்தால் மகதிக்கு எதுவுமே தோன்றியது இல்லை, ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடே இதுவரை அவளுக்குத் தெரிந்ததில்லை,

ஆனால் இப்போது அவளுக்கு என்னவோ செய்தது, மூச்சுத் தடைப்பட்டது, அவ்வப்போது பெரிய மூச்சுகளை எடுக்க நேர்ந்தது, காலை எடுத்து வைத்தால் விழுந்து விடுவோமோ என்பது போல இருந்தது,

அவளது விரிந்த கண்கள் அவனிடம் என்ன உணர்த்தினவோ?

அவளது கன்னத்தை லேசாகத் தட்டி விலகிய விரல்கள். அவளது கையைப் பற்றின, “வா. போகலாம்,” என்றான் புன்னகையோடு,

அவனது விரல்களின் பலத்தில் நடந்தவளுக்குக் காற்றில் மிதப்பது போல இருந்தது,

அதன் பிறகு இருவருக்கும் அடுத்தவரை எப்போது பார்ப்போம் என்று தவிப்பாக இருந்தது, காலையில் சந்தித்தால். சூரியன் மறைந்த பிறகுதான் மகதியை அவளது அறையில் கொண்டு விட்டுப் போனான் நிரஞ்சன்,

எங்கே சுற்றினார்கள். என்ன பேசினார்கள் என்று கேட்டால் இருவருக்குமே தெளிவாகப் பதில் சொல்ல முடியாதுதான்,

ஆனால் ஏழெட்டு நாட்கள் வெகு இனிமையாகக் கழிந்தன, அந்தக் குன்றுப் பகுதியில் அவர்கள் கால் படாத இடமே இல்லை என்று சொல்லலாம்,

இப்படிச் சுற்றித் திரிந்தபோது ஒன்று நடந்தது, குடி மயக்கத்தில் இருந்த இருவர் அவர்களை வழி மறித்தனர்,

“டேய் அவளை எங்க கிட்டே விட்டுவிட்டு ஓடுடா ...” என்று குழறினர்,

சொன்னதோடு நில்லாமல் ஒருவன் மகதியின் கையையும் பற்றவே. நிரஞ்சன் தன்னை மறந்தான்,

இருவரையும் அவன் அடித்து உதைத்ததில் அவர்களுக்குத் தப்பாக எதுவும் நேர்ந்து விடுமோ என்று பயந்து மகதியே குறுக்கிட்டு அவனைத் தடுக்கும்படி ஆயிற்று,

ஆனால். எழ முடியாமல் கிடந்த அப்போதும். “எத்தனை நாள்டி இவன்? அப்பறமா ஒரு நாள் உன்னை என்ன செய்கிறேன் பார் ... “ என்று ஒருவன் அரைகுறை வார்த்தைகளால் மிரட்டினான்,

மீண்டும் அடிக்கப் போனவனைப் பிடித்து இழுத்து வந்தாள் மகதி,

“இப்படித் தனியான இடத்தில் நாம் அதிக நேரம் சுற்றியிருக்கக் கூடாது, இனி எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்,” என்று அவள் கூறியதற்கு அவன் பதிலே சொல்லவில்லை,

அவளது அறையில் அவளை விட்டுவிட்டு. “உள்ளே பூட்டிக்கொள் கவனமாக இரு,” என்று எச்சரித்துவிட்டு ஹோட்டல் அறைக்குத் திரும்பி வந்தால் அன்று அவனுக்குத் தூக்கமே வரவில்லை, படுக்கவே மனம் வரவில்லை,

அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டே இருந்தவனுக்குக் கடைசியாக ஒரு யோசனை தோன்றியது,

யோசிக்க யோசிக்க அதுவே சிறந்த திட்டம் என்று எண்ணினான் அவன்,

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அல்லவா அடிக்கப் போகிறான்!

அந்தக் குடிகாரன்கள் மாதிரி மனிதர்கள் இடையே மகதியை விட்டுவிட்டுப் போக அவனால் முடியாது, சிறகு முளைக்காத பறவைக் குஞ்சு போன்றவள் அவள், எப்போது அவளுக்கு என்ன ஆகுமோ என்று அஞ்சிக்கொண்டே வாழ்வது அவனுக்கு மிகவும் கடினம்,

இது ஒரு பிரச்சினை என்றால். அதே சமயம். அவனும் வீட்டுக்குத் தகவலே சொல்லாமல் இப்படிச் சுற்றிக்கொண்டே இருக்க முடியாது, தந்தையிடம் அவன் சொன்ன ஒரு மாதகால அவகாசம் விரைவிலே முடியப் போகிறது,

ஆனால் வீட்டுப் பக்கம் தலையைக் காட்டினால் போதும், மோப்பம் பிடித்துக்கொண்டு அத்தையம்மாள் மகளோடு வந்து நிற்பாள், அதற்காகவே யாராவது வெளி வேலைக்காரருக்கு அத்தை லஞ்சம் கொடுத்து வைத்திருக்கிறாளோ என்ற சந்தேகம் அவனுக்கு எப்போதுமே உண்டு,

அப்புறம் பழைய போராட்டம்தான்! அதுவும் வெற்றிக்காக எந்த அளவுக்கும் இறங்கக் கூடியவர்களோடு போராட வேண்டும்,

ஆனால் இப்போது இதற்கு ஒரு தீர்வு கிடைத்திருந்தது!

நிரஞ்சன் தனியனாக வீட்டுக்குப் போனால்தானே இந்தப் பிரச்சினை? ஒரு பெண்ணை மணந்து. மனைவியாக அவளைக் கூட்டிப் போனால் அத்தையின் நாடகங்களால் என்ன பயன்?

அந்தப் பெண் யாரோ ஒருத்தியும் அல்ல!

இந்த எட்டு நாட்களாக யாரைக் கண்ணால் பார்த்தும். பாராத நேரங்களில் நெஞ்சுக்குள் நிறுத்தியும் இடை விடாமல் ரசித்துக் கொண்டிருக்கிறானோ. அந்த மகதிதான்!

ஒரு பெண்ணை அறிய எட்டு நாட்கள் போதுமா என்று கேட்டால் அவனிடம் பதில் தயாராக இருந்தது, ராமனுக்கும் சீதைக்கும் “கண்ணோடு கண்ணிணை நோக்கிய” அந்த ஒரு வினாடியே போதுமானதாக இருக்கவில்லையா?

அத்தோடு மகதி எப்பேர்ப்பட்ட பெண்! இத்தனை நாட்களில் ஒரு தரம் கூட. அவனை முகம் சுளிக்க வைக்கவில்லையே! என்ன அற்புதமான பெண் அவள்!

இதுவரை அணைத்து வைத்திருந்த மொபைலை ஸ்விட்ச் ஆன் செய்து தாயாருடன் தொடர்பு கொண்டான் நிரஞ்சன்,

# அத்தியாயம் -4

பொதுவாகத் தந்தை கிருபாகரன் அலுவலுக்குக் கிளம்பியதும் உடனடி வேலைகளை முடித்துக் கொண்டு பத்திரிகை படிப்பது. டீவி பார்ப்பது என்று ஓர் அரை மணி நேரம் ஓய்வாக உட்கார்ந்திருப்பது பானுமதியின் வழக்கம், கிட்டத்தட்ட அந்த நேரம் பார்த்து நிரஞ்சன் தாயாரை அழைத்தான்,

ஆனால் எடுத்ததுமே ஒரு ஹாய் கூடச் சொல்லாமல். “அம்மா எதுவும் காட்டிக் கொள்ளாமல் வெறுமனே. உம். உம் என்று நான் சொல்லப் போவதைக் குறுக்கிடாமல் கேளுங்கள் அம்மா!” என்று எச்சரித்துவிட்டு நேரடியாக விஷயத்துக்கு வந்தான்,

“அம்மா. இப்போது நான் என் திருமணத்தையே முடித்துக்கொண்டு வந்தேன் என்றால். வேறு வழியின்றி அப்பா ஒத்துக் கொள்ளுவார், எப்படியும். இவள்தான் மருமகள் என்று ஒருத்தியைக் காட்டினேன் என்றால் அவளை மறுத்து விரட்டும் அளவுக்கு அப்பா கொடியவர் அல்ல,

“அத்தையும். அவர்களது ஆர்ப்பாட்டத்தால் பயன் இல்லை என்று ஒதுங்கி விடுவார்கள், இரண்டாம் தாரத்துக்குச் சொத்தில் ஓர் உரிமையும் கிடையாது என்று அவர்களுக்கு நன்றாகவே தெரியும், எனவே அத்தை பிரச்சினையும் ஓய்ந்து நமக்கு நிம்மதி கிடைக்கும்,” என்று தன் யோசனையைப் பெற்றவளுக்குத் தெரிவித்தான்,

“சுற்றிலும் யாரும் இல்லை அதனால் நானும் சற்றுப் பேசலாம் என்று நினைக்கிறேன், நீ சொல்வதைப் பார்த்தால் பொருத்தமான. உனக்குப் பிடித்தமான ஒரு பெண்ணைப் பார்த்துவிட்டாய் என்று தெரிகிறது, கொஞ்சம் அதிர்ச்சிதான் என்றாலும். சந்தோஷமாகவே இருக்கிறது, ஆனால். உன் திருமணத்தை நான் பார்க்க வழியில்லை போல இருக்கிறதே என்பதுதான் .......” என்று பானுமதி முடிக்குமுன் மகன் இடைமறித்தான்,

“அதை விடுங்கள் அம்மா! அதுதான். தங்கை திருமணத்தை நன்றாக நடத்திப் பார்த்தாகி விட்டதே! அதில் ஒரேயடியாக அலைந்துவிட்டு. ஒரு மாதம் நீங்கள் உடம்பு சரியில்லாமல் கிடந்தது எனக்கு ரொம்ப நன்றாக நினைவிருக்கிறது!

“அத்தோடு அத்தையின் திருமணத் திட்டங்களும் தெரியும்தானே? என்னை விடவும் உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும்,

“மனைவி என்று ஒருத்தியோடு நான் வரவில்லை என்றால் ஏதாவது டிராமாப் போட்டுத் தன் திட்டத்தை நிறைவேற்ற

முயற்சிப்பார்கள், அத்தையின் விருப்பம் மட்டும் நிறைவேறிவிட்டால். அப்புறம் நமக்கு ... முக்கியமாக உங்களுக்கு விடிவே கிடையாது என்பதும் நினைவிருக்கட்டும்,

“எல்லாம் நிறைய யோசித்தேன் அம்மா, பேசாமல். திருமணத்தையே முடித்துக் கொண்டு வந்துவிடலாமே என்று கூட நினைத்தேன், ஆனால். உங்களுக்குத் தெரியாமல் செய்யக் கூடாது என்றுதான் விஷயத்தை உங்களிடம் சொல்லுகிறேன்,

“எப்படியும் என் மனைவி இவள்தான் என்பதில் மாற்றம் இல்லை! அதைச் சுமுகமாக. என் விருப்பப்படி நடக்க விடுங்கள்!

“அப்பாவிடம் திருமணம் செய்து கொள்ளப் போவதாக நான் ஃபோன் செய்ததாக மட்டும் சொல்லுங்கள், வேறு தகவல் தரவில்லை என்று சமாளித்துவிடுங்கள்... “

“பையா. அது நிஜமும்தானே? என் மருமகள் பற்றி அப்படி என்ன விவரங்களை விலாவாரியாக அளந்துவிட்டாயாம்? சொல்லு? அத்தோடு எங்கே. எப்போது என்பன போலக் கூட வேறு எந்தத் தகவலுமே கூடத் தரவில்லையே! இதில் அப்பாவிடம் நான் சமாளிப்பதற்கு என்ன இருக்கிறது?” என்று கேலியாகக் கேட்டு நகைத்தாள் அன்னை,

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு. “இதுவே உங்களுக்கு நல்லது அம்மா! ஆனால் மற்ற விவரங்கள் முடிவானதும். நேரம் மட்டும் சொல்லுகிறேன், அங்கிருந்தே மனதால் ஆசீர்வதியுங்கள்! இத்தோடு. இப்போது செல்லை அணைத்துவிடப் போகிறேன்! பை!” என்று பேச்சை முடித்தான் நிரஞ்சன்,

ஒரு பெரிய நல்ல முடிவை எடுத்துவிட்டதாக அவனுக்கு ஒரே சந்தோஷமாக இருந்தது,

திடுமெ அவனுக்குள் ஒரு கலக்கம்!

மகதியிடம் ஒன்றுமே கேட்கவில்லையே!

ஒருவேளை அவள் திருமணத்துக்கு மறுத்துவிட்டால்?

சேச்சே! அப்படியெல்லாம் இராது, அவள் மனதில் வேறு யாருமே இல்லை, நிச்சயமாகக் கிடையாது என்று அவனுக்குத் தெரியும், அப்படியிருக்க அவனை மணக்க மறுப்பானேன்?

ஆனால் ..... வேறு யாரிடமும் அவளுக்கு லயிப்பு இல்லைதான், ஆனால் அவனை மணந்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்? ஒருவேளை ... இன்றையப் பல பெண்களைப் போல. “எனக்குச் செய்கிற வேலைதான் முக்கியம், திருமணமாவது? இன்னொன்றாவது? என்று கூறிவிட்டாள் என்றால் என்ன செய்வது?

அன்று மகதியை நேரில் பார்க்கும்வரை நிரஞ்சனின் மனது அவனைக் குதறி எடுத்துவிட்டது!

பார்த்த பிறகு தயக்கமே தோன்றவில்லை, நேரடியாக விஷயத்துக்கு வந்து அவளிடம் சம்மதம் கேட்டான்,

“என்னது? திருமணமா?!” என்று ஆச்சரியப்பட்டபோதும். அவளும் பார்வையால் கூட மறுக்கவில்லை,

வியந்து நோக்கி. “இப்படி என்று நான் நினைத்ததில்லை, ஆனால். இந்த விடுமுறை முடிந்து நீங்கள் ஊருக்குப் போய்விட்டால் பார்க்கப் பேச முடியாமல் ரொம்பக் கஷ்டமாக இருக்குமே என்று கவலையாக இருந்தது, நல்லவேளை! உங்களுக்கு இப்படி ஓர் ஐடியா வந்தது!” என்றாள் மகிழ்ச்சியோடு,

“திருமணத்துக்கு உன் வகையில் யாரையேனும் அழைக்க வேண்டுமா?” என்று நிரஞ்சன் மகதியிடம் கேட்டான்,

யாரை அழைப்பது?

ஆய்வாளர் மட்டும்தான் அவளது நலம் கருதுகிறவர், ஆனால் அவர் இருப்பது டெல்லியில், அத்தோடு சூட்சுமன் ஈடுபட்டிருக்கும் வேலையின் நடுவே அவருடன் பேச முற்பட்டால் கூட எரிந்து விழக் கூடும்,

ஏற்கனவே மலைக் கோயில் பற்றிய ஒரு சின்ன விவரம் கேட்கப் போய் அவரிடம் திட்டு வாங்கி இருக்கிறாள்,

“உன் மண்டையில் மூளை கொஞ்சமேனும் இருந்தால் நீயே யோசித்து முடிவு செய், இல்லை. களிமண்தான் இருக்கிறது என்றால் எந்தப் பாறையிலாவது போய் முட்டிக்கொள், இதற்கு மேல் எதற்காகவும் என்னைக் கூப்பிடாதே, எல்லாம் நான் வந்த பிறகு பார்த்துக் கொள்கிறேன்,” என்று கடுமையாக வாங்கிக் கட்டியும் இருக்கிறாள்,

அவருக்கு இப்போது டெல்லி வேலைதான் முக்கியம், அவளது சொந்த விஷயமாகப் பேசினால் நிச்சயமாகத் திட்டுதான் விழும்!

அத்தோடு அவளது திருமணத்துக்கும் ஆய்வாளருக்கும் என்ன சம்பந்தம்? வேலையைவிட நேரும்போதுதான் வேறு ஆள் தயார் பண்ண வேண்டும்,

அடுத்தது பெரியப்பா குடும்பம், காதல் கீதல் என்று வந்து நிற்கக் கூடாது என்று பெரியம்மா ஏற்கனவே எச்சரித்து இருக்கிறாள், அதுவும் பெரியப்பா முன்னிலையிலேயே!

அவரும் அதை ஒப்புக் கொள்வது போலச் சும்மாதானே நின்றார்?

எனவே நிரஞ்சனின் கேள்விக்கு அரைப் புன்னகையோடு மறுப்பாகத் தலையை மட்டும் அசைத்துக் காட்டி முடித்துவிட்டாள்,

நிரஞ்சனும் நண்பர்களைக் கூடக் கூப்பிடுவதாக இல்லை,

நட்பு வட்டம் நல்லதுதான் என்றாலும். ஏதோ ஒரு வகையில் ...அவர்களுடைய குடும்பத்தினர் மூலமாகக் கூட தன் வீட்டுக்கு முன்னதாக விஷயம் கசிந்து விடக் கூடாது என்பது அவனது தீர்மானம்,

அத்தை குடும்பத்துக்கு ஒரு சிறு வாய்ப்புக் கூடக் கொடுக்கக் கூடாது என்பதுதான் மிக மிக முக்கியமாக அவனுக்குத் தோன்றியது, அம்மாவும் மகளும் எந்த அளவுக்கு இறங்குவார்கள் என்றுதான் அவன் ஏற்கனவே அறிந்து வைத்திருக்கிறானே!

அத்தோடு மகதியும் ஒப்புக் கொண்ட பிறகு. எந்தக் காரணம் கொண்டும் திருமணத்தைத் தள்ளிப் போட அவனுக்குச் சற்றும் மனமில்லை,

திருமணம் என்ன பெரிய காரியம்? எத்தனையோ படங்களில் வருகிற மாதிரி ஏதாவது ஒரு கோயிலில் மாலையை மாற்றிக்கொண்டு அம்மன் கழுத்துத் தாலியை வாங்கிக் கட்டி மகதி கழுத்தில் விட்டால் விஷயம் அவ்வளவுதானே என்று சற்று அலட்சியமாகவேதான் அவன் எண்ணினான்,

ஆனால் கொஞ்சம் பெரிதாக இருந்த கோயில்களில் போய்க் கேட்டால். ஒரு மாதம் முன்பாகவே மணமக்களின் பெயர்களைக் கொடுக்க வேண்டும் என்றார்கள், பதிவு பண்ண வேண்டுமாம், அந்த ஒரு மாதத்தில் அந்தத் திருமணத்துக்குச் சட்ட ரீதியாக எதிர்ப்பு ஏதும் வருகிறதா என்று தெரிந்துகொள்ள வேண்டுமாம்!

அந்த ஒரு மாத அவகாசம் இங்கே யாருக்கு இருக்கிறது?

சின்னக் கோயில்களிலும் கடவுள்தானே என்று தேடிச் சென்றால். குறிப்பிட்ட சிறிது நேரம் தவிரக் கோயிலைத் திறந்து வைக்கக் கூட ஆளைக் காணோம்!

கடைசியாகத் தங்கியிருந்த ஹோட்டல் பணியாள் மூலமாக நிரஞ்சன் ஓர் அர்ச்சகரைப் பிடித்தான், திருமணத்துக்குத் தேவையான பொருட்களை அவரையே வாங்கி வரச்சொல்லிப் பணத்தைக் கொடுத்துவிட்டு. இவர்கள் இருவரும் குளித்துப் புத்தாடை அணிந்து குறிப்பிட்ட நேரத்தில் கோயிலுக்குச் சென்றார்கள்,

மாற்றிக் கொள்ள இரு மாலைகளை வாங்கி வைத்திருந்த அர்ச்சகர். தாலியை வாங்காமல் காத்திருந்தார்,

பொதுவாக வெவ்வேறு இனத்தவர் வெவ்வேறு மாதிரியான

தாலி அணிவார்கள், இந்த ஜோடியும் அவர்கள் குடும்பத்துப் பழக்கப்படியான மாங்கல்யத்தைப் பார்த்து வாங்கி வருவார்கள் என்று எண்ணினாராம்,

அவர் யோசித்துதான் வாங்காமல் விட்டிருக்கிறார், ஆனால் இப்போது அது ஒரு பிரச்சினை ஆயிற்று!

எல்லா சினிமாவிலும். அம்மன் கழுத்தில் கிடக்கும் தாலியை எடுத்துக் கட்டி விடுவார்களே. அது போலச் செய்யலாம் என்று பார்த்தால். அது பிள்ளையார் கோயிலாக இருந்தது, பிள்ளையார் சன்னிதி மட்டும் உள்ள சின்னஞ் சிறு ..................................... கோயில்!

“பரவாயில்லை குருக்களே, மகதிக்கு நான் மோதிரம் போட்டு விடுகிறேன்,” என்று தன் மோதிரத்தைக் கழற்றி. நிரஞ்சன் மகதி கையில் அணிவித்தான்,

இருவரின் விரல்களுக்கும் இருந்த அளவு வேறுபாட்டில். மோதிரம் அவனது கையோடேயே வழுக்கிக்கொண்டு வந்தது, எல்லா விரலுக்குமே அவ்வளவு பெரிதாக இருந்தது!

“இப்போது என்ன செய்வது நிரஞ்சன்?” என்று விழித்தாள் மகதி, “மஞ்சளும் தாலிக் கயிறும் எங்காவது கிடைக்கிறதா என்று தேடிப் பார்ப்போமா?” என்று கேட்டாள்,

அதற்குக் காத்திருப்பதற்குத் தனக்கு அவகாசம் இல்லை என்றார் அர்ச்சகர்!

சற்று யோசித்துவிட்டு. நிரஞ்சன் ஒரு வழி கண்டுபிடித்தான்,

“ம்ம்ம் ... மோதிரத்தைச் சும்மா விரலில் போட்டால் நழுவ விட்டுவிடுவாய் போல இருக்கிறது அதனால் இன்னொன்று செய்யலாம்!” என்று தன் கழுத்தில் கிடந்த சங்கிலியைக் கழற்றி. அதில் அந்த மோதிரத்தைக் கோத்து அவளுக்கு அணிவித்தான் அவன்,

என்னமோ அவன் வீர தீர சாகசம் செய்து விட்டதுபோல உணர்ச்சி அவளுக்கு!

“வினாடிக்குள் ஒரு யோசனை கண்டுபிடித்து விட்டீர்களே!” என்று கண்கள் பளபளக்கப் பாராட்டினாள் மகதி,

பெருமையில் நெஞ்சு இரண்டு சுற்று விரிந்தது அவனுக்கு!

அய்யர் கூட. “நல்ல ஐடியாப் பண்ணினீர்கள். சார்!” என்று சிலாகித்துப் பேசினார்,

திருமணம் முடிந்த கையோடு அவளது கோயில் வளாகத்து அறையைக் காலி செய்து. மகதியை அவன் தங்கியிருந்த ஹோட்டலுக்கே நிரஞ்சன் கூட்டி வந்துவிட்டான்!

இனிமேல் எந்தக் குடிகாரன் மகதியின் பக்கத்தில் வர முடியும்?!

தொடர்ந்த ஒரு வாரம் எப்படிக் கழிந்தது என்றே இருவருக்கும் தெரியாது! அப்படிக் கண் சிமிட்டி விழிப்பதற்குள் அடுத்த ஏழு நாட்களும் காணாமல் போயின,

இது. சரியான திருமணமா என்பதே இல்லாமல். இருவரும் சந்தோஷமாக இருந்தார்கள்,

இந்த சொர்க்கத்தை விட்டு வீட்டுக்குச் செல்லவே நிரஞ்சனுக்கு மனமில்லை,

இந்த நிலையில் நிரஞ்சன் மகதிக்கு மணமான எட்டாவது நாள் ஆய்வாளர் சூட்சுமன் வந்து அவர்கள் தங்கியிருந்த அறையின் கதவைத் தட்டினார்!

டெல்லிப் பயணம் சூட்சுமன் நினைத்தது போல அவ்வளவு எளிதாக இருக்கவில்லை,

முன்பு நடந்தது தமிழ்நாட்டில் மட்டிலுமாகச் செய்த ஆய்வுகளுக்கு உரிய போட்டி, சிறந்ததாகத் தெரிவு செய்தது. பரிசு கொடுத்தது எல்லாமே தமிழ் நாட்டளவில் மட்டிலுமாகவே!

அதிலும் சூட்சுமன் தேர்ந்தெடுத்திருந்த தலைப்புக்கு வேறு ஆளே இருக்கவில்லை,

ஆனால் டெல்லிப் போட்டி அப்படி இருக்கவில்லை, போட்டி மிகவும் பலமாக இருந்தது,

பாரதநாடு பழமையான கலாசாரங்கள் நிறைந்த நாடு, பரந்து விரிந்த பெரிய நாடும் கூட! அந்தந்தப் பகுதி மக்கள். தங்கள் கலாசாரங்களோடு அவைகளை ஒட்டிய கலைகளையும் சேர்த்துப் போற்றி வளர்த்து வந்த தேசம் இது,

யார் யாரோ படையெடுத்து வந்து முயன்றும் அழிக்க முடியாத தன்மையும் தொன்மையும் வாய்ந்தது, அதன் கலைகளும் அப்படித்தான்,

எனவே பரந்த இந்த நாடு முழுவதிலும் கலைச் செல்வங்களும் நிறைய இருந்தன, அந்தந்தப் பகுதிக் கலாசாரங்களுக்கு ஒத்த வகையில் நீண்ட நெடுங்காலமாகக் கலை வளர்த்த நாடு என்பதால் சூட்சுமனுக்குப் போட்டியும் நிறைய இருந்தது...

ஓரளவு செலவு பண்ண அவர் தயாராகத்தான் இருந்தார், ஆனால் பலர் பணத்தைத் தண்ணீராகச் செலவழித்தனர், அதற்கு அவர் தயாராக இல்லை, எனவே ஒரு மாத காலம் அலைந்து திரிந்தும் தோல்விதான் அவருக்குக் கிடைத்தது,

தோற்றுத் திரும்பி வந்தவருக்கு இங்கிருந்த நிலைமை எரிகிற

தீயில் எண்ணையை ஊற்றியது போல இருந்தது,

மகதி இருக்க வேண்டிய அறை பூட்டிக் கிடந்தது, எங்கே போனாள் என்ன என்று ஒன்றும் தெரியவில்லை, கழுதை! இந்த இரவு நேரத்தில் எங்கே சென்றிருப்பாள்?

மொபைலுக்கு முயற்சி செய்தால் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது,

ரொம்ப விலை குறைந்த செல்ஃபோன், அவள் அதைத் திருடிச் சென்று ஒரு லாபமுமில்லை!

மகதி எங்கே என்று கோயிலில் போய்க் கேட்டால் பத்து நாட்களாகப் பார்க்கவே இல்லை என்றார்கள்,

இந்த முட்டாள்ப் பெண் என்னதான் ஆகியிருப்பாள்?

தேடித் தேடி அலுத்துப் போய் அவர் ஆத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்தபோது. கோயில் பணியாள் ஒருவன் வந்து மகதி பற்றிய விவரம் தெரிவித்தான்,

அந்த முட்டாளுக்கு என்ன ஆயிற்று? எவனோ ஒருவனுடன் சுற்றினாளாம், இப்போது அவனது அறையிலேயே வசிக்கிறாளாம்,

அவளது செலவுக்கு மட்டும் சூட்சுமனுடைய பணம் வேண்டுமாமா?

ஒருவேளை அவனுக்கும் சேர்த்து அவரது பணம்தான் செலவாகிறதா?

அவனைப் பிடித்து உதைத்துத் தள்ளிவிட்டு. மகதியின் சிண்டைப் பிடித்து இழுத்து வர வேண்டும் என்றுதான் சூட்சுமன் வேகமாகக் கிளம்பிச் சென்றார், ஆனால் ...,

ஆத்திரத்துடன் கதவைத் திறந்த நெடியவனைப் பார்த்ததுமே. இன்னும் பலமாகக் கதவைத் தட்ட உயர்ந்த அவரது கை தானாகப் பின்னே சென்றுவிட்டது,

“யார்? தொல்லை செய்ய வேண்டாம் என்பதைக் குறிக்கும் விளக்கு எரிவதைப் பார்த்த பிறகும் அநாகரீகமாகக் கதவைத் தட்டுகிறீர்கள்? அதுவும் இவ்வளவு வேசமாக!” என்ற அவனது குரலில் இருந்த கடுமையும் அவரை யோசிக்க வைத்தது,

இப்போது இவனிடம் என்னவென்று கேட்பது? கேள்வி கேட்பது ஒரு புறம் இருக்கட்டும். என்ன உரிமையில் கேட்கிறார் என்று எப்படி விளக்குவது?

அந்த வினாடியில்தான் மகதியின் சொந்த வாழ்வு பற்றிக் கேட்க அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பது அவருக்கு மனதில்

உறைத்தது,

"வந்து ... வந்து ..." என்று தடுமாறும்போது நல்ல வேளையாக "ரஞ்சன் எங்கே போனீர்கள்?" என்று மகதியின் கொஞ்சும் குரல் கேட்டது,

அவருக்கு அடுத்த அதிர்ச்சி! இந்த மகதியின் குரல் இவ்வளவு இனிமையாகக் கூட இருக்குமா?

எதிலோ வெகுவாக ஏமாந்துவிட்ட உணர்வோடு எட்டிப் பார்த்தால். அழகே உருவாக இளம் சிவப்பு நிற நைட்டியில் அவள் உள்ளே நின்று கொண்டிருந்தாள்,

இவ்வளவு அழகா இவள்? நினைத்துக் கூடப் பார்த்தது இல்லையே!

"சற்றுப் பொறு மகி, இந்த ஆளை விர ... வந்து ... அனுப்பிவிட்டு வருகிறேன்," என்று குரலில் நகையுடன் அந்த "ரஞ்சன்" கூற அவருக்கு வயிறு எரிந்தது,

அந்த மகதிக்குச் சோறு போட்டுக்கொண்டு இருப்பவர் அவர், அவரையே அவன் விரட்டுவானாமா? திமிர் பிடித்தவனாக இருப்பான் போல இருக்கிறதே!

ஆனால் வாலைச் சுருட்டிக்கொண்டு போக சூட்சுமனுக்கு விருப்பம் இல்லை, ஆனால் ஏதேதோ மயக்கத்தில் இருக்கும் மகதி அவரை அலட்சியம் செய்துவிட்டால் ரொம்பக் கேவலமாகி விடுமே!

ஆனால் மகதியின் உதவி அவருக்கு அவசியம், அதிலும் அப்போது அந்தத் தேவை அவருக்குப் பெரிய பலூன் போலப் பெரிதாக உப்பிக் கொண்டே போயிற்று,

உயரத்தில் பறக்கும் பெரிய விளம்பர பலூனைப் போலப் பூதாகாரமாக!

ஒரு முயற்சி பண்ணாமல் சும்மா விட்டுவிட முடியவே முடியாது,

என்ன நடக்குமோ என்று ஒரு கணம் கலங்கியபோதும். துணிவைத் திரட்டிக்கொண்டு. "மமமகதியைப் பார்க்க வந்தேன், அம்மா மகதீ!" என்று குழைவான குரலில் உரக்க அவளை அழைத்தார் அவர்,

படுக்கை அருகே லேசாகக் குனிந்து நின்று தலையணையைச் சரியாக வைத்துக் கொண்டிருந்த மகதி சூட்சுமனின் குரலில் சட்டெனத் திரும்பி வெளியே பார்த்தாள்,

சூட்சுமனின் மகதி என்ற அழைப்பில் வியந்து நிரஞ்சனும் திரும்பினான்,

மலர்ந்த முகத்துடன் கையிலிருந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு. “சார் ...,!” என்று ஆவலாகக் கூவியபடி மகதி அறை வாயிலுக்கு ஓடி வந்தாள்,

“டெல்லி வேலை முடிந்து விட்டதா சார்? எப்போது வந்தீர்கள்? உள்ளே வாருங்கள் சார், உள்ளே வந்து உட்காருங்கள், ரஞ்சன். நான் சொல்லவில்லை எனக்கு வேலை கொடுத்தவர் என்று. அந்த சூட்சுமன் சார் இவர்தான், சார். இவர் என் கணவர், பெயர் நிரஞ்சன்,” என்று ஆர்வத்துடன் இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தாள்,

“பேசிக் கொண்டிருங்கள், இதோ வந்துவிடுகிறேன்!” என்று உட்புறமாக இருந்த இன்னோர் அறைக்குள் ஓடிப் போனவள். இரண்டே நிமிஷங்களில் வேற்றுடை அணிந்து வெளியே ஓடி வந்தாள்,

கணவரா?! என்று சூட்சுமன் வெகுவாக அதிர்ந்து போனார்,

அவர் டெல்லிக்குச் சென்று மிஞ்சி மிஞ்சி ஒரு மாதம் இருக்குமா?

அதற்குள் கணவன் கண்ணராவி என்று ஒருவன் எங்கிருந்து வர முடியும்? ஊகூம், எல்லாம் பொய்! அவர் ஒத்துக்கொள்ளவே மாட்டார்!

ஒருவேளை சேர்ந்து கூத்தடிப்பதற்காக ஹோட்டலில் கணவன் மனைவி என்று பொய் கூறியிருக்கலாம், நிநிச்சயமாக அப்படித்தான் இருக்கும்! அடப் பாவி! இவ்வளவு மட்டமா நீ? முன்னமே தெரிந்திருந்தால் ......................................................................................

அவர் யோசித்து முடிக்குமுன் உடை மாற்றிக்கொண்டு மகதி அவர் முன்னே வந்து நின்றாள்,

“சொல்லுங்கள் சார், எல்லாம் நல்லபடியாக முடிந்ததா? உங்களுக்கு வெற்றிதானே? ரஞ்சன். ரூம் சர்வீசைக் கூப்பிட்டு சாருக்குக் காஃபி சொல்லுங்களேன், கொஞ்சம் திக்காக இருக்க வேண்டும் என்று சொல்லுங்கள், இப்போது நீங்கள் சொல்லுங்கள் சார், டெல்லி எப்படி இருந்தது? போன காரியம் “ என்று ஆர்வம் மிகப் பரபரத்தாள்,

நிரஞ்சன் இவளுக்கு “ரஞ்சன்” ஆகிவிட்டானா என்று அதுதான் சூட்சுமன் மனதில் கனமாகப் பட்டு எரிந்தது,

காந்தலை மறைத்துக்கொண்டு. “மதிப்பு மரியாதைக்குக் குறைவில்லை, ஆனால் பரிசுதான் வேறு ஆளுக்குப் போய்விட்டது, கமிட்டித் தலைவருக்கு உறவாம், அங்கிருந்த எஎல்லோரும் பேசிக் கொண்டார்கள், இனி அடுத்த ஆண்டுதான் முயற்சிசெய்ய வேண்டும்,” என்று அவள் கேட்ட விவரம் சொல்லி முடித்தார் அவர்,

“அடடா! பரிசு கிடைக்கவில்லையா? போகிறது சார், நீங்கள் சொன்னது போல அடுத்த ஆண்டு முயற்சி செய்து வெற்றி பெறலாம்,” என்று அவரிடம் சொல்லியவாறு அந்த நிரஞ்சனைப் பார்த்தாள் அவள்,

கண்களில் சிரிப்புடன் புருவங்களை ஏற்றி இறக்கி ஏதோ ஜாடை செய்தான் அவன், அவர்கள் இருவருக்குமான ஏதோ தனிப்பட்ட குறிப்பு,

புரிந்தவள் போல மகதியும் முகம் சிவந்தாள்,

கன்னங்கள் மட்டும் எழிலாகச் சிவக்க இந்த மகதி இவ்வளவு அழகா? சூட்சுமனால் நம்பக் கூட முடியவில்லை,

பிரமிப்புடன் அவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே காஃபி வந்து சேர்ந்தது,

மரியாதையுடன் ரூம் சரவீஸ் ஆள் காஃபியைக் கப்புகளில் ஊற்றி வைத்துவிட்டுச் செல்ல. “உங்களுக்கு சூடாக இருந்தால்தானே காஃபி பிடிக்கும், முதலில் இதைக் குடியுங்கள் சார், பிறகு பேசலாம்,” என்று மகதி உபசரித்தாள்,

காஃபியை அருந்தும்போதே நிரஞ்சன் ஜாடையாக மகதியிடம் ஏதோ தெரிவிக்க. அவளும் வெட்கத்துடன் ஒப்புதலாகத் தலையாட்டுவதைப் பாராதது போல ஆய்வாளர் பார்த்துக் கொண்டிருந்தார்,

மகதி திருமணமாகி ஓர் ஆணோடு வாழ்கிறாள் என்கிற அதிர்ச்சி சற்றுக் குறைந்தபோதும் அதனால் ஏற்பட்ட ஆத்திரம் மட்டும் ஏறிக்கொண்டே போயிற்று,

அவரிடம் பணி புரியும் ஒரு வேலைக்காரி! அவரது தலை மறைந்ததும் கண்ணில் பட்ட எவனோ ஒரு தறுதலையோடு குடும்பமே நடத்த ஓடி வந்துவிட்டாளே!

அப்படியா ஓர் உடம்பு ..... ,

கேவலமான வார்த்தைகளால் அர்ச்சனை செய்தபோதும். நிரஞ்சனின் தோற்றத்தில் உள்ளூர இருந்த பயத்தினால் அவர் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் கர்மவீரராகக் காஃபியை அருந்திக் கொண்டிருந்தார்,

இப்போது அவரது வேலையைச் செய்வதற்கு இந்த மகதியை எப்படி இழுத்துப் போவது?

சூட்சுமனின் மனம் இந்த சிந்தனையில் ஆழ்ந்திருக்க. முதலில் மகதி அவரை விளித்ததையே அவர் கவனிக்கவில்லை,

இன்னும் கொஞ்சம் உரக்க. அவள் அழைக்கவும் திடுக்கிட்டு

நிமிர்ந்த அவர் கணவனும் மனைவியும் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் மேலும் திகைத்தார்,

“எஎன்ன மகதி?” என்று தடுமாற்றத்துடன் வினவினார்,

“அது வந்து ...” என்று மகதி தயக்கத்துடன் இழுக்கையில் அந்த நிரஞ்சன் சட்டெனக் குறுக்கிட்டுப் பேசினான்,

“மிஸ்டர் சூட்சுமன். முன்பு இருந்த நிலை வேறு, இப்போது மகதி என் மனைவி, இன்னும் சில நாட்களில் அவளை என் வீட்டுக்கு அழைத்துச் செல்லப் போகிறேன், அதுவரையும் கூட. அவள் பிறரிடம் வேலை செய்வதை என்னால் அனுமதிக்க முடியாது, அதனால் உங்கள் வேலைக்கு நீங்கள் தகுதியானவராக உடனே வேறு ஒருவரைத் தேடிக் கொள்ளுங்கள்,” என்றான் தீர்மானமான குரலில்,

இடி தலையில் விழுந்தேவிட்டமாதிரி சூட்சுமனுக்குக் கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது, சொல்வது அறியாமல் மகதியைப் பார்த்தார் அவர்!

# அத்தியாயம்- 5

வேலையில் எப்போதும் மகதியின் பேச்சையும் எழுத்தையும் சூட்சுமன் தனதாக எடுத்துக் கொள்வதே பழக்கம்,

ஆராய்ச்சிகள் பற்றிப் பேசும்போதும் எழுதும்போதும் அவரது மூளை மக்கர் பண்ணும் சமயங்களில் உரிய வார்த்தைகளைக் கூறி வாக்கியத்தை முடித்து வைப்பது மகதியே,

இப்போது ஆராய்ச்சி சம்பந்தமான பேச்சு இல்லை என்றாலும். நிரஞ்சனின் வார்த்தைகள் அவரை வாயடைத்து விட்டுவிட. பதில் சொல்ல மகதியைப் பார்வையால் தேடினார் அவர்,

ஆனால் மகதி அவரை ஏறிட்டுப் பார்த்தால்தானே? அவளது கண்கள் கணவன் என்று அருகில் இருந்தவன் முகத்திலேயே கட்டுண்டு கிடந்தன,

அப்படியென்ன அந்த முகத்தில் தேனா வடிகிறது. இப்படிக் கண் கொட்டாமல் பார்ப்பதற்கு? மீசையும் தாடியுமாகச் சகிக்கவில்லை!

சூட்சுமனுக்கு எரிச்சல் வந்தது, சமாளித்துக்கொண்டு. “நிரஞ்சன் சார். நீங்கள் இப்படிச் சொன்னால் எப்படி? மகதிக்கு ஒரு மாத விடுமுறைதான் கொடுத்திருந்தேன், இந்த ஒரு மாதத்தில் அங்கே மலை போல வேலை குமிந்திருக்கிறது, நீங்கள் இப்படித் திடுமென இவள் வேலைக்கு வரமாட்டாள் என்றால். நான் தனியாக என்ன செய்வது? ரொம்பவும் பாதிப்பாகிவிடும் சார்!” என்று வாயில் வந்ததைச் சொல்லி வாதாடினார் அவர்,

“என்ன செய்வது சூட்சுமன்? என்னால் ஆனது. ஒரு மாத நோட்டீசுக்குப் பதிலாக

ஒரு மாத ஊதியத்தைத் திருப்பித் தருவதுதான், ஏனென்றால் நாங்கள் ஒரு வாரத்தில் கிளம்ப வேண்டும்,” என்றான் இளக்கமற்ற குரலில் நிரஞ்சன்,

இவனிடம் பேசிப் பயன் இல்லை என்று புரியவும். சூட்சுமன் மகதியிடம் முயன்று பார்த்தார், முதலில் சற்று உரத்த குரலில் அழைத்து அவளது கவனத்தைத் தன்புறம் திருப்பினார்,

“மகதி. எல்லாமே போட்டது போட்டபடி கிடக்கிறது, அதிலும் நான் திருப்பிக் கொண்டு வந்த மூட்டை வேறு ... அதை மட்டுமாவது அங்கே வந்து சற்று ஒழுங்கு பண்ணிக் கொடுத்துவிட்டு அப்புறமாகப் போயேன். ப்ளீஸ்! பிறகு நான் எப்படியோ முயன்று சமாளித்துப் பார்க்கிறேன்!” என்று கெஞ்சிக் கேட்டார்,

மகதிக்கு மனம் உருகிப் போயிற்று எனலாம்,

சூட்சுமனின் மேஜையே குப்பைக் கூடையைக் கவிழ்த்து வைத்தது போல இருக்கும்,

ஆராய்ச்சி தொடர்பான விவரங்களை வரிசைப்படி வைக்க வேண்டும், அல்லது எல்லாமே குழப்பமாகிவிடும், ஆனால். அந்த நிமிஷம் எடுத்துப் பார்த்ததை. அதன் பயன் அப்போதைக்குத் தீர்ந்ததும். ஆய்வாளர் வீசி எறிவதை மகதி பார்த்திருக்கிறாள்,

எப்படியும் அவளது இருண்ட காலத்தில் இருந்து அவளைக் காத்தது சூட்சுமனே அல்லவா? அவரே கேட்கும் இந்தச் சிறு உதவியைச் செய்யாமல் விட்டுவிட்டால். அப்புறமாக அவளது மனமே அவளைக் குடைந்து தள்ளிவிடும்!

எனவே கணவனின் புறம் திரும்பி. “ரஞ்சன். நீங்களும் நிறைய ஃபோன் செய்ய வேண்டும் என்று சொன்னீர்களே. நான் போய் சூட்சுமன் சாருக்கு உதவி செய்துவிட்டு வந்துவிடுகிறேன், நீங்களும் இந்தப் பேச்சு விவகாரங்களை முடித்துவிட்டு வந்தால் அப்புறம் ... அப்புறம் ..................” என்றவளின் பேச்சு நின்று போய்விட சூட்சுமன் நிமிர்ந்து அவளைப் பார்த்தார்,

பார்த்த அளவில் மறுபடியும் அவரது வயிறு எரிந்தது,

அதென்ன பாதி வாக்கியம் பேசுமுன் ஒருவரை ஒருவர் பார்த்து இளித்துக் கொள்வது?

மரியாதைக்கு உரிய பெரிய மனிதர்! அரசுப் பரிசு வாங்கிய மேதை! எல்லாவற்றையும் விட முக்கியமாக இந்த அசட்டுப் பெண்ணுடைய முதலாளி! இன்னும் உலக முழுதும் புகழ் பெறப் போகிற மகா மனிதர் எதிரே இருக்கிறார் என்பது கூடவா அறிவில்லை?

இதில் வேலையை வேறு விட்டுவிடப் போகிறாளாம்,

“அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதை” என்பார்களே. இந்த மடச்சிக்கு அது தெரியாது போலும்,

மோகம் முப்பது நாள்!

அதன் பிறகு இவளை நடுத்தெருவில் விட்டுவிட்டு இவன் போன பிறகுதான் இந்த முட்டாளுக்குப் புரியும்,

அப்போது அவரிடம்தானே வந்து நிற்கப் போகிறாள்! அப்போது இவளை வைத்து வாங்க வேண்டும்! தலை முடியைப் பிடித்து ஆட்ட வேண்டும்!

இன்னொரு தரம் வேலையை விடுகிற நினைப்பே இவளுக்கு வரக் கூடாது ..........................................................................................

மகதிக்கு உரிய தண்டனைகளை சூட்சுமன் பட்டியலிட்டுக்

கொண்டிருக்கும் போதே. நிரஞ்சன் எழுந்தான்,

“அப்படியானால் கிளம்புகிறீர்களா சார்? இன்றைக்கு மட்டும் மகதியை உங்களுக்கு உதவி பண்ண அனுப்பி வைக்கிறேன், இன்றே நீங்கள் வேறு ஆள் பார்க்கவும் தொடங்கி விடுங்கள்,” என்றான்,

அதாவது வெளியே போய்யா என்பதைக் கொஞ்சம் நாகரீகமாகச் சொல்லுகிறான்!

மகதியாவது விசுவாசத்தோடு “இன்னும் சற்று நேரம் இருந்து சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டுப் போங்கள்” என்று கேட்டிருக்கலாம், இந்த ஹோட்டலில் காலை உணவு மிக நன்றாக இருக்கும் என்று கேள்வி வேறு!

ஆனால் மகதியும் அந்தப் பாவிப்பயல் மகுடிக்கு ஆடுகிறவளாக. எழுந்து கதவுப் பக்கமாகச் சென்று நின்றாள், வழியனுப்பி வைக்கிறாளாம்! கொடுமை!

வேறு வழியின்றி எழுந்து “ரொம்பத் தாமதம் செய்யாமல் சீக்கிரமாக வந்துவிடு மகதி,” என்று சொல்லிவிட்டு சூட்சுமன் கிளம்பினார்,

விடை பெறலாம் என்று நிரஞ்சனைப் பார்த்தால் அவன் அதற்குள் திரும்பி விட்டிருந்தான்,

மரியாதை தெரியாத பயல் என்று மனதுக்குள் அர்ச்சித்தவாறு மகதியைப் பார்த்தால். என்னவோ பெரிய மகாராஜாவைப் பார்க்கிற மாதிரி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்,

உடம்பு முழுதும் எரிய அறையில் இருந்து வேகமாக வெளியேறிப் போனார் அவர்,

செல்லும் வழியெல்லாம் அவரது மனம் கொதித்துக்கொண்டே இருந்தது,

அப்படியென்ன மயக்கம்? அவன் என்ன உலகப் பேரழகனா? அவன் இம் எனுமுன் எட்டுத் தடவை விழுந்து கும்பிடுவாள் போல இருக்கிறதே!

அவனாகக் கழற்றி விட்டால் கூட. இவள் அவன் காலடியிலேயே விழுந்து கிடப்பாள் போல இருக்கிறதே!

ஏன்? என்ன காரணம்?

பின்புலமாக எதுவுமே இல்லாத மகதியை அவர் நிரந்தர வேலைக்காரியாக நினைத்திருந்தாரே! அவளுக்கு எப்படி இந்தப் பைத்தியம் பிடித்தது?

தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளாத குறையாக

யோசித்தபோது. மகதியின் மயக்கத்தின் காரணம் அவருக்குப் புரிந்தது!

பாலுணர்வு! மிருக இச்சை! அவளுக்கு அது போன்ற வயதுதான், அதற்குத் தீனி போட்டவன் கடவுளாகத் தெரிகிறான்!

இது மட்டும் அவருக்கு முன்பே தெரிந்திருந்தால் ... என்ன மாதிரி ஏமாந்துவிட்டார்!

வேலையில் உதவி செய்ய வந்த மகதியிடம் சூட்சுமன் நிறையக் கேள்விகளைக் கேட்டார், பெரும்பாலும் அவளுடைய கணவன் என்று சொன்னாளே. அவனைப் பற்றிய கேள்விகள்,

எப்படி சந்தித்தார்கள்? எப்போது? அவன் யார்? இங்கே என்ன செய்கிறான்? திருமணம் செய்தபோது அவன் பக்கத்தில் இருந்து யார் யார் வந்திருந்தார்கள்?

எல்லாம் கேட்ட அவருக்கு இது ஒரு முறையான திருமணமாகவே தோன்றவில்லை, சீக்கிரமே அவளை விட்டுவிட்டு ஓடப் போகிறான் என்று மனதில் உறுதியே செய்துவிட்டார்,

ஆனால் அது சீக்கிரமாக நடப்பது அல்லவா. அவருக்கு நல்லது?

“பார்த்தால் பணக்காரப் பையனாகத் தெரிகிறது, விட்டுவிட்டு ஓடிவிட மாட்டான் என்று எப்படி நினைத்தாய்?” என்று கிண்டினார்,

ஆனால் மகதியின் நம்பிக்கையை அசைக்க அவரால் முடியவில்லை,

“எங்கள் காதல்  சீதையும் ராமனும் கொண்டதைப் போன்றது, அவரும் ராமர்தான்,” என்றாள் அவள் மகா மகா நிச்சயத்தோடு!

இவளிடம் பேசிப் பயன் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது, ஆனால் அவன் குணம் வேறாக இருந்தால்?

அவனது பேச்சில் திமிர் இருந்தது, பணக்காரத் திமிர், அதை ஏதேனும் ஒரு வகையில் சீண்ட முடிந்தால் பலன் கிடைக்லாமோ?

தீவிர யோசனையின் பின் அவருக்கு ஓர் ஐடியா வந்தது, ஒரு வேளை அது பலிக்குமானால் அப்புறம் மகதிக்கு வேறு போக்கிடம் இல்லாமல் இங்கேயே தங்க வைத்து விடலாம்,

அவருக்கு நிரந்தர வேலைக்காரியாக!

திட்டமிட்டால் போதாதே! அதை நிறைவேற்றவும் வேண்டும் அல்லவா?

எனவே சூட்சுமன் மகதியிடம் ஒன்று சொன்னார், “பார் மகதி. உன் பெரியப்பா வீட்டில் இருந்து உன்னை அழைத்து வரும்போது. உன் எதிர்காலம் நன்றாக இருக்கும் படி நான் பார்த்துக்

கொள்ளுவேன் என்று வாக்குக் கொடுத்திருந்தேன் ...” என்று தொடங்கினார்,

அவள் ஆச்சரியமாகப் பார்க்கவும். “அஅது உன் பெரியம்மா ...நீ கூட அங்கே இல்லாதபோது நடந்த பேச்சு அது, ஆனால் என்னிடம் கலந்து ஆலோசிக்காமலே. உன் இஷ்டம் போல ஒருவனைத் திருமணம் செய்து கொண்டதாக என்னிடமே சொல்லுகிறாய்,

உனக்கு மயக்கம்! ஆனால் நிரஞ்சன் எப்படிப்பட்டவர் என்று நான் அவரிடம் பேசிப் பார்க்க வேண்டும், அதற்கு அவகாசம் இல்லை என்று அவர் தரப்பில் ஏதாவது சொன்னால். நான் உன் பெரியம்மாவுக்கு விஷயத்தைத் தெரிவித்து விடுகிறேன், அதற்கு மேல் அவர்கள் பொறுப்பு, அவர்கள் வந்து சண்டை போட்டோ. சமாதானமாகவோ நிரஞ்சனோடு பேசி முடிவு பண்ணட்டும், என்ன சொல்கிறாய்?” என்று கேட்டார்,

“பெரியம்மா” என்ற வார்த்தையில் மகதியின் முகம் வாடியது,

பெரியம்மாவின் குணம் மகதிக்குத் தெரியும், நிரஞ்சனிடம் அவள் என்ன சொல்லக்கூடும் என்பதும் ஊகிக்க முடியாதது அல்ல,

ஒரு வேலையில் ஒருவரைச் சேர்க்கும்போது அவரைப் பற்றிய நற்சான்றுகள் இருப்பது முக்கியம், அவற்றைக் கொண்டே அவர் என்ன மாதிரி ஆள் என்று தீர்மானிப்பார்கள்,

நிரஞ்சனுக்கு அவளிடம் காதல்தான், இந்த இருபது நாள்ப் பழக்கத்தில் ஒருவரை ஒருவர் உயிராக நேசிக்கிறார்கள் என்பது நிஜமே,

ஆனால் எந்த அன்பையும் நாசம் செய்யக் கூடியவள் பெரியம்மா சுகந்தா, ஏன். மகதிக்கு நட்பென்று யாருமே இல்லாமல் செய்துவிடவில்லையா?

இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக் கட்டி மெய் போலக் காட்டுவதில் அவளை மிஞ்ச முடியாது,

சும்மாவே மகதிக்கு நல்லது நடப்பது அவளுக்குப்பிடிக்காது, அதிலும் நிரஞ்சனைப் போன்ற ஒரு கணவன் கிடைத்திருப்பதை எப்படிப் பொறுப்பாள்?

அவனிடம் எதையாவது சொல்லி விரட்டிவிட்டால். அவன் பிரிவை மகதி எப்படித் தாங்குவாள்?

எனவே ஆய்வாளரிடம். “அது எப்படி சார் முடியும்? பெரியம்மா மாதர் மன்றத் தலைவி, திடுமென வா என்றால் எப்படி முடியும்? இவருக்கும் அங்கே போய் பெரியம்மா பெரியப்பாவைச் சந்திப்பது கடினம் ,அதனால் அவரிடம் நீங்களே பேசுங்களேன், அவர் மிக

நல்லவர் சார்! என்னைப் பற்றியும் உங்களுக்கு நன்றாகத் தெரியும், " என்று பாலின் காவலைப் பூனையிடமே கொடுத்தாள் அவள்,

தெரியாமல்தானேடி கிடைத்த புதையலைக் கை நழுவ விட்டுவிட்டேன் ..., என்று மனதுள் குமுறிய சூட்சுமன் அதை வெளிக் காட்டாமல். "ம்ம்ம் .........நீ கூறுவதும் சரிதான், எதற்கும் அவரை வரச் சொல்லேன், நானே பேசிப் பார்க்கிறேன்," என்றார்,

ஆனால் அவரது அழைப்பை ஏற்று வந்த நிரஞ்சனிடம் அவனை எடை போடுவது போல எதையும் அவர் பேசவில்லை,

மாறாக. மகதியைப் பற்றி விவாதித்தார், "பாருங்கள் நிரஞ்சன். திடுமென மகதியைக் கூட்டிப் போய் மனைவி என்று அறிவித்தால் உங்கள் பெற்றோர் அவளை எப்படி ஏற்பார்கள்? சாலமன் அரசர் ஒரு பிச்சைக்காரியை மனைவியாக ஏற்று ராணியாக்கி எல்லோரையும் அவளை மதிக்க வைத்தாரே. அது போன்ற காலம் அல்ல இது," என்று தொடங்கி ஒரு பெருமூச்சு விட்டார்,

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கண்கள் இடுங்கக் கேட்டான் நிரஞ்சன்,

"பெரிதாக ஒன்றும் இல்லை. சார், பொதுவாகச் சொல்வது போல இளவட்டங்களுக்கு ஒரு பெண்ணின் தோற்றம் மட்டும்தான் கண்ணில் படும், பெற்றவர்கள் மற்றதையும் ... அதாவது நல்ல குடிப் பிறப்பு. பொருளாதார நிலை. வளர்ப்பு. உற்றார் உறவினர் என்று எல்லாம் ... மற்றதை விடுங்கள். எல்லாவற்றையும்விட முக்கியமாக வரப் போகும் மருமகளின் குணத்தைக் கவனிப்பார்கள், உங்கள் பெற்றோரிடம். உங்கள் பிள்ளையான நானும் அப்படித்தான்,. மகதியின் குணத்தையும் விசாரித்தேன் என்று பெருமையோடு சொல்லக் கூடியவராக இருங்கள் என்கிறேன், அஅதாவது. மகதி சென்று பணி செய்த இடங்களுக்குச் சென்று சற்று உலாவிவிட்டு அப்படியே அவளைப் பற்றியும் விசாரித்துவிட்டு ... " என்றவர் அவனது முகம் மாறிக்கொண்டே போகவும். வாக்கியத்தை முடிக்காமலேயே வேறு மாதிரித் தொடர்ந்தார்,

"பாருங்கள் தம்பி. இது உங்கள் பெற்றோருக்காக நீங்கள் செய்வது, இந்திந்த இடங்களில் விசாரித்தேன், ரொம்ப உயர்வாகச் சொன்னார்கள்,. அப்படி இப்படி என்று நீங்களும் பதில் கொடுக்கலாமில்லையா? கிடைக்கும் பதில் உங்கள் பெற்றோருக்காகக் கூட அல்ல, சும்மா மருமகளைப் பார்க்க வந்தேன்று என்று வந்துவிட்டுக் கேவலமாக வம்பு பேசவென்றே வரக் கூடிய பிற வதந்தி பரப்புகிறவர்களுக்காகவே. ..., புரிகிறது அல்லவா? நான் நல்லதற்காகவே சொல்லுகிறேன், என்று தெரிகிறதில்லையா?" என்று கேட்டார்,

சற்று யோசித்துவிட்டு. “தெரிகிறது, “ என்றான் அவன்,

அதன்பின். அவர் தீவிரமாக வேலை செய்து ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிய மூன்று இடங்களுக்கு நிரஞ்சனை அழைத்துச் செல்லுமாறு மகதியிடம் கூறினார்,

“உன் வேலை எப்படிப்பட்டது அவருக்கும் தெரியட்டும்,” என்று அவர் கூறவும் மகதியும் மகிழ்ச்சியோடு ஒத்துக் கொண்டாள்,

அந்த மூன்று இடங்களின் ஆராய்ச்சிக்காகவே சூட்சுமனுக்கு அரசின் பரிசு கிடைத்திருந்தது, மகதி ரசித்துச் செய்த பணி,

எனவே அவள் துள்ளிக்கொண்டு கிளம்பிவிட. நிரஞ்சனும் மகிழ்ச்சியுடனேயே கூடச் சென்றான்,

“அங்கங்கே பெரிய ஹோட்டல் தேடிக்கொண்டு அலைபதை விட. முன்பு பயன்படுத்திய இடங்களிலேயே தங்கிவிட்டுச் சீக்கிரமாக வந்து விடுங்கள், அங்கே அறைக்கு நானே ஏற்பாடு செய்துவிடுகிறேன்,” என்று மிக உதவிகரமாக ஆலோசனை சொல்லி அனுப்பினார் ஆய்வாளர்,

அவர் கூறியது சரியாகவே படவும். சூட்சுமன் குறிப்பிட்டுச் சொல்லி அனுப்பிய கொயில் வளாகத்தைச் சேர்ந்த அறையிலேயே தம்பதிகள் இருவரும் தங்கினார்கள்,

அவர்களது பொருட்களை எடுத்து வந்து அறையில் வைத்தவனது கேள்வி. கணவன் மனைவி இருவரையுமே அதிர வைத்தது எனலாம்,

மகதியை அவன் யார் என்று கருதினானோ?

எடுத்து வந்த பெட்டியைப் படுக்கையில் வைத்துவிட்டு. “போன தடவைக் கூட வந்தவரு இப்ப வரலியாம்மா?” என்று சிரித்துக்கொண்டே கேட்டான் அவன்,

குழம்பி. “யா ...ரைச் சொல்லுகிறாய்?” என்று வினவினாள் மகதி,

“மாசா மாசம் அவரு கூடத்தானே வருவீங்க ,சரிம்மா சாமான் சரியா இருக்குதான்னு பார்த்துக் கொள்ளுங்க, நான் போறேன்,” என்று வேகமாக வெளியே சென்றுவிட்டான் அவன்,

“அவன் என்ன சொல்கிறான் மகி?” என்று வினவிய நிரஞ்சனின் குரல் சற்றே கனத்திருந்தது,

புருவம் சுளித்து யோசித்துவிட்டு. “எனக்கும் புரியவில்லை ரஞ்சன், ஒருவேளை வேறு யாரோ என்று குழம்பிவிட்டானோ என்று தோன்றுகிறது,” என்றாள் மகதி,

“வேறு மனிதர்கள் கூட இங்கே வந்து தங்குவார்களா?”

“ம்ம், வாடகை மிகவும் குறைவு என்பதால் முதலில் ரொம்பக் கூட்டமாகிவிட்டது, ஆனால் தப்பானவர்கள் அதிகமாக வரவும். வாடகைக்கு விடுவதைப் பொதுவாக நிறுத்திவிட்டார்கள், நம் சார் மாதிரி நன்கு பழக்கம் உள்ளவர்களுக்கு மட்டுமே இங்கு தங்க அனுமதி கிடைக்கும், இப்போது நமக்குக் கிடைத்திருப்பது போல,” என்று மகதி விளக்கினாள்,

அந்தக் கடைசி நாலு வார்த்தைகளைக் கூறாமல் இருந்திருக்க வேண்டும் என்று அவளுக்கு அப்போது தெரியாது!

இதே போல இன்னும் இரண்டு கோயில்களுக்கும் போய் வருவதாகத் திட்டம்

இருந்தது, ஆனால் நிரஞ்சனுக்கு ஏனோ அதில் ஈடுபாடு இல்லாது போய்விடவே இருவரும் திரும்பி வந்துவிட்டனர்,

கணவனின் முகம் வாடி இருப்பது போலத் தோன்றவும் மகதி கவலையோடு விவரம் கேட்டாள்,

“வெய்யில் தாங்கவில்லையா ரஞ்சன்? கோயில்களில் கூட உள்ளே தரிசனம் செய்ய வராமல் கோயில் ஆட்களோடு பேசிக்கொண்டு வெளியேயே தங்கிவிட்டீர்களே?” என்று கவலையுடன் விசாரித்தாள்,

“அ...துவா? கொஞ்சம் தலையை வலித்தது, காகாற்றாட இருந்தால் சரியாகிவிடும் என்று நினைத்தேன், ஆனால் ... “ என்று நெற்றிப் பொட்டை அழுத்திவிட்டான் அவன்,

“ஐயோ! உட்காருங்கள், என்னிடம் தலைவலித் தைலம் இருக்கிறது, தேய்த்து விடுகிறேன்,” என்று அவசரமாக ஓடிப் போய்ப் பெட்டியைத் திறந்தாள் மனைவி,

“ஆச்சரியம், உனக்குக் கூடத் தலைவலி வருமா?” என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினான் அவன்,

“பொதுவாக வருவதில்லை, ஆனால் சில சமயம் சார் இரவு பகல் பாராமல் வேலை வாங்குவார், அதிகம் இரவில் விழிக்கும்போது அவ்வப்போது வலிக்கும், தைலம் தடவினால் உடனே எனக்குச் சரியாகிவிடும், உங்களுக்குக் கொஞ்சம் தடவி விடட்டுமா?” என்று தலைவலித் தைலத்தோடு அவன் அருகில் வந்தாள் மகதி,

அவளது கைக்கு எட்டாதபடி தலையைத் தள்ளி வைத்துக்கொண்டு “வேண்டாம் மகதி, இது போன்ற தைலங்களை எல்லாம் பொதுவாக நான் பயன்படுத்துவது இல்லை,

தலையைத் திருப்பிக்கொண்டு. “இல்லை, வேண்டாம், ஏன்

தலைவலி வந்தது என்று ஆராய்ந்து மூல காரணத்தை விலக்க வேண்டுமே தவிர. இது போன்ற இலகு வழிகளைத் தேட எனக்குப் பிடிக்காது, நீ தூங்கு, நான் சற்று நேரம் பால்கனியில் காற்றாட நின்றுவிட்டு வந்து படுத்துக் கொள்கிறேன்," என்றான் அவன்,

அவனது அழுத்தமான குரலோடு. அன்றைய அலைச்சலின் களைப்பும் சேர்ந்து கொள்ள. மகதியும் மறுத்துப் பேசாமல் படுத்ததோடு உடனே உறங்கியும் விட்டாள்,

அதுவும் நிரஞ்சனுக்கு அதிர்ச்சியாகவே இருந்தது, சற்றும் கலவரமே இல்லாமல் இவளால் எப்படி உறங்க முடிகிறது?

ஒருவேளை ... ஒருவேளை எல்லாம் பழகிவிட்டவைகளா? மற்றபடி எப்படி முடியும்?

அவனால் அமைதியாக மூச்சுக் கூட விட முடியாதபோது இவள் மட்டும் எப்படிக் கவலையற்று உறங்குகிறாள்?

நிரஞ்சனுக்கு உள்ளூரஒரே தவிப்பாக இருந்தது, ஏனெனில் அன்று சென்ற இடங்களில் நடந்தவை நிரஞ்சன் சற்றும் எதிர்பாராதவை,

சாமான் எடுத்து வைத்தவர்கள்தான் ஏதோ கூறினார்கள் என்றால். மகதியைத் தரிசனத்துக்காகக் கோயிலுக்குள் அனுப்பிவிட்டுக் கோயிலில் பொறுப்புள்ளவர்கள் போலத் தோன்றியவர்களோடு பேசி அறிந்த விவரங்களும் சரியானதாக இருக்கவில்லை,

முதல் முறையாக அவசரப்பட்டு மணந்துவிட்டோமோ என்ற கவலை அவனுக்கு உண்டாயிற்று,

ஆய்வாளர் சூட்சுமன் சொன்னது போல. வயதுக் கோளாறில் முகத்தை மட்டும் பார்த்து மயங்கிவிட்டானோ?

ஒரு மோசமான ஒரு பெண்ணைப் பெரிய வீட்டு மருமகளாக ஊருக்கு எப்படி அழைத்துப் போவது?

அதிலும். உறவுப் பெண்ணின் நடவடிக்கைகள் பிடிக்கவில்லை என்று மறுத்துவிட்டு?

உள்ளத்தில் புயல் வீச. நிரஞ்சன் கிணறித் திண்டாடினான்,

“என்னப்பா. இன்னும் முகம் சரியாக இல்லையே! இன்னும் தலைவலி விடவில்லையா?” என்று கவலையாகக் கேட்டாள் அவள்,

காரணத்தைத் தேடத் தேவை இல்லாமல் மகதியே கூறிவிட. “ஆஆமாம், தலைவலிதான், அப்போது பிடித்தது விடவே இல்லை,” என்றான் நிரஞ்சன் மரத்த குரலில்,

# அத்தியாயம் - 6

இரவு முழுவதும் தலைவலி விடவில்லை என்று நிரஞ்சன் கூறவும் மகதி துடிதுடித்துப் போனாள்,

“ஐயோ. இரவு முழுதும் நீங்கள் வலியினால் அவதிப்பட்டுக் கொண்டு இருந்திருக்கிறீர்கள். நான் மரக்கட்டை மாதிரி தூங்கியிருக்கிறேன், சே! என்ன மட்டி நான்! நீங்கள் என்னை எழுப்பி இருக்கலாமே. ரஞ்சன். தனியே கிடந்து கஷ்டப்பட்டிருக்கிறீர்களே!” என்று மிகவும் வருத்தப்பட்டாள்,

“உன் தூக்கத்தைக் கலைக்க வேண்டாம் என்று நினைத்தேன்,” என்றான் அவன்,

“அதற்காகத் தலைவலியோடேயே இரவு முழுவதும் கஷ்டப்பட்டீர்களா? தைலப்  பழக்கம் வேண்டாம் என்றாலும் கைகளாலாவது பிடித்து விட்டிருப்பேனே ரஞ்சன்! கடவுளே. ஒன்றும் செய்யாமல் இப்படித் தூங்கினோமே என்று எனக்கு அவமானமாக இருக்கிறது,” என்று வருத்தப்பட்டாள் அவள்,

நிஜம் போலப் பேசுகிறாளே! ஆனால் நிஜம் போல மட்டும்தான், இது நிஜமாக இருப்பது கடினம்! எனவே இதில் மேலும்  ஏமாறுவது பெரும் தவறு! மடத்தனம்!

“உன் தூக்கத்தைக் கலைக்க விரும்பவில்லை என்று ஏற்கனவே சொன்னேனே,” என்றான் அவன் சற்று அழுத்தமாக,

“ஆமாமில்லை? ஆனால் உங்களுக்கு வலி குறையவே இல்லை போல இருக்கிறதே! காஃபி வரவழைக்கிறேன். ரஞ்சன், சூடாகக் காஃபி குடித்தால் கொஞ்சம் வலி குறையக் கூடும், “ என்று அறையில் இருந்த டெலிஃபோனிடம் வேகமாகச் சென்றாள் மகதி,

இந்தக் கரிசனம். பரிவு எல்லாமே நடிப்பாக எப்படி இருக்கக் கூடும்?

இல்லை, அவசரப்பட்டு முடிவெடுக்கக் கூடாது,

ஆனால் வேறு எப்படி இவளைப் பற்றி அறிவது? துப்பறியும் நிறுவனம் எதையாவது தொடர்பு கொண்டு வரவழைத்து மகதியைப் பற்றி விசாரிக்கலாமோ? ஆனால் அதற்கு சற்று அதிக அவகாசம் தேவைப்படுமே ...,

அதுவரை இவளோடு தனியாக இருப்பதா? அதற்குள் இவளது நடிப்பில் மனம் இளகிவிட்டால்?

நேற்று அவ்வளவு நடந்தும். இன்று இவள் பேசுவது உண்மை

போலவே தோன்றுகிறதே!

நிரஞ்சன் குழப்பத்தில் இருக்கும்போதே. முகம் கைகால் கழுவிக்கொண்டு மகதி அவனிடம் வந்து நின்றாள்,

“நான் போய் சூட்சுமன் சாரிடம் உங்கள் தலைவலி பற்றிச் சொல்லி ஆலோசனை கேட்டு வரட்டுமா? நேற்றிலிருந்து இந்த வலி விடவில்லை என்றால் எனக்குக் கவலையாக இருக்கிறது. ரஞ்சன், நம் சார் சித்தா. அலோபதி இரண்டையுமே பார்ப்பார், அப்போது இருக்கும் பிரச்சினைக்கு ஏற்ற மருத்துவரிடம் போவார், உங்களது அறிகுறிகளைச் சொல்லி எது மேல் என்று அவரிடம் கேட்டு வருகிறேனே, இதை மொபைலிலேயே கூடக் கேட்கலாம், ஆனால் நேரில் போய்ச் சொன்னால் இன்னமும் நன்றாகப் புரிந்து கொள்வார் என்று எனக்குத் தோன்றுகிறது, நேரில் போனால் அப்படியே அவர் சொல்லும் அந்த மருத்துவரையும் அழைத்தும் வந்துவிடுவேன், “ என்றாள்,

“ஆய்வாளர் உனக்கு வேலை கொடுத்தவர் மட்டும்தான், ஆனால் எதற்கும் அவரைக் கேட்க நினைக்கிறாயே!” என்றான் நிரஞ்சன்,

வெறுமனே  வேலை கொடுத்தவரா? எவ்வளவு இருண்ட வாழ்விலிருந்து அவளைக் காத்தவர் சூட்சுமன் சார்!

“ஆய்வாளர் எனக்குத் தந்தை மாதிரி. ரஞ்சன்!” என்றாள் அவள் உணர்ச்சி பொங்க, “முதலில் இருந்தே என் தேவைகள் அறிந்து உதவுகிறவர், வேலையில் கண்டிப்பாக இருந்தாலும். உடம்புக்கு ஏதாவது வந்து முகம் வாடி இருந்தால் அதைக் கவனித்து ஓய்வு எடுத்துக்கொள் என்று திருப்பி அனுப்பி விடுவார்! மருத்துவம். மற்ற தேவைக்குப் பணம் கூடத் தருவார்! “ என்றாள்,

“அதாவது நல்லவர் என்கிறாய், அப்படித்தானே?”

விழி விரித்துப் பார்த்துவிட்டு “ஆமாம் ரஞ்சன், நிச்சயமாய்!” என்றாள் மகதி,

அதற்கு மேல் நிரஞ்சன் தாமதிக்கவில்லை, தாமதிப்பதாக இல்லை,

இவள் இன்னும் எதற்காகவேனும் இப்படி வட்டமாக விழியை விரித்துப் பார்த்தாளானால். வெள்ளச் சுழலில் மாட்டிக் கொள்வது போல அவன் மீள முடியாமல் முழுகி விடலாம், அது போன்ற விஷயங்களுக்கு இடம் கொடுக்கவே கூடாது!

வேறு ஒரு டீஷர்டை எடுத்து மாட்டியபடி. அவளது கண்களைப் பாராமலே அவன் பேசினான்,

“ஆய்வாளர் சொல்லும் மருத்துவர் ஹோட்டலுக்கு வர மறுக்கலாம்,

அதனால் நானே நேரில் போய்ப் பார்த்துவிட்டு. மேலே யாரிடம் போவது பற்றியும் பார்த்துவிட்டு வந்து விடுகிறேன், நீ குளித்துச் சாப்பிடு, எனக்காகக் காத்திருக்க வேண்டாம், நான் போகிற வழியில் வெளியேயோ. வந்தோ பார்த்துக் கொள்ளுகிறேன்," என்றுவிட்டுக் கிளம்பிச் சென்றான்,

குளித்துத் தயாராகிஉட்கார்ந்திருந்த சூட்சுமனைப் பார்த்ததும். அவர் தன்னை எதிர்பார்த்திருந்தாரோ என்று நிரஞ்சனுக்குத் தோன்றியது,

உடனேயே ஒருவர் தன் வேலையாகத் தயாராகி இருந்ததைக் கூடத் தனக்காகவோ என்று நினைப்பதா என்று தன்னைத்தானே கடிந்துகொண்டான்,

"வாருங்கள். வாருங்கள், சற்று நேரத்தில் காலை உணவு வந்துவிடும், எதற்கும் இருக்கட்டுமே என்று சற்றுக் கூடுதலாகவே யாயாரேனும் காலை நேரத்தில் வந்தால் அவருக்கும் கொடுப்பதற்காகச் சற்று அதிகமாகவே அனுப்பச் சொல்லுவேன், உங்கள் முகத்தைப் பார்த்தால் சாப்பிட்ட மாதிரித் தெரியவில்லை...அதனால் சேர்ந்தே சாப்பிடலாம்," என்றார் அவர்,

அவனது வாழ்க்கையே இடிந்து தகர்ந்து போய்க் கொண்டிருக்கிறது, இந்த உணவு ஒன்றுதான் குறைச்சல்!

"இல்லையில்லை வேண்டாம், இவ்வளவு சீக்கிரமாக நான் சாப்பிடுவது இல்லை " என்று மறுத்துக் கொண்டிருக்கும்போதே அவன் வந்த காரியம் உறுத்த "உங்களிடம் தனியே பேச வேண்டும்," என்றான் சுருக்கமாக,

சூட்சுமனுக்கு உள்ளூர ஒரே பரபரப்பு,

இவன் என்ன சொல்லப் போகிறான்? இவன் போன காரியம் காயா பழமா?

அதாவது. அவருக்கு வெற்றியா இல்லையா?

மூன்று இடங்களில் மகதி பற்றி விசாரிக்கச் சொல்லியிருந்தார்,

கடைசி இடத்துக்குக் கணவனும் மனைவியும் போகவே இல்லை என்று கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தார், ஆனால் முதல் இரண்டு இடங்களிலேயே இவனுக்குத் தெளிவாகிவிட்டதா?

அல்லது. எதையும் விடப் பெண்டாட்டிதான் பெரிது என்று சொல்லப் போகிறானா?

எதையானாலும் இந்த நிரஞ்சன் அதைச் சற்று விரைவாகச் சொல்லிவிட்டால் நன்றாயிருக்கும், மற்றபடி காற்று வீசும் திசை தெரியாமல் முந்திக்கொண்டு எதையாவது சொல்லிக் காரியத்தைக் கெடுத்துக் கொள்ள அவருக்குச் சிறிதும் பிரியமில்லை,

அதே சமயம் இந்த “டென்ஷன்” அவருக்குத் தாங்கவுமில்லை,

நல்லவேளையாக ரொம்ப நேரம் காக்க வைக்காமல். நிரஞ்சன் பேசத் தொடங்கினான்,

“வந்து ...................................... நான் சீக்கிரமே சென்னைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது, மகதி பற்றி இன்னும் கொஞ்சம் தெளிவாகிவிட்டால் எனக்கு வசதியாக இருக்கும், அஅதாவது ... அவளுக்கு ,நீங்கள் ஒரு தந்தையைப் போன்றவர் என்று ........ இங்கே அவளைப் பற்றி உங்களுக்குத்தான் நன்றாகத் தெரியும், அவளைப் பற்றி விருப்பு வெறுப்பில்லாமல் உங்களால் என்னிடம் விவரம் சொல்ல முடியுமா?” என்று கேட்டான் அவன்,

தந்தையைப் போன்றவரா?

அந்த வார்த்தைகளைச் சொன்னதற்கு இவனை ஓங்கி நாலு சாத்து சாத்தலாம்,

அவருக்கு மூளை வேலை அதிகம், அதனால் தலை நரைத்துவிட்டது, அதற்காக வயதாகிவிடுமா? வெறும் இளநரை, சாயம் தடவினால் இவனை விட இளமையாகத் தோன்றுவார்! அவரைப் போய் .............

ஆத்திரமாக எண்ணமிடும்போதே நிரஞ்சன் கேட்டது நினைவு வந்து சூட்சுமனை நிதானப்படுத்திற்று,

இந்த நல்ல வாய்ப்பை நழுவ விடலாமா? தப்பில்லை?

லேசாகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார் அவர், “என்ன நிரஞ்சன் தம்பி. எல்லாம் உல்டாவாகப் பண்ணுகிறீர்களே!” என்றுரைத்து லேசாகச் சிரித்தார்,

இந்தக் கிண்டல் இவனை உசுப்புமா?

“நீநீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?”

“நடப்பு முறையைச் சொல்லுகிறேன், சின்ன வயதில்லையா? உங்களுக்கு உலக நடப்பு தெரியவில்லை, ஒரு பெண்ணைப் பற்றிய விசாரிப்பு. ஐயம் தெளிதல் எல்லாம் முதல் முயற்சியாகச் செய்துவிட்டு அப்புறம் அல்லவா திருமணம் செய்திருக்க வேண்டும்? நீங்கள் விழுந்தடித்து வேகவேகமாய்த் திருமணத்தை முடித்துவிட்டு. சாவகாசமாக இப்போது வந்து மகதியைப் பற்றி விசாரிக்கிறீர்களே! அவசரத்தில் திருமணம் செய்துவிட்டு அவகாசத்தில் அழு என்று ஒரு பழமொழியே இருக்கிறதே! இந்த விவரம் நீங்கள் முன்பே கேட்டிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்குமே! பாவம்! உங்களுக்கும் வயது மயக்கம்!” என்றார் சூட்சுமன் சற்று வருத்தமான குரலில்,

“அப்படி என்றால் என்ன அர்த்தம்? அவளைப் பற்றி நீங்கள்

இன்னமும் சொல்லவில்லையே?”

“மகதியைப் பொறுத்த அளவில். வேலையில் மகா கெட்டிக்காரி, எள் எனுமுன் எண்ணைதான்! ஆனால் .......................................................”

“ஆனால் என்ன? அவளது நடவடிக்கைகள் எப்படி? நடத்தை ... அது பற்றிச் சொல்லுங்கள்,” என்று பதட்டத்தை அடக்க முயன்றபடிக் கேட்டான் அவன்,

“ம்ம்ம் ... அது பற்றி நான் என்ன சொல்ல? எனக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது, அவளது சொந்த வாழ்க்கை பற்றி ...எனக்கென்ன வந்தது. சொல்லுங்கள்? அதில் எந்த உரிமையும் ... நான் எடுத்துக்கொண்டது இல்லை, அதனால் அது பற்றிப் பெரிதாகக் கவனித்தது இல்லை... “

“கண்ட அளவில் சொல்லுங்களேன், ப்ளீஸ்!”

கூடக் கொஞ்சம் பிகு செய்தால் காலிலேயே விழுவானோ? ஆனால் பொறுமை இழந்து போய்க் கேளாமலே திரும்பிப் போய்விட்டால் தப்பாயிற்றே!

“அது வந்து ... பாருங்கள் தம்பி. அவளுக்குப் பெற்றவர்கள் சின்ன வயதிலேயே போய்விட்டார்கள், மற்றபடியும் பெரியவர்களும் யாரும் அவனோடு கூட இல்லையல்லவா? ஒழுக்கம் பற்றிச் சொல்லிக் கொடுக்க ஆள் இல்லை! தப்பு சரி தெரியாது பாவம்! வந்து ...இதைச் சொல்ல எனக்கு மனம் இல்லைதான், ஆனால் நம்பிக்கையாய் வந்து கேட்கிறீர்களே! சில சமயம் ... வயது பாராமல் என்னிடம் வந்து ஒரு மாதிரி நிற்பாள், மாதாமாதம். பசு வெறிக்கிறது என்பார்களே. அந்த மாதிரி நாட்கள் என்று ஊகித்து.லீவு கொடுத்துக் கொஞ்சம் பணமும் தந்து அனுப்பி விடுவேன்! எப்படியோ எங்கேயோ அது. திருப்தியாகி விட்டால். அவள் ரொம்பவும் நல்ல பெண்தான், அப்புறம். வேலையில் மகா சுறுசுறுப்பு வந்துவிடும், கெட்டிக்காரி, அசராமல் உழைப்பாள், சம்பளம் கொடுக்கிற எனக்கு அதுதானே வேண்டும்? மற்றதில் நான் தலையிடுவது இல்லை! “ என்று ஓரக் கண்ணால் அவன் முகத்தைப் பார்த்தார் சூட்சுமன்,

அங்கே கண்டது அவருக்குத் திருப்தியாக இருந்தது,

ஏனெனில் முக பாவனையில் நிரஞ்சனுக்கு இருந்த கட்டுப்பாடு காணாமல் போயிருந்தது,

மகதி மட்டும் அவன் முன்னே இருந்திருந்தால் அவளை என்ன செய்திருப்பானோ!

“தேவை அறிந்து உதவுகிறவர்” என்றாளே. இப்படியா?

குமட்டுவது போல அவன்உணர்ந்தான், நிஜமாகவே அப்படி

நேர்ந்துவிடுமுன் எழுந்து நடந்தான், இதற்கு மேல் இவரிடம் கேட்பதற்கும் எதுவுமில்லை,

தந்தையாக நினைக்கிறவரிடம் .....அதுதான் தப்பு சரி தெரியாதவள் என்கிறாரே!

சூட்சுமன் சொன்னது சரிதான்,

அவனுக்கும் வயது மயக்கமாகவே இருக்கக் கூடும், மற்றபடி நாலு பேரிடம் விசாரிக்காமல் யாரோ ஒருத்தியை எப்படி மணப்பான்?

எவ்வளவு பெரிய பிழை நேர்ந்துவிட்டது!

அவனுடைய அருமைத் தாய் இருக்கும் இடத்துக்கு இவளை எப்படி அழைத்துப் போவது? தாயார் முன்னே நிற்கவும் தகுதியற்ற ஒருத்தியை மருமகள் என்று அறிமுகம் செய்யும் பாவத்தை அவன் எப்படிச் செய்ய முடியும்?

கால் போன போக்கில் நடந்தவன் சற்றே நிதானித்தான்,

பைத்தியம் போல இப்படி அலைய முடியாது, எங்கே இருக்கிறோம் என்று பார்க்கையில் மகதி முன்பு குடியிருந்த இடம் என்பது புரிந்தது,

இங்கே ஏன் வந்தான்? அவளது ஈர்ப்பு தெளியவில்லையா?

அல்லது. இங்கே அவனுக்கு ஏதோ தெரிய வேண்டுமா? ஆய்வாளரின் அபிப்பிராயம் கூடத் தவறாக இருக்கலாமே!

பெருமளவு நம்பிக்கை இல்லைதான், என்றாலும் அந்த அறைகளின் பொறுப்பாளரிடம் சென்று. மகதியைப் பற்றி விசாரித்தாள்,

“வேவேலை நேரம் போக மகதி எப்படிப் பொழுது போக்குவாள்,” என்று கேட்டவன் அவசரமாக. “வந்து டீவி பார்ப்பாளா?” என்று சாதாரணம் போல விசாரித்தான்,

“டீவியா? இது போலக் கோயில் வளாகத்து மலிவுக் குடியிருப்பில் டீவி எல்லாம் வைத்துக் கொடுப்பார்களா. சார்?” என்று பதில் கேள்வி கேட்டார் அவர்,

தொடர்ந்து. “அதற்கெல்லாம் அவளுக்கு நேரம் ஏது? பொதுவாக மகதி நேரத்தில் வருவதே அபூர்வம், வேலை இழுத்து விடும் என்று நினைக்கிறேன், ஆய்வாளரே சொல்லிவிட்டதால் யாரும் அதைப் பற்றி எதுவும் விசாரிப்பதில்லை, சில நாட்கள் இங்கே அறைக்குத் திரும்பி வரவே மாட்டாள், மற்றபடியும். கல்வெட்டு. பழைய பத்திரம் பார்க்க என்று அவ்வப்போது வெளியூருக்குப் போய்விடுவாள், “ என்றார் பொறுப்பாளர்,

ஆய்வாளர் சொன்ன “அந்த” நாட்களா?

தொண்டைக்குள் கசந்தது நிரஞ்சனுக்கு,

என்ன ஆனாலும் மகதியை அவனது இல்லத்துக்குக் கூட்டிப் போவது நடவாத காரியம்!

அதிலும் எதையோ பார்த்து அசிங்கப்பட்டு வந்தவன். அதிலும் பல மடங்கு மோசமான இந்தக் கேவலத்தை எப்படிப் பொறுப்பான்?

எல்லாம் முடிந்து போயிற்று என்று மனதில் உறுதியாகத் தீர்மானித்துவிட்ட போதும் இந்த முடிவை மகதியிடம் எப்படிக் கூறுவது என்று புரியாமல் நிரஞ்சன் சற்றுத் தயங்கினான்,

ஆனால். தப்பு செய்தவளே ஒரு கவலையும் இல்லாமல் சுற்றி வரும்போது. உத்தமனான அவனுக்கு எதற்காகத் தயக்கமும் திணறலும்?

உடம்பிலும் மனதிலும் உறுதியை வரவழைத்துக்கொண்டு ஹோட்டல் அறையை அடைந்தான்,

அவனைப் பார்த்ததுமே அவள் கேட்ட முதல் கேள்வி “சாப்பிட்டீர்களா?” என்பதுதான்,

இதைக் காதலியின் கரிசனம் என்று எடுத்துக்கொள்ள வேண்டுமா?

“முகம் இன்னும் சரியாகவில்லையே!” என்றாள் அவளே தொடர்ந்து,

அவனுக்கு மனம் சலித்தது, இந்த நடிப்பை எல்லாம்தான் பத்திருபது நாட்களாக அனுபவித்தாயிற்றே! திகட்டும் வரை!

“அது எப்படியோ போகட்டும், உன்னிடம் பேச வேண்டும், உட்கார்” என்றான்,

“என்ன?” என்று அவன் அருகில் அமர வந்தவளிடம் அவசரமாக “அங்கே,” என்று ஒரு தனி நாற்காலியைக் காட்டினான்,

“ஓ! முக்கியமாகப் பேச வேண்டுமா?” என்று முறுவலித்தபடியே போய் அமர்ந்து “என்ன. சொல்லுங்கள்,” என்றாள் மகதி,

இவளுக்கு நடிப்பு என்ன இயல்பாக வருகிறது! ஆனால் இன்னமும் இதில் ஏமாறுவதற்கு நிரஞ்சன் முட்டாள் அல்லவே!

பார்வையை அவளிடம் இருந்து அகற்றிக்கொண்டு “சுற்றி வளைக்க வேண்டாம் என்று எண்ணுகிறேன், சொல்லு உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?” என்று கேட்டான் அவன்,

“பணமா? என்ன பணம்? இப்போது எனக்கு எதற்காகப் பணம்?” என்று புரியாமல் வினவினாள் மகதி,

அவனது பதில் சுருக்கமாக இருந்தது, “அதற்காகத்தானே இந்த நாடகம்?”

“நாடகமா? என்ன நாடகம்? இப்போதும் புரியவில்லை ரஞ்சன்,” என்று உதட்டைப் பிதுக்கினாள் மகதி,

இந்த உதட்டுப் பிதுக்கலுக்கு ஒரு தனி ஈர்ப்பு உண்டு, இனிய தொடர்ச்சியும் உண்டு, ஆனால் இப்போது அவனுள் ஆத்திரம் மண்டியது,

இப்படி அவனை இன்னமும் மயக்கப் பார்க்கிறாளா? சினம்

பெருக. “புரியாமல் போவானேன்? பார்த்துப் பத்தே நாட்களில் படுக்கைக்கே வந்து சுகத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கிறவளுக்கு விலை கொடுக்க வேண்டாமா? அந்த விலைதான் என்ன என்று கேட்கிறேன், சொல்லு உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?” என்று இறுகிய குரலில் கேட்டான் அவன்,

சரியாகச் சொல்வதானால் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் எனலாம்,

அவன் சொன்ன விதத்தில் அவனது பேச்சு விளையாட்டோ நடிப்போ அல்ல என்று மகதிக்குத் தெளிவாயிற்று,

உண்மையாகவே அவளைக் கேவலமாக நினைத்து அவளது காதலுக்கு விலை கொடுப்பதாகச் சொல்லுகிறான்,

ஒரே ஒரு வேறுபாடு, அவளது அன்பை அவன் காதலாக நினைக்கவில்லை, மாறாகப் பணத்துக்காக நடித்ததாகச் சொல்லுகிறான்!

ஆனால் ஏன்? எப்படி இவனால் இப்படி நினைக்க முடிந்தது?

கண்ணை இருட்டி நெஞ்சை அடைத்து ...உடலில் என்னென்னவோ செய்தபோதும் பிடிவாதமாக அதையெல்லாம் ஒதுக்கி யோசித்தாள்,

அவளது அன்பில் குறையிருந்ததா? இல்லையே! முழு மனதோடு அவனோடு இணைந்தாளே!

பின்னே? ஒருவேளை அவன் பக்கம் அப்படி இல்லையோ?

ஆனால் அதுவும்தான் ஏன்?

ஏன் என்பதற்குப் பெரிய ஊகங்கள் தேவையிருக்கவில்லை,

இழப்பு அவளுக்குப் புதியது அல்ல! என்றாலும் இவனுமா? .....

கசந்த முறுவலுடன் “முந்தினவன் கை மந்திர வாளா?” என்று வெறுப்புடன் வினவினாள் அவள்,

இப்போது “புரியவில்லை,” என்றவன் நிரஞ்சன்,

“புரியாமல் போவானேன்? கோர்ட்டில் கூட முதல் புகாருக்குத்தான் அதிக மதிப்பு என்று படித்தேன், விடுமுறை நாட்களை உல்லாசமாகக் கழித்துவிட்டு இப்போது உத்தம புத்திரனாக வீட்டுக்குப் போகப் போகிறீர்களாக்கும்!” என்றாள் அவள் ஏளனமாக,

இடையில் ஒரு பெண்ணின் வாழ்வு பாழாவது பற்றி அவளுடைய ரஞ்சனுக்கு ஒன்றுமே இல்லையா? ஆனால் அவன் அவளுடைய ரஞ்சனாக இருக்கவே இல்லையோ?

இல்லை என்று சொல்லாமல் சொன்னான் நிரஞ்சன்,

“வேறு வழி? என் குடும்பத்தாரிடம் உன்னை என்னவென்று சொல்லி அவர்களுக்கு அறிமுகப்படுத்துவது?” என்றுதிருப்பினான் அவன்,

இப்படியெல்லாம் கூறி அவளை விலக்க முடியுமா? ஆனால் அவள் தனது சமூக. பொருளாதார நிலையை மறைத்ததே கிடையாதே, இந்தக் கேள்வி இவன் எப்படிக் கேட்கலாம்?

விக்கு விக்கென்று தொண்டையை அடைத்தபோதும் சும்மா இருந்து நடப்பதை விதி என்று ஏற்றுக் கொள்ளும் தருணம் இது அல்ல,

“எனக்கு எந்த விதமான அந்தஸ்தும் கிடையாது என்பதை நான் ஒருபோதும் மறைத்தது இல்லையே!” என்று நிமிர்வுடனேயே அவனிடம் கேட்டாள்,

அதையெல்லாம் பெரிதாக எண்ணியிருந்தால் அவன் அவளை நிமிர்ந்தேனும் பார்த்திருப்பானா? ஆனால் இவளுக்கெல்லாம் பதில் வேறு சொல்ல வேண்டியிருக்கிறது!

வெறுப்புடன் நோக்கி. “அதை நானும் பெரிதென்று பொருட்படுத்தியது இல்லை, ஆனால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்று என் பெற்றோர் எனக்குக் கற்றுத் தந்திருக்கிறார்கள்! “ என்றான் கறார்க் குரலில்,

“பின்னே நான் மட்டும்?”

“அதை மற்ற யாரும் சொல்லக் காணோமே! “

“அதனால்?”

திருப்பித் திருப்பி மகதி கேட்கக் கேட்க நிரஞ்சனின் சீற்றம் அதிகரித்துக் கொண்டே போயிற்று, தப்புச் செய்கிறவளுக்கு இவ்வளவு திமிரா?

இதற்கு மேல் இவளுக்குப் பதில் சொல்லத் தேவையில்லை என்று எண்ணினான்,

தன் முழு உயரத்துக்கும் நிமிர்ந்து நின்று. "அதனால்தான் கேட்கிறேன், உன்னுடன் பழகும் மற்ற ஆண்களிடம் நீ எவ்வளவு வாங்குவாயோ அதற்கு இருமடங்கு தருகிறேன் , பெற்றுக்கொள்!" என்றான் அழுத்தமான குரலில்,

அநியாயம் செய்வதற்கும் அளவு இல்லையா?

அவன் கேட்டதற்குப் பதில் கூறாமல் "போ வெளியே!" என்று முழங்கினாள் மகதி, வினாடி தயங்காமல். "எங்கே இருந்துகொண்டு யாரை வெளியே போகச் சொல்லுகிறாய்?" என்றது அவனது பதில் சீறல்,

சில தரம் கண்களை இறுக மூடி மூடித் திறந்தாள் மகதி,

பிறகு அடங்கிய குரலில் மெதுவாகப் பேசினாள், "தப்புதான், இந்த அறைக்கு வாடகை கட்டியிருப்பது நீங்கள், இங்கே யாரைத் தங்க வைப்பதும் வெளியேற்றுவதும் உங்கள் உரிமைதான், உங்களை நான் வெளியே போச் சொன்னது வடிகட்டின முட்டாள்த்தனம், ஆனால். இங்கே உங்களோடு தங்க மனமில்லாதவர்களுக்கு வெளியேற உரிமை உண்டுதானே? இதோ. நானே போகிறேன், போக மறுத்துத் தொல்லை செய்வேனோ என்று அது வேறு உங்களுக்கு ஏன் வீண் பயம்?" என்றவள் வேகமாகச் சென்று அறையில் இருந்த பெரிய அலமாரியைத் திறந்தாள்,

அடித் தட்டில் வைத்திருந்த. அந்த அறைக்கே பொருந்தாத விலை குறைந்த அவளது தோள்பையை எடுத்தாள்,

அவன் பணத்தில் வாங்காத அவளது பழைய துணிமணிகளை எடுத்துப் பையில் திணித்தாள், அவளது படிப்பு. மற்றும் பாங்க் புத்தகங்கள் அவளது கைப்பையிலேயே இருந்தன, அதையும் எடுத்துக்கொண்டு. அவன் முகத்தை நிமிர்ந்துகூடப் பாராமல் மடமடவென்று அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட்டாள்,

போகிறேன். வருகிறேன் என்று எதுவும் சொல்லவில்லை,

அவளை நேரே பார்த்தானோ பார்க்காவில்லையோ. அவளது வேகமான அசைவுகள் அவனுக்குத் தெரிந்துதான் இருக்கும், ஆனால் அவன் எதுவும் சொல்லவில்லை,. அவளைத் தடுக்கவும் இல்லை!

இருந்த இடத்தை விட்டு அசையவுமில்லை,

வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல நேராக அவளது அறையை அடைந்த மகதி அவளது மலிவாக கயிற்றுக் கட்டிலில் தொப்பென விழுந்து குமுறி அழலானாள்,

ஆற்ற. தேற்ற யாருமின்றி!

# அத்தியாயம் - 7

இதில். நிரஞ்சன் மகதி இருவருமே அறியாத ஒன்று உண்டு,

அதுதான் ஐம்பது வயதான ஆய்வாளர் சூட்சுமன் செய்த சதி,

அவரைப் பொறுத்த அளவில். அவருக்கு மகதி செய்த பணி. அவருக்கு இன்றியமையாதது, அது இல்லாமல் அவரது கட்டுரைகள் ஒன்றுமே இல்லை!

அலைந்து திரிந்து மூலை முடுக்கெல்லாம் சென்று அவள் சேகரித்து வந்த தகவல்கள், நம்பகமான உண்மைத் தகவல்கள்,

இந்தப் பணிகளை அவள் முழு மனதோடு செய்யச் செய்ய. அந்த மாதிரி உழைப்பை அவர் மறந்தே போனார் எனலாம்,

மகதியின் குறிப்புகள் இல்லாமல் அவரது கட்டுரைகள் கால் காசு பெறாது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும், எனவே அவள் வேலையை விட்டு விலகி விட்டால்.  அவர் திருவோடு ஏந்த வேண்டியவரே!

இன்னொன்று. ஒரு விஷயத்தில் இத்தனை காலம் அவரது கண்கள் குருடாகி இருந்தன,

காதல். கல்யாணம் குடும்பம் போன்றவற்றை அவர் எண்ணிப் பார்த்ததே கிடையாது, அந்த உணர்வுகள் தேவை எண்று அவர் நினைத்ததுமில்லை,

அதே போல மகதிக்கு அந்த உணர்வுகள் இருக்கக் கூடும் என்று அவர் எதிர்பார்க்கவுமில்லை,

திருமணமாகி இன்னொருவனோடு மகதி வாழ்கிறாள் என்று கேட்டபோது கூட. அந்த விஷயம் பெரிதாக அவரைப் பாதிக்கவில்லை,

இனி அவள் தன் பணியை ஒழுங்காகச் செய்வாளா என்ற கவலைதான், பெரும் கவலை அதுவே!

இவளை விட்டுவிடக் கூடாதே! அவரது வேலைக்காக அவள் அவருக்கு வெகுவாகத் தேவைப்பட்டாளே! இவளை எப்படித் தக்க வைப்பது என்று. அதுதான்  அவரது மூளையைப் பாதித்தது!

எப்படியாவது அவளை மறுபடியும் வேலை அடிமையாக இழுத்து வர வேண்டும் என்று அதே சிந்தனையாகத்தான் அவளை நாடிச் சென்றார்,

ஆனால். பாதி திறந்த கதவின் வழியே ஓர் அழகான ரோஜா நிற நைட்டியில் பூரிப்பில் மலர்ச்சியுடன் அவளைப் பார்த்ததுமே அவரது

மனம் ஏதேதோ எண்ணத் தொடங்கிவிட்டது,

இதை எப்படி அவர் தவறவிட்டார்?

மகதி காதல் வயப்பட்டிருகலாம் என்ற எண்ணமே அவருக்குத் தோன்றவில்லை,

மாறாக. கழுதை. செக்சுக்கு அலைகிறவள் என்று தெரிந்திருந்தால். என்றைக்கோ தொட்டு வசப்படுத்தியிருக்கலாமே என்ற எண்ணம் ஏற்பட்டது!

இப்போது சூட்சுமனுக்கு மகதியின் தேவை இரு மடங்காயிற்று, இரண்டு விதமாகவும் மாறிற்று,

ஆனால் நிரஞ்சனோடு நேரடியாக எந்த விதத்திலும் அவரால் போட்டி போட இயலாது, எனவே. குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்தார்,

நல்லவர் மாதிரி. நிரஞ்சனுக்கு ஓர் உபதேசம் செய்தார்,

அதே சமயம் அங்கங்கே நாம் ஆராய்ச்சி செய்த இடங்களுக்கு அழைத்துப் போய்க் காட்டுமாறு மகதியிடமும் கூறினார்,

அது மட்டுமல்ல, அப்படிப் போகிற இடங்களில். மகதிக்குக் கிடைத்த பரிவும் பிரியமும் கூட அவர் அறிந்ததே,

யாருமற்ற ஒரு சின்னப் பெண்ணின் உண்மையான உழைப்பும். மலர்ந்த முகமும். மற்றவர்களிடம் அவள் அன்பாகப் பழகும் விதமும்கூடப் பலரைக் கவர்ந்திருந்தது,

“நிரஞ்சன் மோசமானவன், புதுப் புது மலர்களைக் கொஞ்ச நாள் பயன்படுத்திவிட்டு அவர்களை மயக்கிக் கூட்டிப் போய் சிவப்பு விளக்கு ஏரியாவில் விற்கிறவன், மகதியிடம் சொன்னால் மயக்கத்தில் இருப்பதால் மண்டையில் ஏறக் காணோம், இவள் இதில் பழகியவள் மாதிரிக் காட்டினால்தான் தானே ஏமாந்துவிட்டதாக எண்ணி அவன் விலகிப் போவான், ஏதாவது சொல்லி அவனை விலக்க வேண்டும், எல்லாம் அவள் பிற்காலத்தில் அசிங்கப்படாமல் காப்பாற்றவே, “ என்று ஒரு மாதிரிப் பேசுமாறு ஆட்களை ஏற்பாடு பண்ணியவர் அவரே,

ஆனால் இந்த நாடகத்தில் அவருடன் ஒத்துழைத்தவர்கள். மகதியிடம் உண்மையான அன்புள்ளவர்களே!

உரிய நடிகர்களைச் சரியாகத் தேர்ந்தெடுத்து திறம்பட நாடகத்தை நடத்தி வெற்றி பெற்ற கெட்டிக்காரர் சூட்சுமனே!

அதுவும் அவளுக்கு நல்லது செய்வதாக எண்ணியே கூறும்படி செய்தது. அவரது திறமை,

ஆனால். அவரிடம் இப்படி ஒரு கள்ளம் இருக்கும் என்று யார்தான் நினைத்திருப்பார்கள்? அதற்குரிய சூசகமே அன்று வரை தென்பட்டது இல்லையே!

யாருமற்ற அவளுக்கு வேலையும் ஊதியமும் கொடுத்து கௌரவமாக வாழ வழி செய்கிறவர் என்று மகதியைப் போலவேதான் அவர்களும் எண்ணியிருந்தார்கள்,

மகதியைக் காப்பாற்றுவதாக நினைத்து அவளது வாழ்வை அழிக்க அவர்கள் உதவினார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது,

அது நாடகத்தை நடத்தி வைத்த சூட்சுமனைத் தவிர யாரும் அறியாதது,

நிரஞ்சன் மகதி உட்பட!

மகதி வெளியேறிப் போய்விட்டாலும். நிரஞ்சனால் அமைதி அடைய முடியவில்லை,

ஒரு பெண்ணின் முகத்தைப் பார்த்து இப்படியா அவன் ஏமாறுவது?

அதிலும் விழிப்போடு அந்த வலையில் இருந்து சாமர்த்தியமாகத் தப்பி வந்தவன்! அவனது பெருத்த ஏமாற்றமும் கோபமும் அவனிடமேதான் இருந்தது,

எல்லாவற்றையும் உதற முயன்றபடி இனி என்ன செய்வது என்று யோசித்தான்,

திருமணம் என்று ஒன்று நடந்தது என்பது தாயாருக்கு மட்டுமே தெரியும், அது பற்றிப் பேச விருப்பமில்லை,. நீங்களும் விட்டு விடுங்கள் என்று அவன் கேட்டுக் கொண்டால். தொணதொணப்பது தாயின் இயல்பு அல்ல!

கடவுளே! எப்பேர்ப்பட்ட தாயாருக்குப் பிறந்து. என்ன மடையனைப் போல நடந்து கொண்டான்! சே! சே! சே!

சுய வேதனையை ஒதுக்கி மேலே செய்வது பற்றி முடிவெடுத்தான்,

திரும்பிப்போக வேண்டியதுதான், தொழிலில் வெற்றிதான் உயிர் மூச்சு,. திருமணம் என்கிற பேச்சுக்கே இடமில்லை, அந்தப் பேச்செடுத்தால் மறுபடியும் வீட்டை விட்டுப் போய்விடப் போவதாகத் தந்தையிடம் உறுதியாகச் சொல்லி விட வேண்டியதுதான்,

அதற்கு மேல் பேச்சு எடுக்க முடியாத விதமாகச் சொல்ல வேண்டும், அது கூட இயலாது என்றால் தொழிலில் எப்படி ஜெயிக்க முடியும்?

வேறு ஒன்றும் இல்லை என்றாலும். மகதி அவனுக்கு எடுத்த முடிவை எந்தத் தடையையும் உடைத்து நிறைவேற்றிக் கொள்ளும் உறுதியைத் தந்திருக்கிறாள்! நஷ்டத்தில் லாபம்!

அடுத்து. தொழிலில் தீவிரமாக ஈடுபடவேண்டும்,

வேறு எதற்கும் இனி அவனது வாழ்வில் இடம் கிடையாது,

வருங்காலம் பற்றிய திட்டம் தயார், ஆனால் அந்த மகதி?

கெட்ட கனவாக நினைத்து மறந்து விடவேண்டியதுதான் என்று நினைத்தாலும். இந்த ஒரு வாரம் உலகை மறந்து வாழ்ந்தது அடியோடு மறப்பதாக இல்லை,

அந்த மகிழ்ச்சி அவளால் வந்தது அல்லவா? அதற்கான விலையைக் கொடுக்காமல் அதற்கு முற்றுப்புள்ளி எப்படி வைப்பது?

சரியாகச் சொல்வது என்றால் சும்மாக் கிடைப்பது ஒன்றும் கிடையாதே!

சற்று யோசித்துவிட்டு. மகதியின் பெயருக்கு. ஐந்து லட்ச ரூபாய்க்கு நிரஞ்சன் ஒரு செக் எழுதினான், ஒரு காகிதத்தில் “விலை” என்று எழுதி. அதையும் உள்ளே வைத்து. இரண்டையும் ஒரு கவரில் இட்டு ஒட்டினான்,

அந்தக் கவரை மகதியிடம் கொடுத்து விடுமாறு சூட்சுமனுக்கு இரண்டு வரி எழுதி. எல்லாவற்றையும் வைத்து ஒட்டி. அதை சூட்சுமனிடம் அளித்து விடுமாறு ஹோட்டலில் கொடுத்தான்,

மகதியின் துணிகளையும் மற்ற அவளது பொருட்களையும் ஒரு பெரிய பையிலிட்டு. அந்தப் பகுதியில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்த ஆசிரமத்தில் சேர்ப்பிக்குமாறு கூறி அதையும் ஹோட்டல் வரவேற்பிடமே ஒப்படைத்தான்,

அறையைக் காலி செய்து. அந்த ஊரை விட்டே கிளம்பி விட்டான்,

ஒரு மூச்சு அழுது தீர்த்த பிறகும் மகதியால் இயல்புக்குத் திரும்ப முடியவில்லை, அழுதால் மனதின் பாரம் குறையும் என்று சொல்வதெல்லாம் அவள் விஷயத்தில் முழுப் பொய்யாகிப் போயிற்று, நெஞ்சின் பாரம்தலையிலும் ஏறிக் கொண்டதுதான் மிச்சம்!

இந்நிலையில் சூட்சுமனிடம் இருந்து அவளுக்கு அழைப்பு வந்தது,

வேலை என்று வந்தால் ஆய்வாளர் சாருக்கு அவள் யந்திரம்தான்,

ஆனால் உயிரும் உணர்வும் உள்ள இந்த யந்திரத்தால் இப்போது என்ன வேலை செய்ய முடியும்?

“என்னால் இப்போது வேலை ஒன்றும் செய்ய முடியாது சார்,” என்று அவள் மறுத்ததை அவர் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை,

“பரவாயில்லை, இங்கே வந்து விஷயம் என்ன வென்று கேட்டுவிட்டுப் போ,” என்று பேச்சை முடித்துவிட்டார்அவர்,

இப்படி அவர் கூப்பிடும்போது போய்த்தானே ஆக வேண்டும்? ஆனால் தன்னால் இப்போது எந்த வேலையும் செய்ய இயலாது என்று சொல்லிவிட்டு வந்துவிட வேண்டும் என்று எண்ணியபடி முகத்தைக் கழுவிக்கொண்டு மகதி ஆய்வாளர் தங்கியிருந்த பகுதிக்குச் சென்றாள்,

சூட்சுமன் தங்கி இருந்த இடமும் கோயிலைச் சார்ந்ததே என்றாலும் அது ஒரு சிறு குடிலைப் போல இருக்கும், இடையூறின்றி வேலை செய்ய வசதியாகப் பெரிய அலுவல் அறையோடு கூடியது,

அங்கே சென்றதுமே மகதி தன் மனநிலையை அவரிடம் தெளிவாகத் தெரிவித்துவிட்டாள்,

“வேலை செய்யும் மனநிலை  இப்போது எனக்கு இல்லை. சார்! தலையும் வலிக்கிறது, அதனால் ....................” என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே. சூட்சுமன் இடையிட்டுப் பேசினார்,

“வேலை இப்போது முக்கியமே இல்லை. மகதி!” என்றார் அவர் உற்சாகத்துடன்,

அவள் புரியாமல் பார்க்க. “மொத்தமாக ஐந்து லட்சம் செக் தந்திருக்கிறான் மகதி, என்ன பார்க்கிறாய்? அவன்தான் அந்த நிரஞ்சன், இந்த ஏழெட்டு நாட்கள் அவனை மிகவும் சந்தோஷப்படுத்தி இருப்பாய் போல! அதற்கு விலை என்று சொல்லிச் செக்கை அனுப்பி இருக்கிறான்! இதோ பார்!” என்று மகிழ்ச்சி பொங்கக் கூறியவர். “விலை” என்ற வார்த்தையில் மகதியின் முகம் கசங்கியதைக் கவனிக்கவே இல்லை,

அதே உற்சாகத்துடன் தொடர்ந்து “என்ன ஒன்று. அந்த மடையன் செக்கை உன் பெயரில் தந்துவிட்டான், இல்லையென்றால் உடனே பணமாக மாற்றியே வைத்திருப்பேன், முட்டாள்! நீ வேறு நான் வேறு என்று எண்ணிவிட்டான் போல! எல்லாம் ஒன்றுதான் என்று அவனுக்குப் புரியவில்லை... “ என்று பரபரப்புடன் பேசிக்கொண்டே போனார்,

ஐந்து லட்சம்! உயிர் நேசம் என்று நினைத்தாளே! ஆனால் அதன் விலை அவனைப் பொறுத்த வரை வெறும் பணம் மட்டுமே!

சூட்சுமன் நீட்டிய சைக்கை வாங்கிப் பார்த்தவளுக்கு நிரஞ்சனின் கையெழுத்து ஈட்டியாய் நெஞ்சைப் பிளந்தது,

“நீ சாப்பிட்டிருக்க இன்னும் மாட்டாய் என்று தோன்றுகிறது, சற்று இரு.  எதையாவது சாப்பிட வாங்கி வருமாறு பையனிடம் சொல்லிவிட்டு வருகிறேன், ஏ சிவத்தையா ... “ என்று அழைத்தபடி ஆய்வாளர் வெளியே போனது அவளது கருத்தை எட்டவே இல்லை,

அவளது மனம்உலைக்களமாகப் பற்றி எரிந்தது,

ஐந்து லட்சமா? அதுவும் விலையா? எதற்கு இந்த விலை?

நிரஞ்சனோடு மகிழ்ச்சியோடு இருந்த சில தருணங்கள் நினைவு வர அருவருப்பில் அவளது உடல் கூசிப் போயிற்று,

சே. என்ன கேவலம்! இதற்கெல்லாம் விலை தருவது என்றால் அவளை என்னவாக நினைத்துப் பழகியிருக்கிறான்!

வெறுப்புடன் செக்கைத் துண்டு துண்டாகக் கிழித்த அவளது விரல்கள் சட்டென நின்றன,

இது அவனது கையெழுத்து! இதை எப்படிக் குறுக்கே கிழிப்பது?

கண்ணீருடன் கையெழுத்துப் பகுதியை மட்டும் கவனமாகத் தனியே கிழித்தெடுத்துக் கைப்பையில் “ஸிப்”பைத் திறந்து உள்ளே வைத்து மூடினாள்,

ஆனால் அதற்கும் அழுகையில் உடல் குலுங்கியது,

அவளை மகாக் கேவலமாக மதித்த ஒருவன் அவளைத் தன் வாழ்க்கையில் இருந்து தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டான், ஆனால் காகிதத்தில் இருந்த அவனது பெயரைக் கிழிக்கக் கூட அவளால் இயலவில்லையே!

அதைப் பத்திரப் படுத்தும் மூடத்தனம் வேறு!

கொஞ்சம் மனது திடப்பட்டதும் அதை எடுத்துத் தூரப் போட்டுவிட வேண்டும்  என்று மனதிற்குள் உறுதி செய்துகொண்டு செக்கிக் கிழிந்த மற்ற துண்டுகளைத் திரட்டிக் குப்பைக் கூடைக்குள் போட்டாள்,

தரையில் குப்பைக் காகிதம் கிடந்தால் ஆய்வாளர் எரிச்சல் படுவார்,

அவள் குப்பைக் கூடையை மூடவும் சூட்சுமன் உள்ளே வந்தார்,

“உணவுக்குச் சொல்லிவிட்டேன் மகதி, பாயசத்தோடு விருந்துச் சாப்பாடு! இனிப்பும் வாங்கி வரச் சொல்லி இருக்கிறேன்... “

குறுக்கிட்டு “எனக்கு எதுவும் வேண்டாம் சார், எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை,. எதுவும் வேண்டாம், அவன் நினைவாகவே

இருப்பதால் வேலையும் ஓடாது, நான் போகிறேன்," என்றாள் அவள்,

"சும்மா உட்கார் மகதி, உன் நிலைமை எனக்குப் புரிகிறது, கொஞ்ச நாட்களாக அந்தப் பயலோடு ஒட்டி உறவாடி விட்டாய் அல்லவா? அதன் விளைவுதான் இந்தப் பிரச்சினை, ஆனால் சீக்கிரமே தீர்ந்துவிடும்," என்றார் அவர்,

தீரக் கூடியதா. என்ன? சூட்டுக் கோலால் அடையாளம் இட்டது போல அப்படியே மனம் பொசுங்கிவிட்டதே! எப்படித் தீரக் கூடும்?

வெறித்து நோக்கியவளுக்கு சூட்கூமன் பதில் சொன்னார், "இது உனக்கு இன்று வரை அறியாத சுகம்! புதுப் பொம்மையைச் சின்னப் பிள்ளைகள் தேடுவது போல. உன் மனமும் உடம்பும் அவனைத் தேடுவது இயல்புதான், ஆனால் கவலைப்படாதே! இதற்குச் சரியான மருந்து என்னிடம் இருக்கிறது!" என்றபடி வாயிலை எட்டிப் பார்த்தார் அவர்,

"என்னசார்? அதிக வேலைதானே?" என்றாள் மகதி அலுப்புடன், "ஆனால். அதில்தான் மனமே போக மாட்டேன் என்கிறதே! "

சாப்பாடு வாங்கப் போன பையன் திரும்பி வந்துவிட . உணவை மேஜை மேல் வைத்துவிட்டுச் செல்லுமாறு கூறி அவனை அனுப்பினார் ஆய்வாளர்,

பிறகு மகதியிடம் திரும்பினார்,

"உன் பிரச்சினைக்குத் தீர்வு வேலை அல்ல மகதி, சில இன்பங்களுக்கு உன் உடம்பு இப்போது பழகிவிட்டது, அந்தப் பயல் போய்விட்டதால். திருப்தியற்றுப் போன உடம்பு! இரவில் பசியோடு படுத்தால் தூக்கம் வராத மாதிரி கஷ்டப்படுகிறது, ஆனால் சாப்பிட்டுப் படுத்தால் தூங்கி விடுகிறோம் அல்லவா? அதுபோலத்தான்!"

"எனக்கு எதுவும் புரியவில்லை சார், ஆனால் இப்போத எனக்கு மனது சரியில்லாததால் நான் போகிறேன்... "

"பொறு, முதலில் நான் புரிய வைக்கிறேன், இப்போது கண்களை மூடிக்கொள்!"

"எதற்கு சார்?"

"உனக்குப் புரிவதற்காகத்தான், விளக்கை அணைத்துவிட்டால். படுக்கையில் எந்தப் பெண்ணும் ஒன்றுதான் என்பார்கள், அதே போலத்தானே உனக்கும் இருக்கும்? இது பகல் நேரம்! விளக்கை அணைத்துப் பயன் இல்லை, கண்ணை மூடிக்கொண்டாலும் இருட்டுதானே? வா, நான் உன்னைத் திருப்திப் படுத்துகிறேன்!

அப்புறம் வேலை வேகமாக ஓடும்,” என்று சூட்சுமன் கூற. மகதிக்குத் தன் காதுகளையே நம்ப முடியாது போயிற்று,

பெரியப்பாவின் வயது மனிதர், என்னவெல்லாம் சொல்கிறார்! அருவருப்பில் உடல் கூசியது அவளுக்கு,

“சீச்சீ! அசிங்கமாகப் பேசாதீர்கள். சார்,” என்று அவரை அடக்க முயன்றாள்,

ஆனால் அவர் அடங்குவதாக இல்லை,

சும்மாவே டெல்லியில் அடைந்து வந்திருக்கும் தோல்விக்கு. அவருக்கு ஒரு வடிகால் தேவைப்பட்டது, வந்ததும் மகதியை இரண்டு திட்டுத் திட்டக் கூட வழியில்லாமல். அவள் இன்னொருவனோடு கூத்தடித்திருக்கிறாள்!

கூடவே இந்த ஐந்து லட்சம்! அதையும் அவர் விடுவதாக இல்லை! மகதியை வசமாக்கிக் கொண்டால்தான். அந்தப் பணமும் அவர் வசமாகும்!

எனவே. “அசிங்கம் என்ன? உனக்கு வயதுக் கோளாறு! இதற்காக ஏங்குகிறாய் என்று தெரிந்திருந்தால். முன்பே எல்லாம் ஆகியிருக்கும்! நீ இப்படி. எவனையோ தேடிப் போக நேர்ந்திராது! போகட்டும் வா!” என்றவர் ஒரு பிழை செய்தார்,

மகதியின் தோளைப் பற்றி அழுத்தினார்,

அருகில் அமர்வது. இரவெல்லாம் இருவருமாக உட்கார்ந்து வேலை செய்வது எதையும் இதுவரை மகதி தவறாக எண்ணியதில்லை, பெரியப்பா பக்கத்தில் அமர்ந்து அலுவலக வேலையில் அவருக்கு உதவி செய்வது போலவே உணர்ந்திருக்கிறாள்,

ஆனால் இப்போது அவளுக்கு உடம்பு கூசியது,

தொட்ட கையைத் தட்டிவிட்டு. “தொடாதீர்கள் சார்!” என்றாள் ஆத்திரத்துடன்,

“ஏன் கூடாது? மூன்று ஆண்டுகளாக நான் சோறு போட்டு வளர்த்த உடம்பு! எனக்கில்லாத உரிமை அந்த ராஸ்கலுக்கா? அவனிடம் மட்டும் இளித்தாயே!” என்று கொதித்தார் சூட்சுமன்,

“ரஞ்சன் பேச்சு வேண்டாம்! ஆனால் நீங்கள் போட்ட சோற்றுக்கு நானும் மாடாக உழைத்திருக்கிறேன், நான் போக வேண்டும் வழியை விடுங்கள்!” என்று அவரைச் சுற்றிக்கொண்டு செல்ல முயன்றாள் மகதி,

“அதெல்லாம் போக விட மாட்டேன்” என்று தடுக்கிற சாக்கில் அவர் அவளை மீண்டும் தொடவும் மகதி தன்னை மறந்தாள்,

வெறி பிடித்தவள் போல அவரை அவள் தள்ளிவிட்ட வேகத்தில் அவர் எங்கோ போய் இடித்துக்கொண்டு விழுந்தார்,

பாவம்! வயது வேலையைக் காட்ட. மனிதருக்குச் சட்டென்று எழக் கூட முடியவில்லை,

ஆனால் அதைக் கவனியாமல் கைப்பையை எடுத்துக்கொண்டு மகதி மின்னலாய் வெளியே பாய்ந்தாள்!

ஓடிப்போய் அவளது அறைக்குள் சென்று உள்ளே தாளிட்ட பிறகுதான் மகதியால் ஒழுங்காக மூச்சு விடவே முடிந்தது!

என்ன இப்படிப் பேசிவிட்டார்!

படபடத்த நெஞ்சுக்குள்ளே இந்தக் கேள்விதான் மீண்டும் மீண்டும் சுழன்று சுழன்று எழுந்தது,

மூன்று ஆண்டுகளாக. எவ்வளவு கண்ணியமாக நடந்து கொண்டார், திடீரென்று இப்போது ஏன் இப்படி. எல்லாவற்றையும் கேவலப்படுத்திவிட்டார்?

தவிப்புடன் யோசித்தவளுக்குத் திடுமென அதன் காரணம் புரிபட்டது,

எல்லாவற்றுக்கும் நிரஞ்சன்தான் காரணம்! அவன் மட்டுமேதான் காரணம்! நிச்சயமாக!

யோசிக்க யோசிக்க. இன்றைய அவளது கேவலமான நிலைமைக்கு நிரஞ்சன் மட்டுமே காரணம் என்றே மகதிக்குத் தோன்றியது,

சூட்சுமனின் தப்பான நடத்தைக்குக் கூட அவனேதான் காரணம்!

இவ்வளவு எளிதாக. விரைவாக. பார்த்துப் பத்தே நாட்களில் முன் பின் அறியாத ஒருவனிடம் அவள் எப்படி வீழ்ந்தாள் என்று ஆய்வாளர் யோசித்திருப்பார்,

யோசித்து. இதற்காக உள்ளூர ஏங்குகிறவள் என்று எண்ணிவிட்டார் போலும்!

சீதையும் ராமரும் போல இதிகாசக் காதல் என்று அவள் எண்ணியது அவருக்கு எப்படிப் புரியும்?

யோசித்துப் பார்த்தால். அந்த மாதிரி நிரஞ்சனே நினைக்கவில்லையே! விடுமுறை உல்லாசத்துக்கு மட்டுமே அல்லவா அவள் தேவைப் பட்டிருக்கிறாள்!

அவளைப் போல எண்ணியிருந்தால். அந்தச் செக்கை எழுதியிருக்கமாட்டான், கூடவே “விலை” என்று எழுதப்பட்ட அந்தக்

காகிதம்! அதுதான் அவனது மனதைத் தெளிவாக விளக்கிவிட்டதே!

என்ன மாதிரி ஏமாந்திருக்கிறாள்!

மீண்டும் நெஞ்சை அடைத்துக் கண்ணைக் கரித்துக்கொண்டு வந்தது,

மூசுமூசு என்று எழுந்த அழுகையை முகத்தில் நீர் அடித்து. முயன்று அடக்கினாள்,

அது அடியோடு முடிந்துபோன கதை! அவள் என்னதான் அழுதாலும் மாறப் போவது இல்லை, அதுவும் "விலை"யைக் கொடுத்து அவன் முடித்துவிட்ட பிறகு!

ஆனால் இன்றையப் பிரச்சினை அதுவல்ல, சூட்சுமன் சாரின் நடத்தை!

அவள் துறவி அல்ல,. ஆசைகள் உள்ள மனிதப் பிறவி என்று நிரஞ்சன் காட்டிவிட்டுப் போய்விட்டான்,

ஒருவேளை ..... இப்படிப்பட்ட ஏக்கத்தினால். அவளது எதிர்காலம் தவறான வழிக்குச் சென்றுவிடுமோ என்று ஆய்வாளர் சார் கவலைப் பட்டிருப்பாரே? அ ... அதனால் ஒரு தியாகம் போல அவர் இந்த மாதிரி நடந்திருக்கலாம்!

ஆனால். ஒரு தரம் அனுசிதமாகப் பேசிய பிறகு. மறுபடி அவரைப் பார்க்கவே வெறுப்பாகிவிட்டதே! அவரைப் பற்றி யோசிக்கும்போது கூட. அந்த முகமே நினைவு வருகிறது! சே! என்ன மாதிரிப் பார்வை! என்னென்ன வார்த்தைகள்!

சூட்சுமன் சார் முகத்தை அருவருப்பின்றிப் பார்ப்பதே இனி இயலாது! அப்படி இருக்க அவரிடம் இனி வேலை செய்வது எப்படி?

அது முடியாது என்பதில் மகதியின் மனம் உறுதியாக இருந்தது, சர்வ நிச்சயம்!

வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வேலை தேடிக் கொள்ளலாம், அது ஒன்றும் கடினமல்ல, சூட்சுமனிடம் இருந்த விசுவாசத்தினால். ஏற்கனவே சில வாய்ப்புகளை அவள் மறுத்திருக்கிறாள்,

ஆனால் இந்த ஊரை விட்டு தொலை தூரம் கூட்டிப் போவதாக அந்த வேலை இருக்கவேண்டும், நிரஞ்சன். சூட்சுமன் இருவர் முகங்களையும் பார்க்க அவளுக்கு விருப்பமில்லை!

விருப்பமில்லை என்று நினைக்கும்போதே. ஆய்வாளர் அவளைத் தேடி இங்கே வந்துவிட்டால் என்ன செய்வது என்று தோன்ற. சட்டென அவள் பதறிப் போனாள்!

சே! எதற்குப் பதறுவது? அவர் நடந்துகொண்ட விதம்

பிடிக்கவில்லை, அருவருப்பு ! அத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும், அதற்கு மேல். அவளது சம்மதம் இன்றி யாரும் அவளை எதுவும் செய்ய முடியாது, திடத்தோடு இருக்க வேண்டும், அவ்வளவே!

மனதை அமைதிப்படுத்திக்கொண்டு மகதி மீண்டும் யோசித்தாள்,

வாசகசாலைப் பொறுப்பாளர். கல்லூரி சரித்திர ஆசிரியை! இருவருமே அதிக ஊதியத்தில் வேறு பணி பற்றி அவளிடம் பேசியவர்கள்தான்,

ஒரு வினாடி காலத்தை வீணாக்கவும் மகதிக்கு விருப்பமில்லை, சும்மா இருக்கும் ஒவ்வொரு வினாடியும் மனதை அரிக்கும் வேதனைப் புழுவுக்கு வெற்றியாகி விடும்!

சட்டென எழுந்து அந்த இருவரையும் தேடிப் போனாள்,

வாசகசாலைப் பொறுப்பாளர். அங்கேயே வேலை தருவதாகச் சொன்னார்,

ஆனால் கல்லூரி ஆசிரியை வெளியூருக்குப் போகச் சொன்னார்,

“ஒரு பெரிய குடும்பம், பல தலைமுறைகளாக அவர்களுடைய குடும்பத்தில் இருக்கும் சிறு கோயிலைப் பற்றி எழுத ஆள் தேடுகிறார்கள், உன்னை விடச் சிறந்தவர் கிடைக்க மாட்டார்கள், நல்லவர்கள், உன்னை மரியாதையோடு நடத்துவார்கள்,” என்றார்,

மற்ற எதையும் விட வெளியூர் என்றதுமே. மகதியின் மனம் அங்கே சாய்ந்துவிட்டது, பழைய வாழ்வின் சாயலே இராது!

இந்த செல்ஃபோன் யுகத்தில் எல்லாம் எளிதாகிப் போயிற்று,

அப்போதே அந்தக் கோயில் உரிமையாளரிடமும் பேசி அன்றைக்கே மகதி தென்காசிக்குக் கிளம்பிவிட்டாள்!

# அத்தியாயம் - 8

பஸ்சில் ஏறி அமர்ந்ததுமே மகதியின் மனதில் சிறு அமைதி உண்டாயிற்று, தேவையற்ற யாரையும் அவள் இனி சந்திக்க நேராது,

அறிந்தவர் தெரிந்தவர் யாரையும் பார்த்து மனம் கூசத் தேவையிராது, அந்த அளவில் நிம்மதிதானே?

மற்றபடி உள்ளே குடையும் வேதனையை மறைத்து வாழ வேண்டும் அவ்வளவே!

தென்காசிக்கும் குற்றாலத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்தது அவள் செல்ல வேண்டிய இடம்,

அடையாளம் சொல்லிக் கார் அனுப்பி அழைத்துக் கொண்டார்கள், செல்லும்போதே. பசேலென்று காணப்பட்ட சுற்றுப்புறம் அவளுக்குப் பெரும் ஆறுதலைத் தந்தது, இந்தப் பசுமைப் பிரதேசத்தைப் பார்த்தபடியே காலத்தை ஓட்டி விடலாம்!

அவள் சென்றடைந்த இடமும் கண்ணையும் மனதையும் குளிர்விப்பதாகவே இருந்தது,

இரண்டு தளங்களில் பழைய காலத்துச் சிறு அரண்மனை போன்ற தோற்றத்தில் இருந்தது அந்த மாளிகை, வீட்டை அடையுமுன் காரோடும் பாதையின் இரு புறமும் இருந்த வண்ண மலர்களுடன் கூடிய அழகான தோட்டம் அவளது கண்களைக் கவர்ந்து மற்ற அனைத்தையும் மறக்க வைத்தது,

சுற்றுப்புறத்தைப் பார்த்துக்கொண்டு சற்று அதிக நேரம் மகதி நின்றிருக்கலாம்,

அதற்குள் படிகளில் அசைவு தெரியவே அவசரமாகத் திரும்பிப் பார்த்தாள்,

நாற்பதை ஒட்டிய வயதில் ஒரு பெண்மணி அவளை நோக்கிப் புன்னகை புரிந்தவண்ணம் இறங்கி வந்து கொண்டிருந்தாள்,

அவளது புன்னகையோ என்னவோ. தன்னையறியாமல் மகதியின் மனம் மேலும் லேசாயிற்று, அவளுக்கு ஒரு சித்தியோ அத்தையோ ரத்த உறவாக இருந்தால் இப்படிப் பிரியமாக வரவேற்கக் கூடும்,

கை கூப்பி. “வணக்கம் அம்மா, தோட்டம் அழகாக இருக்கவே அதைப் பார்த்தபடி அப்படியே நின்றுவிட்டேன்,” என்று சிறு கூச்சத்துடன் காரணம் சொன்னாள்,

ஒப்புவது போலச் சிறு தலையசைப்புடன். “இங்கே நீர் வசதி நன்றாக இருப்பதால் தாவரங்கள் நன்றாக வளரும், லேசாகக் கொத்தி விட்டாலே போதும், பின் பக்கம் பண்ணையும் இருக்கிறது, முதலில்

உள்ளே வாம்மா, சற்று ஓய்வெடுத்த பிறகு எல்லாம் சுற்றிப் பார்க்கலாம்,” என்று வரவேற்றாள் பெரியவள்,

அந்தக் குரல் அவளை மேலும் அமைதிப் படுத்த ஆறுதல் அடைந்தவளாக மகதி அந்தப் பெண்மணியைப் பின் தொடர்ந்தாள்,

குரலுக்கு ஏற்றவாறு சாந்தமதி அமைதியின் மறு உருவமாக இருந்தாள்,

முகம் கழுவிக்கொண்டு வந்த மகதிக்கு அவளே தேவையான இடங்களைச் சுற்றிக் காட்டினாள், “பழைய காலத்து வீடு மகதி, இங்கே எல்லாரும் பண்ணை வீடு என்பார்கள், பண்ணைதான், பின்புறமும் பக்கவாட்டிலும் பெரிய தோப்புகளில் பழ மரங்களும் தென்னையும் பயிராகின்றன, காய்கறித் தோட்டமும் உண்டு, ஐந்து தலைமுறைகளாக இங்கே வசிக்கிறோம், என் தாத்தாவுடைய தாத்தா காலத்தில் இருந்தே, என் அப்பாவுக்கு நாங்கள் இரு பெண்கள், அக்காவுக்கு வேறு மாதிரி வாழ்க்கை அமைந்தது, ஆனால் என் கணவரும் நானும் தந்தைக்கு உதவியாக இங்கேயே இருந்துவிட்டோம், உதவியாக என்பதை விட. பண்ணையையும் கோயிலையும் விட்டுப் போக மனமில்லை என்று சொல்லலாம், “

“அந்தக் கோயில் பற்றித்தான் எழுத வேண்டுமா?. மேட ... அம் ... “ என்று மகதி தடுமாறினாள், “உங்களை எப்படி அழைப்பது சரியாகும்?” என்று அந்த சாந்தமதியிடமே வினவினாள்,

“மேடம் சார். அம்மா. அய்யா எதுவும் வேண்டாம், என்னை ஆன்ட்டி என்று கூப்பிடு, எனக்கும் சொந்தமாகத் தோன்றும்” என்றாள் அந்த அம்மாள்,

“சார்” என்ற அழைப்பில் சூட்சுமன் வெகு கண்டிப்பாக இருப்பார்! அவரிடம் பணி புரிகிறவள் என்று எல்லோருக்கும் தெரிய வேண்டும்,. அதுவே அவளது இடத்தை நினைவுபடுத்தும் என்று .........................

தோன்றிய கணமே. “மற மனமே மற” என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் மகதி,

“என்னம்மா?”

“ஒஒன்றுமில்லை ஆன்ட்டி, வீட்டினுள் வரும்போதே எனக்கு அப்படித்தான் தோன்றியது, நீங்களும் அதையே சொல்வீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை,” என்று தன் மனதில் பட்டதையே மகதி உரைத்தாள்,

“சந்தோஷம்மா,”

“கோயிலை எப்போது போய்ப் பார்ப்பது. ஆன்ட்டி?”

“அவசரம் ஒன்றுமில்லை. மகதி, பிரயாண அலுப்பு தீர ஓய்வெடு,

அப்புறமாகப் போகலாம், ஓய்வுக்குப் பின் நீ தயாரானதும் கீழே ஹாலுக்கு வந்துவிடு,” என்று கூறி அவளைத் தனியே விட்டுவிட்டுப் போனாள் சாந்தமதி,

தனிமை என்றாலே அஞ்சும் விதமாக வேண்டாத நினைவுகள் முட்டி மோதத் தொடங்கவும் அவசரமாக மனதை சாந்தமதியிடம் திருப்பினாள்,

ஹாலில் மாட்டியிருந்த ஒரே படம் அவர்களுடைய கணவர் படமாக இருக்க வேண்டும், கிளம்புமுன் பேராசிரியை சொன்னதும் அப்படித்தான்,

சாந்தமதியும் அவர்களுடைய மகன் சுதாங்கனும் மட்டும்தான் இப்போதைய குடும்பம், பையன் வெளிநாட்டில் படித்தவன், ஆனால் தாய்க்கு உதவியாக இங்கே வீட்டிலேயே தங்கிவிட்டான், நல்ல மனிதர்கள் என்று சொல்லியிருந்தார்,

இளை”ன் என்றதும் நிரஞ்சன் நினைவில் மகதிக்கு  உள்ளூரக் கலக்கமாக இருந்தது, ஒரு நன்மை. கூடவே இருப்பவள் சுதாங்கனைப் பெற்ற தாய்!

அத்தோடு அவளும் சூடு பட்ட பூனை ஆயிற்றே! இனி வெள்ளை நிறத்தைப் பார்த்தாலே அங்கிருந்து ஓடிவிட மாட்டாளா? படித்தது என்ன? இலகு பாடமா? படு பயங்கரமாக அடி பட்டுப் படித்ததாயிற்றே!

நல்லதாக எடுத்துக்கொள்ள இன்னொரு காரணம்!

ஓர் இளம்பெண் அங்கே வந்திருப்பது அந்த சுதாங்கனுக்கும் தெரிந்துதான் இருக்கும், இருந்தும். ஏதாவது சாக்கிட்டு அவன் அங்கே வந்து நிற்கவில்லையே! அறிந்துகொள்ளும் குறுகுறுப்பு கூட அவனுக்கு இல்லை எனும்போது அவள் நிம்மதியாகவே வேலையைப் பார்க்கலாம்!

உள்ளூர நிம்மதிஅடையும்போதே. இந்த நிரஞ்சனால் மனது எவ்வளவு கெட்டுவிட்டது என்று அவளுக்கு ஆத்திரம் வந்தது,

இதற்கு முன் இந்த அளவு ஓர் ஆணைப் பற்றி அவள் யோசித்ததும் இல்லை,. தொடர்ந்து அவளது மன அமைதி குலைந்ததும் இல்லை!

ஆணோ பெண்ணோ. பால் வேறுபாடு இல்லாமல் அவளுக்கு வேண்டிய வேலையை முடித்துவிட்டுப் போய்க்கொண்டே இருப்பாள்,

அந்த சுதாங்கனைப் பற்றி இவ்வளவு நேரம் யோசித்திருக்கவே மாட்டாள்! ஆனால் ஒன்று,  இப்போதும் இது அவசியமற்றதே!

இனி அனாவசியக் கவலைகளில் மனதை அலைய விடக் கூடாது,

அமைதியாக வந்த வேலையை மட்டுமே பார்க்க வேண்டும்!

உறுதியோடு எண்ணமிட்டபடியே படுத்தவள் தன்னை அறியாது உறங்கிப் போனாள், உடம்பு அவ்வளவு அலுத்திருந்தது போல! அடித்துப் போட்டது போல உறங்கியவள் எழுந்து முகத்தை மீண்டும் கழுவிக்கொண்டு கீழே ஹாலுக்குச் சென்றாள்,

அவள் சென்றபோது ஹாலில் சாந்தமதி அமர்ந்து ஒரு பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்தாள்,

மகதியைப் பார்த்ததும் முகம் மலர. “இங்கே உனக்கு வழியெல்லாம் சரியாகத் தெரியாதே. உன்னை அழைத்து வர பாருவை அனுப்பலாமா என்று நினைத்தேன், அதற்குள் வந்துவிட்டாய்! இப்போது அலுப்பு தீர்ந்து பரவாயில்லையா?” என்று வினவினாள்,

“ம், நன்றாக!” என்று மகதி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே. காஃபி வந்தது,

இருவரும் காஃபி அருந்தியதும். கோயிலைப் பார்க்கச் சென்றார்கள்,

பேராசிரியை கூறியது போலச் சிறு கோயிலே என்றாலும். இன்றைய வசதிகளுக்கு ஏற்ப அதை மாற்றிவிடாமல் பழைய விதமாகவே கோயிலைப் பராமரித்திருந்தது. மகதிக்கு மகிழ்ச்சியை அளித்தது,

அதிலும் சுத்தம் செய்ய வசதியாக இருக்கும் பொருட்டு. மொசைக் தளம் போடாமல். ஆலயம் கட்டப்பட்ட காலத்தில் இருந்த கருங்கல் தரையையே பாதுகாத்திருந்தார்கள்,

“கருங்கல் தரையில் விழுந்தால் மண்டை உடைந்து போகாதா ...”

மறையத் தொடங்கிய புன்னகையை இழுத்துப் பிடித்தபடி. “பழமை கெடாமல் பாதுகாத்திருக்கிறீர்கள்,” என்றாள் மகதி,

“கவனித்திருக்கிறாயே!” என்றாள் சாந்தமதி மகிழ்ச்சியோடு, “இலகுவாகச் சுத்தம் செய்யலாம் என்று பலர் பல யோசனை சொன்னார்கள், எனக்குப் பிடிக்கவில்லை, என் கணவருக்கும் அதே எண்ணமாக இருந்தது, திருமணம் என்றால் அதற்குரிய அலங்காரம். சடங்குகள் எல்லாம் நடக்கும்போதுதான் அதன் புனிதம் புரியும், அது போலக் கோயில் என்றாலும் அதற்குரிய விதமாகவே இருக்க வேண்டும் என்பார்,”

சாந்தமதி பழைய நினைவில் ஆழ்ந்தது போலவே. மகதிக்கும் ஏற்பட்டது,

அவளது திருமணத்தில் உரியபடி தாலி கூடக் கட்டவில்லையே! அதனால்தான் அதன் புனிதம் அவனைக் கட்டுப்படுத்தவில்லையோ என்று தவித்தது அவள் மனம்,

ஆனால் இது மடத்தனம், எதிலும் நிரஞ்சனோடு சம்பந்தப்படுத்தியே

பார்ப்பது தவறு, ஏன். ஒழுங்காகத் திருமணம் செய்து கொண்டவர்கள் பிரிந்ததே இல்லையா?

மகதி தன்னுடனேயே போராடி முடிக்கும்போது சாந்தமதியும் தன்னிலைக்குத் திரும்பி இருந்தாள்,

தலையசைத்து. “எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன, இன்னும் என் கணவர் பற்றிய எதையும் நான் மறக்கவில்லை, மறக்க எனக்கு விருப்பமும் இல்லை, ஏனென்றால் அவர் அப்படிப்பட்டவர்,” என்றுரைத்து ஒரு பெருமூச்சு விட்டவள். லேசாக முறுவலித்து மறுபடியும் தொடர்ந்தாள், “ஆனால் இதற்கு நீ பழகிக்கொள்ள வேண்டியிருக்கும் மகதி, ஏனென்றால் என் பேச்சில் என் கணவர் அடிக்கடி வருவார், அவரைப் பற்றி நினைக்காமல் பேசாமல் என்னால் இருக்க முடியாது, அது கேட்கிறவர்களுக்குப் போரடித்தாலும் கூட!” என்று கூறி மறுபடியும் ஒரு புன்னகை செய்தாள்,

அந்தப் புன்னகை தொத்திக்கொள்ள. “சற்று முன் நீங்கள் சொன்னது ஓர் உதாரணம் என்றால். அங்கிள் பற்றிய பேச்சை மிகவும் சந்தோஷமாகக் கேட்பேன். ஆன்ட்டி,,” என்றாள் மகதி,

சின்னவளின் கையைப் பற்றி அழுத்தி. “தாங்க்ஸ்மா,” என்றுரைத்து அவளைக் கோயிலினுள் சாந்தமதி அழைத்துச் சென்றாள்,

மெய்யாகவே சிறு கோயில்தான், ஆலயம் சின்னதாக இருந்தாலும். பெரியதான கோயில்களில் போலவே தூண்கள் அனைத்திலும் நுணுக்கமான சிற்ப வேலை செய்யப்பட்டிருந்தது, அம்மன் சிலைதான் பிரதானம், ஒரு புறம் சப்த கன்னியர் இருந்தார்கள், எல்லாச் சிலைகளுமே ஆலயத்துக்கு ஏற்ற அளவிலேயே இருந்தன,

அத்தோடு எல்லா வடிவங்களுமே பொலிவாக இருந்தன, நேரில் பார்ப்பது போன்ற பிரமை ஏற்பட்டது,

“இந்தக் கோயிலை அமைத்த சிற்பி மிகவும் தலை சிறந்தவராக இருக்க வேண்டும் ஆன்ட்டி, சிலைகளின் கண் திறப்பை எவ்வளவு போற்றினாலும் தகும், கல்லில் இவ்வளவு ஒளியைக் கொண்டு வந்திருக்கிறாரே!” என்று மகதி பெரிதும் வியந்து பாராட்டினாள்,

ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு. “என் கணவரும் இதே போலத்தான் கூறுவார் மகதி, அதனாலேயே இந்தக் கோயிலைப் பாழடைய விட்டுவிடக் கூடாது என்பார், சுத்தம் பண்ணிப் பூஜை செய்கிறவர் காலையில் ஒரு வேளை மட்டும் வந்துவிட்டுப் போவார், வீட்டில் ஒரு லைப்ரரி இருக்கிறது, அதில் இந்தக் கோயில் பற்றியும் பொதுவாகவும் சில பல விவரங்கள் இருக்கின்றன, தேவையான படங்களுடன் சிறு புத்தகமாக எழுதி. சிடி போட்டு வைத்துவிட்டால் நிறைய காலம் நிலைத்திருக்கும் என்று எனக்கு எண்ணம், அதைத்தான் ஒரு முறை

சுந்தரியிடம் ... அவள்தான். உன்னை அனுப்பிய கல்லூரிப் பேராசிரியையிடம் சொன்னேன், பார்க்கிறேன் என்றாள், போன ஆண்டே சொன்னேன், ஆனால் இப்போதுதான் நீ கிடைத்தாய் போல!" என்றாள் சாந்தமதி,

முந்திய ஆண்டே பேராசிரியை சொன்னார்தான், ஆனால். அப்போது சூட்சுமன் சார் கடவுள் வடிவமாக அல்லவா இருந்தார்! இந்த அசுர ரூபம் அப்போது எடுக்கவில்லையே, அத்தோடு வேறு மாதிரிப் "பட்டறிவு"ம் அப்போது கிடைத்திருக்கவில்லை!

"வேறு பணியில் இருந்ததால் இப்போதுதான் வர முடிந்தது," என்றாள் என்றாள் சுருக்கமாக,

நல்லவேளையாக சாந்தமதியும் விவரம் ஏதும் கேட்கவில்லை,

"அதற்கென்ன? இப்போதாவது வந்தாயே! இங்கேயும் அவசரம் எதுவுமில்லை, இப்படி ஒன்று எழுதிப் பதிவு பண்ணிவிடவேண்டும் என்பது என் ஆசை, என் அக்காவுக்கும் அதே எண்ணம்தான், வேண்டிய அவகாசம் எடுத்துக் கொள், வேலை கச்சிதமாக இருந்தால் போதுமானது," என்று பெருந்தன்மையோடு பேசியவளைச் சட்டெனத் தலை சரித்து நோக்கினாள் மகதி,

"என்னம்மா? என்ன விஷயம்?"

"பின்னே என்ன ஆன்ட்டி? உணவு தங்குமிடம் என்று எந்தச் செலவும்இல்லாமல் நல்ல கொழுத்த சம்பளம், காலக் கெடுவும் கிடையாது என்கிறீர்கள்! சுத்த சோம்பேறியாய் நான் வேலையை நீட்டித்துக்கொண்டே போனால் என்ன செய்வீர்களாம்? " என்று குரலில் நகையுடன் கேட்டாள் சின்னவள்,

சிரித்துவிட்டு. "அதனால் என்ன? சம்பளம் இல்லாமல் ஒரு நல்ல பேச்சுத்துணை எனக்கு ஓசியாகக் கிடைக்குமே! அது லாபம்தானே?" என்று சாந்தமதி கண் சிமிட்டவும் மகதியும் சேர்ந்து நகைத்தாள்,

சிரிக்கும்போதே அவளுக்கு ஆச்சரியம்! இனிச் சிரிக்கவே முடியாது என்று எண்ணினாளே! அப்படியில்லை போல இருக்கிறதே!

உற்சாகம் அடையும்போதே உள்ளூர மனம் எச்சரிக்கையும் செய்தது, இன்னும் இந்த வீட்டில் அனைவரையும் சந்திக்கவில்லை, யார்யார் எப்படி இருப்பார்களோ?

ஒரு பணியாளால் கூட மனநிலை கெட்டு விடலாம், முக்கியமாக வீட்டு இளவரசன் எப்படி இருப்பானோ?

அடுத்து அங்கிருந்த வாசகசாலைக்கு சாந்தமதி அவளை அழைத்துச் சென்றாள்,

தட்டுத் தட்டாகப் புத்தகங்கள் நிறைய இருந்தன, வரிசையாக

அடுக்கப் பட்டும் இருந்தன, எடுத்துப் பார்த்தபோதுதான் அவைகளைச் சும்மா அடுக்கி வைத்திருந்தார்களே தவிர. ஒன்றுக்கு ஒன்று தொடர்பு பார்த்து அடுக்கவில்லை என்று தெரிந்தது,

"எல்லாம் நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும் மகதி, இது. இந்தப் புத்தகங்களின் சாராம்சம் தெரியாதவர்கள் அடுக்கியது, கண்ட காட்டுச் செடிகள் இடையே மூலிகை பறிக்கிற மாதிரி இதில் தேவையான புத்தகங்களை நீயேதான் தேடி எடுத்துக்கொள்ள வேண்டும், இது சற்றுத் தனிமையானபிரதேசம் என்பதால். இந்த வேலைகளுக்கு ஆள் கிடைப்பது கடினம், முடிந்தால் .........................."

பெரியவளின் மனதை உணர்ந்து. "எனக்குத் தேவையான புத்தகங்களை எடுக்கும்போது அப்படியே நானே எல்லாப் புத்தகங்களையும் தலைப்புவாரியாக வரிசைப்படுத்தி அடுக்கி விடுகிறேன்," என்றாள் மகதி,

"நன்றிம்மா," என்ற சாந்தமதி உடனேயே "ஆனால் உன்னிடம் எச்சரிக்கையோடு பழகவேண்டும் போல? மனதில் இருப்பதை அப்படியே படித்து விடுகிறாயே!" என்றாள் பயந்தது போல,

பிறகு இருவரும் சிரித்துக் கொண்டார்கள்,

பிறகு மகதி தன் வேலையில் ஆழ்ந்திருக்க. சாந்தமதி அவளது வழக்கமான பொறுப்புகளில் ஈடுபட்டாள்,

மாலையில் பாரு வந்து அழைத்ததும். கையில் இருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு மகதி ஹாலுக்குச் சென்றாள்,

வீட்டு இளவரசன் வந்திருப்பானா?

அடிக்கடி சாந்தமதியின் பார்வை வாயிலுக்குச் சென்று. சிறு வாட்டத்துடன் மீண்டதை மகதி கவனித்தாள்,

மகன் வரும் வேளையா? தாமதம் ஆகிறதோ?

பெரியவளின் செயலைக் கண்டு கொள்ளாதது போல மகதி பொதுவாகப் பேசினாள், "இந்தப் பக்கம் குற்றாலீசுவரர் கோயிலைப் பற்றி ஒரு புத்தகம் பார்த்தேன் ஆன்ட்டி, அதுதானே சித்திரசபாவாம், அதில் உள்ள தூண்களைப் பார்த்தால். உங்கள் கோயில் தூண்களைப் போலவே இருக்கிறது, ,,அதாவது. குற்றாலீசுவரர் கோயிலின் சிற்பக் கலையைப் பின்பற்றி. இங்கும் அமைத்திருப்பார்கள் போல எனக்குத் தோன்றியது," என்றாள்,

சாந்தமதியின் முகம் ஸ்விட்ச் போட்டது போல மலர்ந்தது, "அட. சரியாகச் சொல்லிவிட்டாயே! உன் அங்கிள் கூட இதேதான் சொல்வார், அது பற்றிக் கூட ஏதோ புத்தகத்தில் குறிப்பு இருக்கிறதாம், அதெல்லாம் நீதான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்,"

“ஆனால் எட்டு ஆண்டுகள் ஆன பிறகும் ஒன்றும் பண்ணாமல் சும்மா விட்டுவிட்டீர்களே ஆன்ட்டி,!” என்று சிறு குறையோடு கேட்டாள் மகதி,

“அதுதற்கு நேரம் வரவேண்டும் என்பது இதைத்தான், முன்பே செய்திருந்தால் நீ கிடைத்திருப்பாயா? வேறு வேலையில் இருந்ததாகச் சொன்னாயே! நீ வருவதற்காகத்தான் தள்ளிக்கொண்டே போயிருக்கிறது!” என்று நிஜம் போலக் கண்ணை விரித்துச் சொன்னாள் சாந்தமதி,

“ஆஹா! இது கதை! “ என்று மகதி சிரித்தாள்,

ஒப்புவது போலத் தானும் நகைத்துவிட்டு. “உண்மையில் இது பற்றிப் பார்க்க எனக்கோ என் மகனுக்கோ அவகாசம் இல்லை மகதி, என் கணவர் ஒருவராகப் பார்த்தது, இப்போது எங்கள் இருவருக்கும் பண்ணை வேலையே சரியாக இருக்கிறது, அதிலுமே சில கணக்கு வழக்குகளில் உதவி பண்ண அக்கா பையன் வர வேண்டியது ஆகிவிடும், சில சமயம் அக்காவும் அவனும் சேர்ந்தே வருவார்கள், ஏனெனில் இந்தச் சொத்தில் அவர்களுக்கும் பங்கு உண்டு அல்லவா? அத்தோடு அந்தச் சாக்கை வைத்துக்கொண்டு நாங்கள் இருவரும் பேசி மகிழ்வோம், ஆனால் இந்த வேலைக்கு நடுவே கொஞ்சம் நேரம் கிடைத்தாலும். அதை இந்த ஆராய்ச்சியில் கழக்கும் அளவுக்கு நாங்கள் யாருமே புத்தகப் புழுக்கள் அல்ல, மேலெழுந்த வாரியாகப் படிப்பதோடு சரி, அதனாலேயே இந்தப் புத்தகக் கடலுக்குள் மூழ்கி முத்தெடுத்து மாலை கட்டும் பணிக்குப் பொருத்தமாக நான் ஆள் தேடியது! இப்போது சொல்,. இவ்வளவு யோசித்துச் செயல்பட்ட நான் மிகுந்த கெட்டிக்காரிதானே?” என்று சாந்தமதி பெருமை போலப் பேசினாள்,

“அடடா! என்ன தன்னடக்கம்!” என்று சட்டெனச் சொல்லிவிட்டு. உடனே நாக்கைக் கடித்துக் கொண்டாள் சின்னவள்,

சாந்தமதி சகஜமாகப் பேசுகிறாள் என்று தனக்கு வாய் நீண்டுவிட்டதோ? ஊதியம் கொடுப்பவள் இதற்காகக் கோபமும் படலாமே!

ஆனால் நல்லவேளையாக சாந்தமதி ஆத்திரமுறவில்லை,

கேலியை ரசிப்பது போலப் புன்னகை செய்தபடி மகதிக்கு ஓர் அறிவுரையும் வழங்கினாள், “தன்னம்பிக்கை வளர வேண்டுமானால். அவ்வப்போது நம் சிறப்புகளை நாமே நினைத்துப் பார்க்க வேண்டும். மகதி, நம்மை நாமே மதிக்கவில்லை என்றால் வேறு யார் மதிப்பார்கள்? செய்யும் பணியில் உன் திறமை பற்றி சுந்தரி மிக உயர்வாகக் கூறியிருக்கிறாள், சின்ன விஷயம்தானே என்று விடாமல் நுணுக்கமாக ஆராய்ந்து பல முறை சரிபார்த்து விடுவாய் என்றாள்,

அதுவும் தனிச் சிறப்புதானே? அதைப் பற்றி உனக்குள்ளேயே பாராட்டிப்பார்,. சந்தோஷமாக இருக்கும்,” என்றாள்,

அவளுக்கே பிடித்தமான பணி என்பதால் கொடுக்கப்பட்ட வேலையை முன்பும் மகதி மகிழ்ச்சியுடனேயே செய்து வந்தாள், அதற்கு மேல் தன்னைப் பற்றி அவள் பெரிதாக ஒன்றும் நினைத்தது இல்லை, ஆய்வாளரும் ஒரு “பரவாயில்லை”க்கு மேல் அதிகம் சொன்னதில்லை,

ஒருவேளை பேராசிரியை உயர்வு நவிற்சி அணியாக அதிகமாகப் பாராட்டி இருக்கக் கூடுமோ?

ஆனால் பலவிதமாகப் புண்பட்டிருந்த மகதியின் மனதுக்கு. சாந்தமதியின் பேச்சு இதமாக இருந்தது,

இன்னும் அவர்களது உரையாடல் பல்வேறு விஷயங்களில் சுழன்றது, சாந்தமதியின் பேச்சு இயல்பாக இருந்தது,

குடும்பத்தைப் பற்றிப் பேசுகையில் மகதி சொல்ல அதிகம் இருக்கவில்லை, ஆனால் பெரியவள் நிறையக் கூறினாள், “என் அக்கா நல்ல அழகி, பெரிய இடத்தில் விரும்பிக் கேட்டார்கள் என்று மணமுடித்துக் கொடுத்தார்கள், ஆனால் அங்கே அவளை நடத்திய விதம் என் பெற்றோருக்குப் பிடிக்கவில்லை, இவர். உன் அங்கிள் பணக்காரர் இல்லை, பண்ணைக் காரியங்களில் அப்பாவுக்கு உதவியாக இருந்தவர்தான், ஆனால் அவரது குணத்தைப் பார்த்துவிட்டு அப்பா மருமகனாக்கிக் கொண்டார், மிகவும் சந்தோஷமான வாழ்ந்தோம், சுதாங்கன் ஒரே பையன், .......... “என்று மறுபடியும் வாயிலைப் பார்த்தாள் அந்த அன்னை,

தாயின் கண்களைப் பார்த்ததும் மகன் வரத் தாமதம் ஆகிறது என்று மகதிக்குப் புரிந்தது, ஆனால் ஏன். என்ன என்று கேட்க அவளுக்குப் பிடிக்கவில்லை,

அந்த சுதாங்கன் ஓர் இளைஞன், பேச்சு நினைப்பு அனைத்திலிருந்தும் அவனைத் தூர விலக்கி வைப்பது மனநலத்துக்கு நல்லது என்று மகதி நினைத்தாள்,

ஆனால் மறுநாள் காலையில் சுதாங்கனைச் சந்தித்தபோது அவளது அபிப்பிராயம் மாறிப் போயிற்று!

## அத்தியாயம் - 9

காலையில் எழுந்ததுமே பண்ணைக் கோயிலுக்குச் சென்று கோயிலின் பூஜை வேலைகளைச் செய்பவரிடம் பேச வேண்டும் என்று மகதி நினைததாள்,

பொதுவாக அங்கே பூஜை செய்கிறவர்களை ஓதுவார் என்று அழைப்பார்கள் என்று சாந்தமதி கூறியிருந்தாள்,

அங்கே சென்றால் அந்த ஓதுவாரிடம் கலகலப்பாகப் பேசியபடி அவருக்கு உதவி செய்துகொண்டு நின்ற சுதாங்கனைப் பார்த்து அவளுக்கு ஒரே ஆச்சரியமாகப் போயிற்று!

பண்ணை வாரிசு என்கிற கர்வம் எதுவும் இல்லாமல் இயல்பாக ஓதுவாருக்கு உதவி செய்து கொண்டிருந்தான் அவன்,

சிலைகளில் இருந்து அகற்றப்பட்ட மாலைகள். பூக்கள் அடங்கிய பெரிய கூடையைத் தூக்கிக்கொண்டு இருந்தவன் அவளைப் பார்த்ததும். "ஓ. நீங்கள்தான் கோயில் வரலாறு எழுத வந்த மகதி மேடமா? நான் சுதாங்கன், கோபமே படாத சாந்தமதி அம்மையாருடைய அன்பு மகன்," என்று சுய அறிமுகத்தோடு. "ஓதுவார். இவர்கள்தான் புத்தகம் எழுத வந்தவர்கள், இவர் இங்கே பூஜை செய்யும் ஓதுவார்," என்று மற்ற இருவருக்கும் கூட அறிமுகம் செய்து வைத்தான்,

"இந்தக் கோயிலைப் பற்றி என்னை விட ஓதுவாருக்கு நிறையத் தெரியும், பேசிக் கொண்டிருங்கள்," என்று கூறிவிட்டு காய்ந்த மலர்கள் அடங்கிய கூடையைத் தூக்கிக்கொண்டு அங்கிருந்து அகன்றான்,

சென்று கொண்டிருந்த இளைஞனைப் பிரியமாகப் பார்த்தபடி. "தம்பிக்குக் கொஞ்சமும் பந்தாவே கிடையாதும்மா!" என்றார் ஓதுவார்,

மகதி வணக்கம் தெரிவிக்கவும். பதிலுக்குக் கைகூப்பினார் அவர்,

"வாங்கம்மா, நீங்க வர்றதாக அம்மா நேற்றே சொன்னாங்க, " என்று அவளோடு பேசியபடியே  அம்பிகைக்கு அலங்காரம் செய்யத் தொடங்கினார்,

"ஓதுவார் சார். நான் வந்தது வேலையைக் கெடுப்பது போலத் தோன்றுகிறது, நான் வேண்டுமானால் போய்விட்டு அப்புறமாக வரட்டுமா?" என்று வினவினாள் மகதி,

"வேலை கெடாதும்மா, இந்த அலங்காரம் என் கண்ணை மூடிக்கிட்டுக் கூட நான் செய்வேன், ஆனால் ஒண்ணு, இந்த "சார்" எல்லாம் போடாதீங்க, சும்மா ஓதுவாரேன்னாப் போதும், " என்றார்

அவர்,

"ஓ. அப்படியானால் நீங்களும் என்னை இந்த "ங்க" போடாமல் வாபோ என்றே பேசுங்கள்," என்றாள் மகதி புன்னகையோடு,

சுமார் அறுபது வயதை அடைந்திருந்த அவர் தானும் இந்தக் கோயிலில் பணி புரியும் வம்சத்தைச் சேர்ந்த நாலாவது தலைமுறை என்றார் அவர்,

அக்கம் பக்கம் உள்ள சில கோயில்களிலும் பூஜை புனஸ்காரங்களைச் செய்கிறவர் இதே ஓதுவாரே,

"திருமுறைகளைக் கோயிகளில் ஓதுகிறவர்கள் என்பதால் அப்படியே எங்களை ஓதுவார் அழைத்தார்கள், பெற்றோர் வைக்கும் பெயரே மறைந்துவிட்டது!" என்று பெயர்க்காரணம் சொல்லி விளக்கினார் ஓதுவார்,

அதற்குள்ளாகப் பூக்களைக் குழியில் கொட்டிவிட்டு  சுதாங்கன் திரும்பி வந்து சேர்ந்தான், வந்ததும் ஓதுவாரோடு சேர்ந்து சிலைகளுக்குப் பூ அலங்காரம் செய்யத் தொடங்கினான்,

சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த மகதிக்கு சுதாங்கனைப் பற்றி ஏதோ மனதில் உறுத்தியது,

இது என்னவாக இருக்கும் என்று யோசித்தவளுக்கு ஒன்றும் புரியவில்லை,

வீட்டு உரிமையாளருடைய மகன். வீட்டினரே பராமரிக்கும் கோயிலில் பந்தாப் பாராமல் உதவி செய்கிறான், இதில் உறுத்துவதற்கு என்ன இருக்கிறது? பாராட்டத்தானே வேண்டும்? ஆனால் ...,

சற்று நேரம் கவனமாகப் பார்த்தும் மகதியால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை,  கடைசியாக ஒரு தரம் கூர்ந்து கவனித்துவிட்டுத் திரும்பியவளுக்குத் தன் மீதே எரிச்சல் வந்தது,

இந்த நிரஞ்சனால். மனிதர்களைப் பற்றிய அவளது மதிப்பீடே மதிப்பிழந்து தப்புத் தப்பாகப் போய்விடுகிறது! நல்லவர்களையும் தவறாகவே எண்ணத் தோன்றுகிறது!

சஞ்சலங்களை உதறிவிட்டு, அவளும் பூ அலங்காரத்தில் கலந்து கொண்டாள்,

ஓதுவார் அம்மனுக்குக் கற்பூரம் காட்டியதும் சுதாங்கன் கிளம்பினான், "நீங்களும் வருகிறீர்களா? காலை உணவு தயாராகியிருக்கும்," என்று மகதியை அழைத்தான்,

"இல்லை சுதாங்கன் சார், நான் சற்று நேரம் ஓதுவாருடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு வருகிறேன், அதாவது ஓதுவாருக்கு அவகாசம்

இருக்குமானால் ... இருக்கிறதா ஓதுவார்?" என்று விசாரித்தாள்,

"தாராளமாக அம்மா, அம்மா முன்பே சொல்லியிருந்தார்கள், அதனால். மற்ற கோயில் வேலைகளை முடித்துவிட்டுத்தான் வந்தேன்," என்றார் அவர்,

"ஓ! ரொம்ப சந்தோஷம், சொல்லுங்கள் ஓதுவார். இந்தக் கோயில் பற்றிய சிறப்பான விவரங்கள் என்னென்ன இருக்கின்றன?" என்று விசாரித்தாள் அவள்,

"இந்தக் கோயில் குற்றாலீசுவரர் கோயிலைப் பின்பற்றி அமைந்திருந்தாலும். மூல விக்கிரகம். காஞ்சிக் காமாட்சியின் அம்சம்தான், துக்க நிவாரணி அல்லவா? அப்படியே செயல்பட்டதாகவும் என் தாத்தா சொல்லியிருக்கிறார், இங்குள்ள தலவிருட்சமும் மாமரமே, உரிய காலங்களில் பிரசாதமாக மாம்பழங்களையே கொடுப்போம், அம்மனின் பெயரே மாங்கனி அம்மன்தான், .........." என்று இன்னும் சில பல விவரங்களை ஓதுவார் கூறினார்,

ஒரே நாளில் அல்ல,

மகதியின் ஆர்வத்தைப் பார்த்து அவருக்கே உற்சாகம் ஏற்படக் கொஞ்சம் கொஞ்சமாக அவரது வீட்டிலும். வீட்டுப் பக்கம் இருந்த முதியவர்களிடமும் கிடைத்த தகவல்களைத் திரட்டி வந்து மகதியிடம் தெரிவித்தார், அந்த முன்னோருக்கே அவர்களுடைய பேச்சில் காது வழி கேட்டுப் பரவிய செய்திகள்,

அதன்படி. சுமார் நூறு. நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் சுதந்திரப் போராட்டம் உச்ச கட்டத்தை எட்டியிருந்த சமயம், வெள்ளையர்களின் உத்திரவின் படி அதிகாரிகள் விளைச்சலை எல்லாம் அள்ளிக்கொண்டு போனார்கள், தராதவர்களை சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு உதவியதாகச் சொல்லி. நினைத்த நேரம் நினைத்த கொடுமைகள் செய்தார்கள், மழையும் வெள்ளமுமாக இயற்கையின் சீற்றம் வேறு பாதித்ததாம்!

பெருநிலக் கிழாராக இருந்த சிவநேசச்செல்வர் விளைந்த தானியத்தை அரசாங்கத்துக்குக் கொடுக்காமல் உழைத்த பண்ணைக் குடிகளுக்கு உண்ணக் கொடுத்துவிட்டார் என்று அவரைத் தேசத் துரோகக் குற்றம் சாட்டி விரட்டினார்களாம்,

தப்பிச் சென்ற அவர் காஞ்சீபுரத்தில் மறைந்து வசித்தபோது. காமாட்சி அம்மனே அவரது கனவில் தோன்றி. தன் அம்சமாக அம்மன் சிலை வைத்துக் கோயில் கட்டிக் கும்பிடும்படிக் கூறியதாகவும் அதன்படி இந்தக் கோயில் கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறினார்,

இதையே. அந்தப் பக்கத்து அரசனோடு ஏற்பட்ட தகராறில் சிவநேசச்செல்வர் ஓடிப்போய்க் கனவு கண்டு திரும்பி வந்து கோயில் கட்டியதாகவும் பேச்சு இருந்தது,

எல்லாமே ரொம்பக் காலத்துக்கு முன் நடந்ததால் தெளிவாகச் சொல்ல முடியாமலும் இருந்தது, நிச்சயமற்ற ஊகத் தகவல்கள்!

இது பற்றிய எதாவது குறிப்புக்காக. வாசகசாலையின் "புத்தகக்கடலி"ல் மகதி தீவிரமாகத் தேடலானாள்,

அவளது தீவிரத்தைப் பார்த்துவிட்டு. சாந்தமதியே "நிதானமாகச் செய் மகதி, ரொம்ப அவசரமில்லை என்றுதான் சொன்னேனே, உன் கண்ணெல்லாம் பூச்சி பறக்கிற மாதிரி "பே" என்று இருக்கிறது, வா. இன்று குற்றாலம் போய்க் குளித்துவிட்டு வருவோம்," என்று அங்கங்கே அழைத்துச் செல்லலானாள்,

இதற்கிடையே மிக முக்கியமான இரண்டு சம்பவங்கள் நடந்தன,

அன்று பௌர்ணமி, மகதி பண்ணைக்கு வந்தபின் முதல் பௌர்ணமி,

பௌர்ணமி பூஜை சற்று சிறப்பாக நடக்கும் என்று முன்னரே ஓதுவாரும் சாந்தமதியும் கூறியிருந்தார்கள்,

ஆனால் சாந்தமதி கூறியபடி சேலை அணிந்து மகதி கோயிலுக்குச் சென்றால். பெரியவள் அங்கே வந்திருக்கவில்லை, ஊர்த் தலையாரி மகளுக்குப் பிரசவம் சிக்கலாகி விடவே. காரை எடுத்துக்கொண்டு அந்தப் பெண்ணைத் தென்காசி மருத்துவ மனைக்கு தாயார் அழைத்துச் சென்றிருப்பதாக சுதாங்கன் கூறினான்,

திரும்பி வரும் நேரம் நிச்சயமில்லாததால். காலைப் பூஜையை வழக்கம் போல நடத்தும் படியாகவும் தாயார் கூறிவிட்டே சென்றிருந்தாள்,

அதன்படி பூஜையும் நடந்தது,

ஒரு குறிப்பிட்ட தருணத்தில். அம்மன் சிலைக்கு அணிவித்து எடுத்துத் தரவேண்டும் என்று ஓதுவார் தங்கச் சங்கிலி ஒன்று கேட்டார்,

வழக்கமாகச் சங்கிலியைத் தரும் சாந்தமதி அங்கே இல்லை, கழுத்தைத் தடவிப் பார்த்துவிட்டுத் தானும் அணிந்திருக்கவில்லை என்றான் சுதாங்கன்,

அத்தோடு. "நல்லவேளை மகதி. நீங்கள் சங்கிலி அணிந்திருக்கிறீர்கள்! அதைக் கழற்றிக்கொடுங்கள்," என்றும் கூறினான்,

அதிர்ந்து நின்றாள் மகதி,

என்ன சர்வசாதாரணமாகக் கூறுகிறான்! இது அவளது மாங்கல்யம்

அல்லவா? இதை எப்படிக் கழற்ற முடியும்?

ஆனால் பிரச்சினை என்னவென்றால். உரிய காரணத்தை அவளால் சொல்லவும் முடியாது போயிற்று,

அவள் தயங்கவும். “பரவாயில்லை மகதி, துணிந்து கொடுங்கள், சங்கிலி கனமாகத்தான் தெரிகிறது, என்றாலும் அதைப் பத்திரமாக உங்களிடம் திருப்பிக் கொடுப்பது என் பொறுப்பு! இது இந்த அரிச்சந்திர மகாராஜாவின் சத்தியம்!” என்று வீராவேசமாகச் சூளுரைத்தான்,

சிரிப்பின் போர்வையில் தன் சங்கடத்தை மகதி தறைக்க முயன்றாள்,

“அதற்கில்லை ... இது ரொம்ப முக்கியமானது, நான் இதைக் கழற்றியதே இல்லை,” என்று ஒரு மாதிரி உண்மையைச் சொன்னாள் மகதி,

“ஓ! நினைவுப் பரிசு போல! யாருடைய பரிசு மேடம்?”என்று சுதாங்கன் கிண்டலடிக்கத் தொடங்கினான்,

ஆனால் ஓதுவார் அவளது சஞ்சலத்தை ஒதுக்கி மறையச் செய்தார்,

“முக்கியமான நினைவுப் பரிசு போலத் தெரிகிறது, ஆனால். திருமாங்கல்யமே ஆனாலும். இன்று அம்மன் கழுத்தில் அணிவித்துக் கற்பூரம் காட்டி எடுத்துக் கொடுத்தால். ரொம்ப நல்லதும்மா, கணவன் வெகு காலம் நல்லபடியாக வாழ்வான் என்று ஐதீகம், மற்றபடியும் நல்லதுதான் நடக்கும்!” என்றார் அவர்,

உள்ளே ஏதேதோ குமுறியபோதும். அதற்கு மேல் சங்கிலியைக் கொடுக்க மகதி தயங்கவில்லை,

அம்மனின் கழுத்தில் சங்கிலியைப் பார்த்தபோது அவளுக்கு என்னவோ செய்தது, எப்படியோ? நிரஞ்சன் நன்றாக இருக்கட்டும் என்று மனதார வேண்டிக் கொண்டாள், வேறு எதுவும் சாத்தியம் இல்லையல்லவா?

கண்மூடி வேண்டியவளை சுதாங்கன் உற்று நோக்கினான்,

ஓதுவார் கற்பூரத் தட்டுடன் வந்து சங்கிலியைக் கொடுக்க வந்தபோது. அதை இடையில் கை நீட்டி சுதாங்கன் வாங்கிக் கொண்டான்,

கேள்வியாய் நோக்கிய மற்ற இருவரிடமும். “அரிச்சந்திரனாகச் சத்தியம் செய்திருக்கிறேனே! அதன்படி நான்தானே இந்தச் சங்கிலியை மகதியிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்? கொடுத்த வாக்கைக் காப்பாற்றுகிறேன். மேடம்!” என்று கூறினான், மிகுந்த பாவனையுடன் சங்கிலியையும் கொடுக்கவே ஓதுவாருக்கும் மகதிக்கும் சிரிப்பு வந்தது,

பலகாலம் பழகிய உரிமையோடு “விளையாட்டுப் பிள்ளைப்பா!”

என்றார் ஓதுவார்,

பூஜை முடிந்தபின் சுதாங்கன் சென்றுவிட. வழக்கம்போல உட்கார்ந்து பேசுகையில். “சுதாப் பையனுக்குக் கள்ளம் கபடமே கிடையாது, ஆனால் அம்மாதான் பிள்ளையைப் பற்றி அனாவசியமாகக் கவலைப் படுகிறார்கள்,” என்றார் ஓதுவார்,

சுதாங்கன் திரும்பி வரும்வரை சாந்தமதியின் பார்வை வாயிலை அடிக்கடி நோக்குவது மகதிக்கு நினைவு வந்தது,

ஒப்புதலாகத் தலையசைத்து. “ஒரே பிள்ளையல்லவா? அக்கறை இருக்கத்தானே செய்யும்?” என்றாள் மகதி,

சொல்லும்போதே அவளுள் ஒரு குழப்பம், தாய்க்கு மகனிடம் அக்கறை இருப்பது நியாயம்தான், ஆனால் சுதாங்கனை முதல் தடவை பார்த்ததில் இருந்தே அவளது மனதில் அவ்வப்போது ஏற்படும் உறுத்தல்?

நிரஞ்சனால் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு என்று எண்ணினாளே! அப்படியானால் அது பெற்றவளுக்கு ஏன் வந்தது?

ஏற்றாற்போல ஓதுவாரும். “அது மட்டுமில்லை மகதி, மகன் குடிக்கிறானோ என்று அம்மாவுக்குக் கவலை, சுதாத் தம்பி அறியாமல் அவ்வப்போது வேவு கூடப் பார்க்கிறார்கள், எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை, ஆனால் கவலையற்று இருக்கவும் முடியவில்லை என்கிறார்கள்,” என்று விளக்கினார்,

“வசதி இருந்தால் இது ஒரு கஷ்டம், யார் வந்து பிள்ளையைக் கெடுத்து விடுவார்களோ என்று பயந்துகொண்டே நிம்மதியற்று வாழ வேண்டும்! ஒன்று இருந்தால் இன்னொன்று இல்லாமல் போகிறது, “ என்று வேதாந்தமும் பேசிவிட்டுப் போனார் ஓதுவார்,

ஒன்று இருந்தால் இன்னொன்று இருப்பதில்லை! ஆனால் அவளுக்கு ஏன் இரண்டுமே இல்லாது போனது?

ஓதுவார் கூறியதை யோசித்தபடியே கோயில் தூண்களில் இருந்த சிற்பங்களோடு தன் குறிப்புகளை ஒத்திட்டுப் பார்த்த மகதியின் கவனத்தை கீச் கீச்சென்று ஓர் அணிலின் கூக்குரல் கலைத்தது,

பொதுவாக மரங்களில் ஏறி இறங்கும்போது அவை கொடுக்கும் சத்தமல்ல இது, ஆபத்து சமயங்களில் கத்துவது! சில சமயம் கூட்டின் பக்கம் பூனை வந்தால் கூட இப்படிக் குரல் கொடுக்கும்,

என்ன ஆபத்தோ என்று சத்தம் வந்த பக்கம் தேடிப் பார்த்தால் எங்கே என்று சரியாகக் கண்டுகொள்ள முதலில் அவளால் முடியவில்லை, பிறகுதான் கோயிலின் பின்புறத்தில் வாடிய பூக்களைப் போடும் கிடங்கில் இருந்து அணில் கத்துவது புரிந்தது,

கோயிலில் பயன்படுத்திய வாடிய மாலைகள். மலர்களைப் போடுவதற்கு என்று ஒரு பெரிய பள்ளம் தோண்டியிருந்தார்கள், நிர்மால்யமாகிவிட்ட அந்த மலர்கள் மேல் கொஞ்ச நாட்களுக்கு ஒருதரம் மேலே மணல் தூவி மக்க வைப்பார்கள்,

கொஞ்ச காலத்தில் அந்த மண்ணே சத்தானதாகி விடும் என்று சாந்தமதி கூறியதுண்டு, கணவரின் யோசனையாம்!

அத்தோடு கடவுளின் மேனி மீது அணிவிக்கப்பட்ட மலர்கள் வாடி நிர்மால்யம் ஆகிவிட்டபோதும் மனிதர்களின் காலில் பட்டுவிடக் கூடாது என்பது அவரது முக்கியமான குறிக்கோள்,

கூடவே மிருகங்கள் எதுவும் அந்தக் குழியில் விழுந்துவிடக் கூடாது என்பதற்காக உறுதியான கம்பி வலையால் மூடி வைத்திருந்தார்கள், அந்த வலை மூடியில் மாலைகளைக் கூடைப் பூக்களோடு சேர்த்துக் கொட்ட வசதியாகக் ஒரு திறப்பும் உண்டு,

தினமும் அதைத் திறந்து பூக் கூடையில் உள்ளதைக் கொட்டிவிட்டு வரும் பணியை சுதாங்கன் தனதாக்கியிருந்தான், நிர்மால்யக் கூடையை வேறு யாரும் எடுத்துச் செல்ல விடவே மாட்டான்,

அணில். எலி போன்ற அளவில் சிறிய பிராணிகள் கம்பி வலையின் வழியே உள்ளே சென்று பூவோடு சேர்ந்து விழுந்திருக்கும் பொரி. பழத்துண்டுகள் போன்ற நிவேதனப் பொருட்களைத் தின்றுவிட்டுப் போகும்,

இன்றும் அதே போல உள்ளே சென்ற ஓர் அணில் எப்படியோ உள்ளே கிடந்த காய்ந்த மாலை ஒன்றில் மாட்டிக் கொண்டு விடுபட முடியாமல் கத்திக் கொண்டிருந்தது,

மாலையோடு சேர்த்து வெளியே எடுத்துதான் அணிலை விடுவிக்க முடியும்,

அதுவும் ஒன்றும் பெரிய காரியம் அல்ல,

சுற்றிலும் தோப்பு என்பதால் காய். பழம் பறிப்பதற்குத் தேவையானவை இருக்கும், மகதி ஓடிப்போய் ஒரு துரட்டியை எடுத்து வந்து மாலையை வெளியே எடுத்தாள்,

அணில் பயந்த பிராணி என்பதால்  கவனத்தோடு அதை விடுவித்து. விடுபட்ட அணிலும் இயல்பாக ஓடிச் சென்ற பிறகுதான் மகதிக்கு நிம்மதியாக இருந்தது,

நல்லது என்று துரட்டியைக் கொண்டு போய் எடுத்த இடத்தில் வைத்துவிட்டு வந்தாள்,

அடுத்து மாலையை மீண்டும் குழிக்குள் போட்டுவிட்டால் வேலை முடிந்தது,

உள்ளே போடுவதற்காக மாலையைத் தூக்கினால். மாலையோடு சேர்ந்து மாட்டிக்கொண்டு வந்திருந்த பாதி சிதைந்த ஒரு மடிக்கப்பட்ட காகிதம் மேலும் கிழிந்துவிட அதன் மடிப்பிலிருந்து ஏதோ விழுந்தது,

அதை எடுத்துப் பார்த்த மகதி திகைத்தாள், ஏனெனில் அது ஓர் ஊசி போடும் கருவி, மருந்தேற்றப் பயன்படுவது! அதிலும் .........................

ஒரு தரம் பேராசிரியை சுந்தரியைச் சந்திக்கச் சென்றபோது. சக ஆசிரியை ஒருவர் இது பற்றி வருத்தமாகப் பேசி மகதி கேட்டிருக்கிறாள்,

ஆனால் இது இங்கே எப்படி வந்தது? யார் வேலை இது?

யோசனையோடு வெறித்த மகதி கிடைத்த விடையில் கலங்கிப் போனாள்!

காய்ந்த பூக்களை அகற்றும் வேலையில் வேறு யார் உதவ முயன்றாலும் சுதாங்கனுக்குப் பிடிக்காது! ஐயோ!

சாந்தமதியின் கவலை! மகதியின் உறுத்தல்! எல்லாமே இப்போது தெளிவாகிவிட்டது, ஆனால் இப்போது இதற்கு என்ன தீர்வு?

ஓடிப் போய் சாந்தமதியிடம் விஷயத்தைத் தெரிவித்து அந்தத் தாயின் வேதனையைப் பெரிதாக்க மகதிக்கு மனமில்லை,

அதே சமயம் இதைக் கண்டும் காணாதது போலச் சும்மா இருக்கவும் அவளுக்குப் பிடிக்கவில்லை, கூடாது!

சுதாங்கன் இயல்பில் நல்லவன், மகதி இங்கே வந்து இந்த ஒரு மாதத்தில் அவளைத் தவறாக ஒரு பார்வை கூட அவன் பார்த்ததில்லை, அத்தோடு பந்தாவே இல்லாமல் எல்லோரிடமும் பழகிறவன், ஓதுவார். பாரு. தோட்ட வேலையாட்கள் யாரானாலும் ஒதுக்கமாட்டான், தேவை என்றால் உதவுகிறவனும் கூட!

உண்மையைச் சொல்வதானால் நிரஞ்சன் இவனைப் போல எளிமையானவனாக. நல்ல மனிதனாக இருந்திருக்கலாமே என்று கூட மகதி உள்ளூர நினைத்தது உண்டு,

கூடவே தாயிடம் மிகுந்த அன்பு வைத்திருக்கிறவனும் ஆவான், அதனால் ..........................................................................................

அவளுக்கு வசதியாக. மறுநாள் ஆடிட்டரைப் பார்ப்பதற்காக தென்காசிக்குச் செல்ல வேண்டி இருப்பதாக. இரவு உணவின்போது தாயிடம் சுதாங்கன் சொல்லிக் கொண்டிருந்தான்,

ஆடிட்டரிடம் காட்ட வேண்டிய கணக்கு வழக்குகள் பற்றி அவர்கள் பேசும்போது நாகரீகமாக ஒதுங்கிக் கொண்டபோதும். மறுநாள் காலை கோயிலில் பார்க்கையில் மகதி சுதாங்கனிடம் ஒரு கோரிக்கை

வைத்தாள்,

தென்காசியில் காசி விசுவநாதர் கோயிலில் சில விவரங்கள் கேட்க வேண்டும் என்பதால் தன்னை அங்கே விட்டுவிட முடியுமா என்று கேட்டுக் கொண்டாள், தானே திரும்பி வந்துவிடுவதாகவும் கூறினாள்,

அவன் மறுக்காததோடு. சாந்தமதியும் ஆதரவாகப் பேசவே மறுநாள் சுதாங்கனோடு மகதியும் கிளம்பிச் சென்றாள்,

ஆனால் காரோட்டி  இருந்ததால் பயணத்தின் போது  மகதியால் எதுவும் பேச முடியவில்லை,

எனவே. சுதாங்கனும் கொயிலின் உள்ளே வந்து நிர்வாகத்தினரிடம் ஒரு வார்த்தை சொன்னால் தன் பணி இலகுவாக முடியும் என்று அவள் கோரவே. அவனும் மறுக்காமல் அவளோடு கூடச் சென்றான்,

சிறு உதவிகளை யாருக்கும் மறுப்பது அவனது பழக்கமும் இல்லை, இப்போதும் அவன் தயங்கவில்லை,

அதன் பின் ஆள் நடமாட்டம் குறைவாக இருந்த ஓர் இடத்தில் அவனை நிறுத்தி. “கோயில் பற்றி நானே பார்த்துக் கொள்வேன் சுதாங்கன் சார், ஆனால் நான் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்,” என்று தொடங்கினாள் மகதி!

# அத்தியாயம் -10

சற்று ஆச்சரியமாகப் பார்த்தானே தவிர. மகதி எதிர்பார்த்தது போல சுதாங்கன் மறுக்கவோ தயங்கவோ இல்லை, மாறாகப் புன்னகையோடு “அப்படியானால் விஷயம் மிகவும் முக்கியமானதாகத்தான் இருக்க வேண்டும், என்ன? சொல்லுங்கள்,” என்றான் இலகுவாக,

ஆனால் அவள் ஊசியை எடுத்துக் காட்டியதும் அவன் முகம் வியர்த்துவிட்டது, “இது ... இது எப்படிக் கிடைத்தது?” என்று தடுமாற்றத்துடன் வினவினான்,

அவள் சொல்லவும். “அம்மாவிடம் சொல்லவில்லையே?” என்று அவசரமாகக் கேட்டான்,

“ஆன்ட்டி மனதை வேதனைப்படுத்த எனக்கு விருப்பம் இல்லை…” என்று அவள் கூறும்போதே குறுக்கிட்டு “தாங்க் காட்!” என்று என்று அவன் ஆறுதலோடு உரைத்த விதம் மகதிக்கு நம்பிக்கை ஊட்டியது,

“ஆன்ட்டி வருத்தப்படுவது உங்களுக்கும் பிடிக்கவில்லை என்றுதான் தெரிகிறது, பின்னே ஏன் இப்படி சுதாங்கன் சார்?”

மறைக்காமல் விவரம் தெரிவித்தான் அவன், “அப்பா திடுமென இறந்தபோது நான் வெளிநாட்டில் இருந்தேன். மகதி, அப்பா எனக்கு மிக நெருக்கம், நண்பனாகவும் இருந்தார், தனியாகத் தாங்க முடியாமல் போனபோது இதைப் பழகிவிட்டேன், முதலிலேயே இது தப்பு என்று எனக்குத் தெரியும் மகதி, ரொம்பக் குறைத்தும் விட்டேன், ஆனால் அடியோடு விட முடியவில்லை, எங்கேனும் மறுவாழ்வு மையத்தில் சேர்ந்து சரிப்படுத்திக் கொள்ளலாமா என்றால். ஒரு மாதமாவது அங்கேயே தங்கும்படி நேராதா? அம்மாவிடம் என்ன சொல்லிப் போவது? வேலையும் அம்மாவுக்கு ரொம்ப அதிகமாகி விடும், , “

“அதற்காக இப்படியே இருப்பீர்களா? அது மட்டும் ஆன்ட்டிக்கு மகிழ்ச்சி தருமா? பாருங்கள் சுதாங்கன் சார். இந்த போதைப் பழக்கத்தை நீங்கள் விட்டுவிட வேண்டும் என்று கடவுள் முடிவெடுத்துவிட்டார் என்று எனக்குத் தோன்றுகிறது, மற்றபடி அணிலை மாட்டவைத்து. இந்த ஊசியை வெளிக் கொண்டு வருவாரா? நீங்கள் எவ்வளவு காலமாக மறைத்து வந்த தவறு. இது? இன்று வெளி வருவானேன்? சொல்லுங்கள்?”

“நீங்கள் சொல்லுவது சரிதானோ என்றே எனக்கும் தோன்றுகிறது, அம்மாவுக்குமே என்மேல் ஏதோ சந்தேகம் தோன்றிவிட்டது என்று நினைக்கிறேன், இந்த டிரைவர் மாதிரிப் பலரை அங்கங்கே வைத்து

என்னைக் கண்காணிக்கிறார்கள், இந்த ஊசியைக்கூட. வேறு எங்கும் வீசினால் யார் எங்கிருந்து பார்த்துவிடுவார்களோ என்று பயம், வேறு வழியில்லாமல்தான் இந்த மாதிரி ஐடியா செய்தேன், மண் வளப் படட்டும் என்று அப்படியே விட்டுவிடுவது தவிர உரமாக எடுப்பது கூடக் கிடையாதே என்று நினைத்தேன், ஆனால் நீங்கள் சொல்வது சரிதான் மகதி, இந்தப் பிழையிலிருந்து என்னை மீட்கக் கடவுளே நாள் குறித்துவிட்டார்!” என்றான் சுதாங்கனும் ஆறுதலுடனயே,

கெட்ட பழக்கங்களில் இருந்து மீள்வதற்கு. தப்பு செய்கிறோமே என்ற கழிவிரக்கமும். தவறைத் திருத்திக் கொள்ளம் ஆர்வமும்தான் முக்கியம் என்று எதிலோ படித்த நினைவு மகதிக்கு வந்தது, அந்த வகையில் சுதாங்கன் எளிதாக மீண்டு விடுவான்!

“சுதாங்கன் சார். உங்கள் மீட்சிக்குத் தேவையான விவரங்களை நான் சேகரித்துத் தருகிறேன், நீங்கள் ஆன்ட்டியை மகிழ்ச்சியாக வைத்திருப்பதை மட்டும் பாருங்கள், ஆன்ட்டிக்கு நீங்கள் மட்டும்தான் ஆதாரம் என்பதை மட்டும் எப்போதும் நினைவில் வைத்திருங்கள்,” என்றாள் அவள்,

பிறகு இது பற்றி நினைத்துப் பார்க்கும்போது. இவ்வளவு எளிதாக விஷயம் முடிந்தது பற்றி மகதிக்கே ஆச்சரியமாக இருந்தது,

ஆச்சரியம் என்னவென்றால் “நீ யார் கேட்பதற்கு” என்று சுதாங்கன் கூறவே இல்லை! ஏனெனில் திருந்தும் ஆவல் அவனுக்குமே இருந்திருக்கிறது, வழிதான் தெரியாமல் திணறியிருக்கிறான், இப்போது அந்த வாய்ப்புக் கிடைத்துவிட்டதால் நிச்சயமாக விரைவிலேயே திருந்தி விடுவான்!

தன் துன்பத்திலேயே முழுகிக் கரைந்துவிடாமல் நிமிர்ந்து நல்லபடியாக வாழும் வாய்ப்பைத் தந்த சாந்தமதிக்கு நன்றிக் கடன் செலுத்தும் வாய்ப்பாகக் கருதி. சுதாங்கனின் மீட்சிப் பணியில் மகதி தீவிரமாக ஈடுபட்டாள்,

அவளது ஆராய்ச்சிப் போர்வையில் வெளியே தெரியாமலே அவளால் இந்த வேலை செய்யவும் முடிந்தது,

ஆனால் இடையே அவளது மனம் நிரஞ்சனிடம் ஓடி விடும்,

பெண்களை வெறும் உல்லாசப் பொருளாகப் பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிவதும் கெட்ட பழக்கம்தான், ரொம்பவே! கொடிய பாவமும் கூட, அதிலிருந்து அவனை யார் எப்படிக் காப்பாற்றப் போகிறார்கள்? அப்படியே யாரேனும் அவனைக் காப்பாற்ற முயன்றாலும். சுதாங்கனைப் போல அவனும் அதை ஏற்க வேண்டுமே! செய்வானா?

அதெங்கே? விலையல்லவா கொடுக்கிறான்! விலையைக் கொடுத்ததுமே அவனுக்கு எல்லாம் முடிந்துவிடும் போல!

எப்போதும் போலவே மனம் தவித்து. வழக்கம் போல நிரஞ்சன் நினைவைப் பிடிவாதமாக ஒதுக்கிவிட்டு மகதி தான் ஏற்ற பணியில் தீவிரமாக ஈடுபட்டாள்,

குற்றால மலைச் சாரலை ஒட்டியே சற்று ஒதுக்கமாக ஒரு மறுவாழ்வு மையம் இருந்தது,

நேரில் போய் விசாரித்தாள், உள்ள நிலையைக் கேட்ட மையத்தினருக்கு மிகவும் மகிழ்ச்சியே, பாதிப்புக்கு ஆளானவரே திருந்த விரும்பும்போது நிச்சயமாக இந்தக் கெட்ட பழக்கத்தை அடியோடு விட்டு விடுவார் என்று அவர்களும் உறுதியாகச் சொன்னார்கள்,

ஆனால் அவளும் சுதாங்கனும் அஞ்சியது போலவே. மையத்தில் குறைந்தது நாலு நாட்களேனும் தங்க வேண்டும் என்றார்கள், அவனை நன்கு கண்காணிக்க வேண்டுமாம்,

இதற்கு சாந்தமதியிடம் எப்படி. என்ன மாதிரிச் சொல்லி அனுமதி வாங்குவது? முதலில் கூடவே இருந்து கண்காணிக்கும் இந்தக் காரோட்டியை என்ன செய்வது? சுதாங்கனே அஞ்சுவது போல இன்னும் யார்யாரோ?

“யாராவது சினேகிதனுக்கு வெளியூரில் திருமணம் என்று கேளுங்கள், அல்லது நண்பனுக்கு உடம்பு சரியில்லை,. போய்ப் பார்க்க வேண்டும் என்று இந்த மாதிரி ஏதாவது கதை சொல்ல வேண்டியதுதானே? நாலே நாட்கள் தானே?” என்றாள் மகதி,

“ஆனால் எந்த நண்பனுக்கு. எந்தப் பெண்ணைப் பிடித்துத் திடுமெனத் திருமணம் செய்து வைப்பது? அல்லது எவன் காலை ஒடித்து மருத்துவமனையில் போடுவது?” என்று சுதாங்கன் சோகம் போலக் கேட்கவும் மகதிக்குச் சிரிப்பு வந்தது,

“ஐயோ என்ன இது சுதாங்கன்? நான் கவலையாக யோசித்தால் நீங்கள் சிரிப்பு மூட்டுகிறீர்களே!” என்று வாயால் கேட்டபோதும் அடக்க மாட்டாமல் மேலும் கலகலத்தாள் அவள்,

“இல்லையே, நானும் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன், இந்த இரண்டுமே முடியாது என்பதால் என்னைப் புரிந்துகொண்டு உதவும் நபரை இங்கே வருமாறு கூப்பிடப் போகிறேன்,” என்றான் அவன் ஒரு புன்னகையோடு,

சாந்தமதியும் முட்டாள் அல்ல, இளைய தலைமுறயினர் இருவருக்கும் இடையே அடிக்கடி நடக்கும் இந்தத் தனிப்பட்ட உரையாடல்களை தாயும் ஓரளவு கவனித்துக் கொண்டேதான் இருந்தாள்,

காரணத்தை வேறாக ஊகித்து. மகதியைப் பற்றிய விவரங்களை அறிய முந்பட்டாள்,

அந்தஸ்து பாராமல் மணம் செய்து மகிழ்ச்சியோடும் வாழ்ந்திருந்த சாந்தமதிக்கு மகதியின் பொருளாதார நிலை பெரிய குறையாகத் தோன்றவில்லை, பின்புலம் கிடையாது என்பதும்கூட அப்படித்தான் ,

ஆனால் அவளுக்கு இன்னோர் அபிப்பிராயம் தேவைப்பட்டது,

“பண்ணைக் கணக்குகளைச் சரிவரப் பார்க்க உன் உதவி தேவை, உடனே வர் என்று அண்ணனை அழைத்த சுதாங்கனைப் போலவே. சாந்தமதியும் தமக்கை மகனுக்கு ஒரு கோரிக்கை வைத்தாள்,

தாய் மகன் இருவருமே இன்னோர் உதவியை நாட முற்பட்டதின் பலனாக  சாந்தமதியுடைய தமக்கை மகன் அங்கே வந்து சேர்ந்தான்,

அவனைக் கண்ட மகதி அதிர்ந்தாள், ஏனெனில் அவன் நிரஞ்சன்,

சாந்தமதியும் சுதாங்கனும் சொன்னதை வைத்துப் பார்க்கும்போது. இந்தப் பண்ணை நிரஞ்சனுக்கும் தாத்தா சொத்துதான், உரிமை உள்ளவன் வந்திருக்கிறான்!

ஆய்வாளர். நிரஞ்சன் யாரையும் சந்திக்க வேண்டியிராத ஒரு நல்ல அடைக்கலம் கிடைத்தது என்று நிம்மதியாக இருந்தால். இது புலியின் இன்னொரு குகையாகவே இருந்திருக்கிறது! இப்போது அந்தப் புலி அவளை விரட்டவும் போகிறது,

அந்தக் கடைசி நாள் அவளுக்கு நன்றாக நினைவிருந்தது, கல்லில் பொறித்த எழுத்துகள் போல!

இனி அவள் எதற்கும் தயாராக இருக்க வேண்டும், எப்போதும்!

ஆனால் இந்த சுதாங்கனின் மறு வாழ்வு என்ன ஆகும்? அதற்கும் வழி மூடப்பட்டுவிடுமா?

மூச்சு முட்டுபவள் போல உணர்ந்த மகதி கோயிலுக்குச் செல்வதாகச் சொல்லி எழுந்து சேன்றுவிட்டாள்,

அதிலும் நல்லதை யோசித்து. “குடும்பமாக நாம் பேசும்போது நாகரீகமாக ஒதுங்கிக் கொள்கிறாள் பார்! “ என்று பாராட்டினாள் சாந்தமதி,

பயந்து ஓடுகிறாள் என்று தெரியாமல் சித்தி இன்னொரு விளக்கம் சொல்கிறாளே!

நிரஞ்சன் பேசாமல் இருக்கவும். “கடந்த ஒரு மாதமாகப் பார்க்கிறேன், மகதிக்கு ரொம்ப நல்ல குணம் நீரு, கொஞ்ச நாட்கள் இருப்பாய் அல்லவா? நீயே பார்த்துத் தெரிந்து கொள், இப்போது  இதைச் சொல்லு, அக்கா எப்படி இருக்கிறாள்? இங்கே எப்போது வருவதாக உத்தேசம்? அப்பா அனுமதிப்பார்தானே?” என்று அவனுடைய குடும்ப விவரம் விசாரித்தாள்,

“அம்மாவிடம் பேசிவிட்டுச் சொல்லு அண்ணா, அப்புறமாகக் கணக்குகளைப் பார்க்க வேண்டும்,” என்று சுதாங்கன் தன் அறைக்குப் போனான்,

கையில் குறிப்புப் புத்தகம் எதையும் எடுத்து வராவிட்டாலும். தூண்களின் சிலைகள். அவைகளில் பொதிந்திருக்கும் நுணுக்கங்கள். அர்த்தங்கள் என்று தேடிப் பிடித்து ஆராய்வது மகதியின் வழக்கம்,

ஆனால் அன்று அதெல்லாம் மனதில் தோன்றக்கூட இல்லை,

இந்த விதி ஏன் அவளை இப்படித் துரத்துகிறது?

இங்கே நிரஞ்சன் முக்கியமானவன் என்கையில் அவள்தான் ஓடியாக வேண்டும், கடவுள் கருணையால் கிடைத்தது என்று எண்ணினாளே. இதை விட்டு எங்கே போவது?

சிறிய தாயாரின் கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் சொல்லி வந்த நிரஞ்சன். ஒரு கட்டத்தில் மெல்ல எழுந்தான்,

அவனது பார்வை சுழல்வதைக் கண்டு. “மகதி கோயிலில் இருப்பாள் பெரியதம்பி,” என்றாள் சாந்தமதி, “அவளோடு சற்றுப் பேசிப் பார்த்துவிட்டு வா, உனக்குப் பிடித்த சமையல் செய்யச் சொல்லுகிறேன்,” என்று சாந்தமத உள்ளே சென்றாள்,

சித்தியின் அனுமதியுடனேயே மகதியைத் தேடிச் சென்று தனிமையில் சந்தித்து நிரஞ்சன் கேட்ட முதல் கேள்வி “ அடுத்த பலியாடு பிடித்துவிட்டாய் போல?” என்பது,

பலியாடா? யார் பலியானது? பரவாயில்லை, கெட்டிக்காரன்தான், முந்தினவன் கை மந்திரவாள் என்று தெரிந்தவன் அல்லவா? இப்போதும் பழி போட முந்திக் கொள்கிறானாக்கும்!

ஆனால் அவளது தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்ட பிறகல்லவா. அவளால் பேச முடியும்?

மகதி முயற்சி செய்யும்போதே. “உலகம் ரொம்பச் சின்னது,” என்று நிரஞ்சன் மறுபடியும் தொடங்கினான்,

ஒருவாறு பேச்சு வந்துவிட. “ துரதிருஷ்டவசமாக அப்படித்தான் தெரிகிறது,” என்றாள் அவள்,

“சரியாகச் சொன்னாய், ஆனால் எப்போதும் அதிருஷ்டக்காற்று உன் பக்கமே வீசிக் கொண்டிராது, அதனால் இந்த பலி உனக்கு ஒரு போதும் கிடைக்காது, கிடைக்க விடமாட்டேன்,” என்றான் அவன் சூளுரைப்பது போல,

இவனுக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம்? அத்தோடு என்ன அதிருஷ்டம்?

“வா” என்று கூட்டிப் போனதும் இவன்தான், “போ” என்று விரட்டியதும் இவனே,

ஒருவேளை அந்த ஐந்து லட்சத்தைச் சொல்கிறானா?

ஆனால் அந்தப் பணத்தைக் கூட அவள் எடுக்கவே இல்லை என்று இதற்குள் தெரிந்துதானே இருக்கும்? அது ஏன் என்று கூடவா யோசிக்க மாட்டான்?

ஒருவேளை இன்னும் அதிகம் கேட்பதற்காக அவனுடைய உறவினரிடமே வந்து உட்கார்ந்திருக்கிறாள் என்று எண்ணுகிறானா?

அல்லது. இந்த நெருங்கிய உறவிடம் நடந்ததைக் கூறி விடுவாளோ என்று அந்தக் கலக்கத்தில் சீறுகிறானோ?

இப்படி ஓர் உறவு இருப்பது முன்பே தெரிந்திருந்தால் இந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டாளே!

சொன்னால் நம்பப் போகிறானா? நிச்சயமாக மாட்டான்,

எப்படியோ? அவளைப் பற்றி நல்லதாக மட்டும் நினைப்பதாக இல்லை என்று தெரிகிறது, இவனிடம் பேசுவதே உள்ளிருக்கும் காயத்தை இன்னமும் பெரிதாக்குவதில்தான் முடியும்,

பேசாமல் திரும்பி நடந்தாள் மகதி,

அதையும் தவறாகவே எடுத்து. “அவ்வளவு அலட்சியமா? என்னால் முடியாது என்று நினைத்தாயா? இந்தக் குடும்பத்தில் என் சொல் வேதம், அதை முதலில் தெளிவாகத் தெரிந்துகொள்,” என்றான் நிரஞ்சன் அதட்டலாக,

நின்று திரும்பிப் பார்த்தாள் அவள், பெரும்பாலும் இது மெய்யாகவே இருக்கக் கூடும், அவ்வப்போது “பெரியதம்பி”. “அண்ணன்” என்று தாயும் மகனும் கூறும் வார்த்தைகளில் அன்போடு மரியாதையும் தொனிக்கக் கேட்டிருக்கிறாள்,

இது உதவவும் கூடும்,

எனவே “அவ்வளவு மதிப்பு இருந்தால் அதை நல்ல காரியத்துக்காகப் பயன்படுத்துவதுதானே?” என்று நிரஞ்சனிடம் வினவினாள் அவள்,

சுளீர் என்று பதில் வந்தது, “ உன்னை இங்கிருந்து விரட்டுவதை விட நல்ல  காரியம் ஒன்று உண்டா என்ன?”

கீறல் விழுந்த பழைய கால கிராமஃபோன் ரிக்கார்டு மாதிரி மறுபடியும் அதே பேச்சா? எரிச்சலுற்று .”ஒழுங்காகக் கண்ணைத் திறந்து பார்த்தால் எல்லாம் தெரியும், சுற்றிலும் என்ன நடக்கிறது. அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதெல்லாம் நன்றாகப் புரியும்,”

என்று கடுப்புடன் கூறினாள் அவள்,

ஆனால் அவனும் சளைப்பதாக இல்லை, "அப்படி நன்கு பார்த்ததால்தானே உன் கபடம் தெரிந்தது," என்றான் அவன்,

"என்ன தெரிந்தது? மண்ணாங்கட்டி! உருப்படியாக எதையுமே அறியவில்லை, கொக்குக்கு ஒன்றே மதி என்பது போல ஒன்றையே நினைத்துக் கொண்டிருந்தால் இதுதான் கதி!" என்றாள் மகதி குத்தலாக,

"ஏய். என்ன சொல்லுகிறாய்? என்னைத் திசை திருப்ப முயற்சி செய்யாதே, பலன் இராது!"

"கண் முன்னே இருக்கிற ஒன்றையே உருப்படியாகப் பார்க்க முடியவில்லை, இதில் திசை திருப்பி இன்னொன்றையும் பார்க்கச் சொல்வதா? நான் ஒன்றும் அவ்வளவு பெரிய முட்டாள் அல்ல! " என்றாள் மகதி

"முட்டாளா? நீயா? உன்னை முட்டாள் என்று சொல்லும் தைரியம் யாருக்கு உண்டு? நீ கெட்டிக்காரி என்பதுதான் எல்லோருக்கும் தெரியுமே! அதுவும் மற்றவர்களை முட்டாளடிப்பதில் டாக்டர் பட்டமே கொடுக்கலாமே!

வெறித்துப் பார்த்துவிட்டு திரும்பிச் செல்ல முயற்சித்தாள் அவள்,

சட்டென அவளது கையைப் பற்றிச் சுண்டி இழுத்து நிறுத்தி "முதலில் எனக்குப் பதில் சொல்லிவிட்டுப் போ," என்று அவன் தடுத்தான்,

அவனது கை பற்றிய இடத்தையே பார்த்து மகதி பேசினாள், "சீக்கிரமே உங்கள் சித்தி இங்கே வருவார்கள், இதைப் பார்த்தால் தன் அக்காவுடைய உன்னத குமாரன் பற்றிய அபிப்பிராயம் எப்படி மாறக் கூடும்? எனக்கு அது தெரியும், ஆனால் உங்களால் யூகிக்க முடிகிறதா?"

சுட்டுவிட்டாற்போலக் கையை உதறிவிட்டுப் போனான் அவன்,

நெஞ்சுப் படபடப்பு மறையச் சற்று நேரம் பிடித்தது மகதிக்கு, ஆனால் நிரஞ்சனுக்குப் பதில் கொடுக்க முடிந்ததை எண்ணி உள்ளூர ஒரு திடமும் உண்டாயிற்று,

இடைப்பட்ட காலத்துத் துன்பம் அவளுக்கு உறுதியைத் தந்திருக்கிறதா? அப்படியானால். இங்கிருந்து செல்ல நேர்ந்தாலும் இந்தத் தைரியம் எங்கேயும் அவளை வாழ வைக்கும்!

ஒன்றே ஒன்று, சுதாங்கனின் பிரச்சினை நல்லபடியாகத் தீர்ந்துவிட்டால் போதும்! அவள் எங்கோ போய் எப்படியோ பிழைத்துக் கொள்வாள்,

தினமும் காலையில் எழும்போது. அங்கிருந்து வெளியேற்றப்படும் உத்திரவை எதிர் நோக்கி. ஒரு கலக்கத்துடனேதான் மகதி அறையை விட்டு வெளியே வருவாள், ஆனால் அது போன்ற எந்த வித மாற்றமும் இல்லாமலே அவளது நாட்கள் கழிந்தன,

மாற்றம் அந்த வீட்டில் அவளது நிலையில் இல்லையே தவிர. நிரஞ்சன் அவளைத் தேடி வந்து கொத்திக் குதறிக் கொண்டேதான் இருந்தான்,

அவனுக்கு வசதியாக மகதியிடம் பேசி பழகி அவளது மனநிலை பற்றி அறியும் பொறுப்பை அவனுடைய சித்தி சாந்தமதி அவனிடமே ஒப்படைத்திருந்தாள்,

நிரஞ்சனுடைய தந்தை வழி உறவுகளால். அக்கா தங்கைகளான பானுமதியும் சாந்தமதியும் அடிக்கடி சந்தித்துப் பேசி மகிழ முடியாமல் இருந்தபோதும். இருவருடைய பிள்ளைகளுமே அடுத்தவரைத் தாய்க்கு ஒப்பாகத்தான் கருதினர், தாய்மாரும் பிள்ளைகளை அப்படியேதான் நினைத்தனர்,

அதில் பண்ணையில் பெரும்பகுதி சகோதரிகளின் பொதுச் சொத்து என்பதால். அதன் வரவு செலவுக் கணக்குகள். வரிகள். அததில் கையெழுத்து என்று சாக்கு காட்டி பானுமதி அவ்வப்போது பண்ணைக்கு வந்து தங்குவாள்,

அப்போதெல்லாம் எல்லோருக்கும் ஒரே கொண்டாட்டமாக இருக்கும்,

அந்த வகையில் சித்தியிடமிருந்து. “உன் தம்பிக்கு ஒரு பெண் பார்த்து வைத்திருக்கிறேன், இருவருக்கும் நல்லபடியாகவே பேசிப் பழகுகிறார்கள், அவளுக்கு இங்கே இருக்கவும் விருப்பமாகத்தான் தெரிகிறது. ஆனால். திருமணம் பற்றி. அவளிடம் நேரில் கேட்க முடியவில்லை! நீ வந்து முடித்துக் கொடு,” என்று தகவல் வந்தபோது மிகவும் மகிழ்ச்சியோடுதான் நிரஞ்சன் கிளம்பி வந்தான்,

அத்தோடு ஒரு பொறுப்புள்ள அண்ணனாகவும்,

தன்னைப் போலத் தம்பியும் ஓர் அழகான முகத்தைக் கண்டு ஏமாந்து விடக் கூடாதே என்ற கவலையும் இருந்தது!

இங்கே வந்து பார்த்தால். அவனை ஏமாற்றிய அதே முகம்!

இந்த மகதி இங்கே எப்படி வந்தாள்? என்ன நோக்கத்தோடு வந்தாள்? அவர்கள் இருவருக்கும் திருமணம் என்று ஒரு கூத்து நடந்ததைச் சமயம் பார்த்துச் சித்தியிடம் சொல்லி. அவளது கட்சிக்கு ஆதரவு தேட வந்தாளா? அல்லது இந்தப் பண்ணைச் சொத்தின் மேல் ஆசைப்பட்டு முழு வாரிசு என்று எண்ணி சுதாங்கனை மயக்கிப் பிடித்துவிடும் நோக்கமா?

அவளது திட்டம் எதுவானாலும் அவன் அதை நடக்க விடப் போவது இல்லை!

மகதி எப்படிப்பட்டவள் என்பதை உடனே எடுத்துக் கூறி. அவளை இங்கிருந்து

விரட்டி விட வேண்டும் என்றுதான் நிரஞ்சன் முதலில் நினைத்தான்,

ஆனால் அப்படி இலகுவாக அவளை மீண்டும் விட்டுவிடுவதா? இன்னொரு தடவை அவனது பாதையில் குறுக்கிட அஞ்சும் அளவுக்கு அவளை வருத்திவிட வேண்டாமா?

அவளைக் கூனிக் குறுக வைத்து அதன்பின் ஓட்ட வேண்டும்!

மகதியைப் பழி வாங்கத் திட்டமொன்றைத் தீட்டி. நிரஞ்சன் அதைச் செயல்படுத்தலானான்!

# அத்தியாயம் - 11

ரொம்பவும் சுலபமான திட்டம்தான்,

“இந்தக் காலத்துப் பெண்கள் மனதை வெளியே காட்டிக் கொள்வதே இல்லை. சித்தி, திரை போட்ட மாதிரி மறைத்துக் கொள்கிறார்கள், அதனால் ஒரே தரம் பேசுவதில் கண்டு கொள்ள முடியாது, பொறுமையாக இருங்கள், மெல்ல மெல்ல மனதில் இருப்பதை வெளிக் கொணர்ந்து விடலாம்,” என்று சிற்றன்னையிடம் கூறி. மகதியிடம் அடிக்கடி பேசுவதை நிரஞ்சன் எளிதாக்கிக் கொண்டான்,

சாந்தமதியும் அவனைத் தடுக்கவில்லை, நிரஞ்சனே கூறியது போல அக்கா மகனின் பேச்சு அவளுக்கு வேதமாகத்தான் இருந்தது,

வேதமாக அவனது பேச்சை ஏற்றதோடு. தன் அக்காவின் விருப்பத்தையும் அவனிடம் தெரிவித்தாள், “எங்களுக்குப் பேரப்பிள்ளைகளைக் கொஞ்சுகிற வயதாகிவிட்டது, இவனுக்கும் திருமணமாக. அம்மா பார்த்திருக்கிற பெண்ணைச் சீக்கிரமே நீயும் மணந்துகொண்டால் எங்கள் இருவருக்கும் நன்றாக இருக்கும்,” என்று கூறினாள்,

அவர்களைத் தாண்டி வாசகசாலைக்குச் சென்ற மகதி அவர்கள் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை,

கனிவுடன் நோக்கி. “வேலையில் எவ்வளவு கவனம் பார்,” என்றாள் சாந்தமதி,

“நூறு சதவீதக் கவனத்தோடு வேலை செய்கிறவளிடம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் சித்தி,” என்ற பிள்ளையின் பார்வை  கண் குத்திப் பாம்பாய் மகதியைப் பின்பற்றியது,

அவளோடு பேசும் போதெல்லாம் ஏளனமும் எகத்தாளமுமாக எதையாவது சொல்லி அவளை வருத்தினான்,

நிரஞ்சன் வசதி படைத்தவன் என்று முதலிலேயே தெரிந்து வைத்துக்கொண்டு. கீழே விழுகிற மாதிரி நடித்து ஏற்ற விதமாகப் பேசி அவனை ஏமாற்றி அந்தக் கோயில் திருமணத்தை மகதியே ஏற்பாடு செய்தது போல அவன் பேசிய விதத்தில். மகதி ரொம்பவே நொந்து போனாள், ஆனால் கடைசி நேரத்தில் அவன் விழித்துக் கொண்டுவிட்டானாம்!

பைத்தியக்காரி போல நிரஞ்சன் இழுத்த இழுப்புக்கெல்லாம் போனாளே! அதுவும் எந்த அளவுக்கு! அவளுக்கு இது வேண்டியதுதான்!

அப்படியா ஒருத்தி. முன்பின் அறியாத ஒருவனை இப்படி முழுக்க நம்புவாள்? அந்த முட்டாள்த்தனத்துக்கு அனுபவித்துத்தானே ஆக வேண்டும்!

ஆனால் எத்தனை முறைஅனுபவிப்பது?

சாந்தமதி. சுதாங்கனின் பின்னே ஒதுங்கிக் கொள்ளலாம் என்று பார்த்தால். அவர்கள்தான் விலகிக் கொண்டார்கள், வெளியே ஓடவும் முடியாமல். மகதி திணறிப் போனாள்,

இதற்கு மேல் அதிகநாள் தாங்காது என்று அவளுக்குத் தோன்றலாயிற்று! ஆனால் அவளும் போய்விட்டால் சுதாங்கன் நிலைமை?

சுதாங்கனைத் தேடிப் போய். அவனைத் தனியே அழைத்து சென்று. அவன் அண்ணனிடம் பிரச்சினையைச் சொன்னானா. அவன் என்ன கூறினான் என்று கேட்க முயன்றால் இரண்டு வார்த்தை பேசுமுன். அங்கே நிரஞ்சன் வந்து நின்றான்,

அதுவும் ஓர் எகத்தாளச் சிரிப்போடு! அவளது கள்ளத்தனத்தைத் தடுக்க வந்துவிட்டானாம்!

எதையுமே தப்புத் தப்பாக யோசிக்கிற இவன் முதுகில் ஓங்கி ஒன்று கொடுக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

ஆனால் முடிந்தால்தானே? எரிச்சலோடு மகதிதான் விலகிப் போக நேர்ந்தது,

அதிலும் ஒரு பிரச்சினை!

அப்படி வேகமாக அவள் விலகிப் போனபோது. அருகிருந்த செடியின் கிளையில் மாட்டி அவளது துப்பட்டா விலகி விழுந்தது,

இதை வேறு தப்பு சொல்லப் போகிறானே என்று அவசரமாகக் குனிந்து துணியை எடுக்க முயன்றால் உள்ளே மறைவாக அணிந்திருந்த சங்கிலி முன்னே சரிந்து தலையைக் காட்டியது,

எல்லாமா எதிராக நடக்க வேண்டும் என்ற எரிச்சலோடு தனது துப்பட்டாவை எடுத்துக் கழுத்தைச் சுற்றி மூடியபடி அதி வேகமாக .அங்கிருந்து அகன்றாள் அவள்,

நிரஞ்சன் கவனிக்குமுன் மறைத்து விட்டதாகத்தான் மகதி நினைத்தாள்,

ஆனால் அடுத்து அவளைத் தனியே பிடித்த அவன். “பண மதிப்புக் கருதி. சங்கிலியை வைத்திருக்கிறாய் போல! எப்போதோ வேறாக மாற்றியிருப்பாய் என்று நினைத்தேன், உனக்குத்தான் எல்லாம் புதிது புதிதாகத்தானே பிடிக்கும்?” என்று குத்தல் குரலில் வினவினான்,

புதிது பதிதாக! எதைச் சொல்லுகிறான்?

எங்கே எங்கே என்று தேடிக் கொண்டே இருப்பான் போல! முந்தினவன் கை மந்திர வாளாக முதல் ஆளாகத் தாக்கி விடுகிறானே!

சமாளித்து “தன்னைப் போலப் பிறரையும் நினைக்கிற புத்தியா? உங்களுக்குப் பெண் நிச்சயமாமே! உங்கள் தாயாரின் தேர்வாம்? கேள்விப்பட்டேன், “ என்றாள் அவனைப் போலவே குத்தலாக,

நிரஞ்சன் தயங்காமல் பதில் கொடுத்தான்,

“கண்ணதாசன் எழுதிய “துன்பங்களில் இருந்து விடுதலை” புத்தகத்தைப் படித்ததாக நீ சொன்ன ஞாபகம் இருக்கிறது, அதில் கவியரசு சொல்வது போலப் பெற்றோர். வெறும் வெளிக் கவர்ச்சியை மட்டும் பார்ப்பதில்லை! குணம். தரம் எல்லாமே ................................”

“பெண் என்ன மூக்குப் பொடியா. மணம் குணம் தரம் பார்ப்பதற்கு?”

“அது சரி. ஒன்றைத் தெரியாதவர்களுக்கு. அதைப் பற்றிச் சொல்லி என்ன பயன்? சுற்றி வளைத்தது போதும், சொல்லு. இந்தச் சங்கிலியை ஏன் மாற்றவில்லை? பழைய நினைவில் என்று சொல்லாதே, நம்புவதற்கு இங்கே எந்த முட்டாளும் இல்லை!” என்றான் அவன் கடுப்புடன்,

உண்மையை நம்புகிறவன் முட்டாளாமா?

லேசாகத் தோளைக் குலுக்கி “அதுதான் சொன்னீர்களே மதிப்புப் பார்த்து என்று! இதை வேறாக மாற்றினால். சேதாரம். கூலி என்று நிறைய நஷ்டப்படுமாம்! வேண்டாம் என்று அப்படியே வைத்துவிட்டேன்!” என்றாள் அவள் அலட்சியமாக,

“அதானே பார்த்தேன்! ஆனால் ஒரு சந்தேகம், விற்று. மாற்றித்தானா உனக்குப் புதிது கிடைக்க வேண்டும்! விரும்பினால். சேர்த்துக்கொண்டே போகலாமே! உலகத்தில் ஏமாளிகளுக்கா. பஞ்சம்!”

“உண்மைதான்,. ஏமாறுகிறவர்களுக்கும் பஞ்சமில்லை,. ஏமாந்தவர்களைக் காதறுந்த பழம் செருப்பாய் வீசி எறிகிறவர்களுக்கும் பஞ்சமில்லை! “

அன்று யாருக்கு அதிகம் குத்துப் பட்டது? யார் வார்த்தைகளில் கூர்மை அதிகம் இருந்தது?

ஒரு முயற்சி செய்து பார்க்க எண்ணி. “உங்கள் செக்கை நான் மாற்றவே இல்லையே? பணத்தாசை பிடித்தவளாக இருந்திருந்தால் அந்த ஐந்து லட்சத்தை விட்டிருப்பேனா?” என்று கேட்டுப் பார்த்தாள் மகதி,

மறுக்க முடியாத பெரிய ஆதாரம் காட்டிவிட்டதாக உள்ளூர நினைப்பு கூட அவளுக்கு இருந்தது,

ஆனால். என்ன பெரிய உத்தமி போலவே நடிக்கிறாளே என்று நிரஞ்சனுக்கு ஆத்திரம்தான் பெருகிற்று,

“கணக்குப் போட்டுப் பார்த்திருப்பாய்,” என்றான் அவன், “ஒரு வாரத்துக்கு ஐந்து லட்சம் கொடுக்கிறவனிடம் எத்தனை கோடி இருக்கும். அதை விடுவதா என்று “உறுமீனு”க்காகச் சிறுமீனை விட்டுவிட்டாய் என்பதைக் கூடவா என்னால் தெரிந்து கொள்ள முடியாது?”

இப்படியே குத்துப் பட்டுக்கொண்டே இருக்க முடியாது, சுதாங்கனிடம் பேசிவிட்டுப் போய்விட வேண்டியதுதான் என்று மகதி முடிவு செய்தாள்,

நிரஞ்சனும். மகதி பற்றித் தனக்கு அவ்வளவு திருப்தியாக இல்லை என்று சித்தியிடம் சொல்லி விடலாமா  என்று யோசித்தபடி சென்றால் சாந்தமதி சோகமாக இருந்தாள்,

மற்றதை மறந்து. “என்ன சித்தி? என்ன நடந்தது?” என்று சிறிய தாயின் கையைப் பற்றிக் கவலையுடன் கேட்டான் பிள்ளை,

ஒரு சோகப் பெருமூச்சுடன் தாயார் சொன்னாள், “நீயும் இப்படி அப்படி என்று விடாமல்தான் முயற்சிக்கிறாய், ஆனால் எல்லாம் வீண் போல இருக்கிறது, எனக்கு இருந்த மருமகள் ஆசையில். சீட்டுக்கட்டு மாளிகை போல அஸ்திவாரமே இல்லாமல் கட்டிடம் கட்டத் தொடங்கிவிட்டேனோ என்று தோன்றுகிறது பெரியதம்பி,” என்றாள் அவள் வருத்தமாக,

“ஏன் அப்படி நினைக்கிறீர்கள்? முதலில் என்ன நடந்தது என்று சொல்லுங்கள்,” என்று நிரஞ்சன் விவரம் விசாரித்தான்,

“மகதிக்குக் கொஞ்சமாவது உன் தம்பி பற்றிய அபிப்பிராயம் இருக்கிறதா என்று பார்க்க எண்ணினேன், அதனால். அவனுக்குச் சீக்கிரமாகத் திருமணம் நடக்கக்கூடும் என்று சொன்னேன், அவளுக்கு ஒரே சந்தோஷம், யார் என்று கூடக் கேளாமல் சந்தோஷமாகப் புன்னகை செய்தாள், அதுவே எனக்கு மனம் டல்லாகிவிட்டது, அதற்கு மேல் இன்னொன்று கேட்டாள் பார். அம்மா என் தாயே!”

“அப்படி என்ன சித்தி கேட்டாள்?”

“ச்சு! சுதாங்கன் திருமணத்துக்கு அவள் ஆலத்தி எடுக்கலாமா என்று கேட்டாள், ஒரு கல்யாணத்துக்கு அவள் ஆலத்தி எடுப்பதானால் அங்கே மணப் பெண்ணாக அவள் எப்படி இருக்க முடியும்? மணக்க முடியாது என்பதைக் கூட எவ்வளவு நாசூக்காகச்

சொல்லுகிறாள் பார்! இப்படி ஒரு நல்ல பெண் எனக்குக் கொடுத்து வைக்கவில்லையே!”

நிரஞ்சனுக்கும் மனம் குழம்பியது,

நாசூக்கோ இல்லையோ? சுதாங்கனோடு மண உறவுக்கு இடமில்லை என்று சொல்லாமல் சொல்லிவிட்டாள், ஏன் அப்படி?

அறிந்தே ஆக வேண்டும் போல நிரஞ்சனுக்குப் பரபரவென்று வந்தது,

அவனைத் தவிர்ப்பதற்காக அவள் ஒளிந்து கொள்கிற இடமான லைப்ரரிக்கே சென்றான்,

எந்த வித ஜாடைப் பேச்சும் இல்லாமல் அவளிடம் நேராகவே கேட்டான், “தம்பிக்குத் திருமணம் என்றால் பெரிதாக சந்தோஷப்பட்டாயாமே! அதில் நீ மகிழ்ச்சி அடைய என்ன இருக்கிறது?” என்று வினவினான்,

பரவாயில்லை, யார் காதிலேனும் விழுந்தாலும் அவனைப் பற்றித் தப்பாக நினைக்க முடியாதபடி கேட்கிறான்,

ஆனால் எல்லாம் வெறும் வார்த்தைகள்! எல்லோருக்கும் பொதுவானவை,

அலட்சியமாக ஒரு புத்தகத்தைப் புரட்டியபடி. “நிச்சயமாக இருக்கிறது, ஙைஙை என்று சொன்னதையே சொல்லி அறுத்துக் கொண்டிருக்கிறீர்களே. அதிலிருந்து விடுதலை கிடைக்கும் அல்லவா?” என்றாள் அவள்,

அவளது பதில் நிரஞ்சனக்குத் திருப்தியாக இல்லை, சுதாங்கனை மணக்கும் ஆசை இல்லை என்று மகதி தெளிவாகச் சொல்லவில்லையே!

ஒருவேளை அந்த நூலை அடியோடு அறுத்துவிட மனமில்லையோ?

ஆனால் சுதாங்கன் திருமணத்தில் ஆரத்தி எடுக்க விருப்பம் என்று சித்தியிடமே தெரிவிப்பது என்றால் அது முழு மறுப்புதானே?

அவனை மணந்தாலும். சொத்து வரும்தானே? பின்னே ஏன் மறுத்தாள்?

ஒரு வேளை நல்லவளோ? ஆனால் மகதியின் மற்றப் பிழைகள்? அவளது ஒழுக்கத்தைப் பற்றிய மாபெரும் கேள்விக்குறி?

யோசிக்கும்போதே அவன் திகைத்தான்,

குற்றவாளி என்ற தீர்ப்பு மாறி இப்போது கேள்விக்குறி ஆகிவிட்டதா?

விருந்தாளியாக வந்தவன் திரும்பிப் போனபின் பார்த்துக் கொள்ளலாம் என்று அப்போதைக்கு ஆறப் போட்டுப் பொறுமை காப்பதும் சாத்தியமே அல்லவா?

மனம் அலைபாய. நிரஞ்சனின் கால்கள் தாமாக மகதியை நாடிச் சென்றன,

இந்த மாலை நேரத்தில் தேவதை மாதிரி தோப்புக்குள் சுற்றிக் கொண்டிருப்பாள், நடைப் பயிற்சி! அப்புறம் குளிப்பாளோ என்னவோ? இரவு உணவுக்கு வரும்போதும் பூ மாதிரி ........................

தோப்பில் அவளைக் காணாமல் பார்வையால் அலசினால் அவள் பின் புறமாகச் சுற்றிக்கொண்டு எங்கோ போனாள், அதுவும் அவசரமாக!

அந்தப் பக்கம் சுதாங்கனின் அறை இருக்கிறது!

ஏனோ உடம்பு எரிய. மறுபுறமாகச் சுற்றிக்கொண்டு அவனும் அங்கே சென்று அடுத்த அறையில் மறைந்து நின்று ஒட்டுக் கேட்டான்,

இதோ. அவளைப் பற்றி இப்போது எல்லாம் புரிந்துவிடும்,

சித்தியிடம் மெய்யாகவே மறுத்தாளா அல்லது அதுவும் அவளது நாடகமா?

இது மகதியின் குரல்! தாழ்ந்திருந்தாலும் அழுத்தத்தோடு ஒலித்தது,

“என் மூலம் எதுவும் வெளி வராது. சுதாங்கன்! ஆனால். நீங்கள் எனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும்! அதுவும் சீக்கிரமாக, இப்படிச் சும்மா இருக்கக்கூடாது,” என்றது,

“நிச்சயமாக மகதி, நான் எப்படி மறப்பேன்? எனக்கு மட்டும் விருப்பம் இல்லையா? உங்களுக்கே தெரியுமே! அம்மாவுக்குத் தெரிந்து விடக் கூடாது என்பதால் மட்டுமே தள்ளிப் போகிறது! ஆனால் ஒரு லாபம், அண்ணன் வந்த பிறகு அம்மா பழைய மாதிரி என்னைக் கண்காணிப்பது இல்லை, பெரும்பாலும் அண்ணனிடம்தான் பேச்சு! ........ அதனால் விரைவிலேயே வேண்டிய ஏற்பாடுகளை நானே செய்து விடுவேன், கவலை வேண்டாம்! “ என்றான் சுதாங்கன்,

என்ன ஏற்பாடு? தன்னைப் போலவே. தம்பியும் முட்டாளாகப் போகிறானா? இதற்கு மேல் யோசிக்க எதுவுமில்லை!

ஆத்திரத்தில் கொதித்துப் போயிருந்த நிரஞ்சன் மறபடியும் சுற்றிக்கொண்டு சென்றால். சுதாங்கனின் அறையில் யாருமில்லை,

ஒரு வேளை ஏற்பாடுகளைக் கவனிக்கப் போய்விட்டானா?

அவ்வளவு அவசரமா?

அதுவும் அவனைப் போலவேதான்! யோசிக்கவே இல்லையே!

ஆனால் மகதி? அவள் இங்கேதானே இருப்பாள்? நேரே போய். அவளது முகத்திரையைக் கிழிக்க வேண்டும்!

வேகமாகச் சென்றால் திறக்க முடியாமல் உள்ளே பூட்டியிருந்த கதவு கூட அவனுக்கு ஆத்திரமூட்டியது,

பெரிய ஒழுக்கசீலி! அண்ணனோடு நெருங்கிப் பழகிவிட்டு இப்போது தம்பிக்கு வலை விரிக்கிறவளுக்கு எதற்குக் கதவும் பூட்டும்?

ஓங்கித் தட்டக் கையை உயர்த்தும்போதே. "யார்?" என்றபடி கதவு திறந்தது,

குளித்தாளோ முகம் கழுவினாளோ? பூ மாதிரிதான் தோன்றினாள்,

அவனைப் பார்த்ததும் "நீங்களா? நீங்களா கதவைத் திறக்க முயன் ........................" என்று மகதி கேட்டுக் கொண்டிருக்கும்போதே முரட்டுத்தனமாக அவளைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றான் அவன்,

சற்றும் எதிர்பாராத திடுக்கிடலில் நேர்ந்ததோ என்னவோ? "ரஞ்சன். என்ன இது?" என்று பின்னடைந்தாள் மகதி,

அவளை வெறித்து நோக்கி. "ரஞ்சனா? அப்படியானால் குளிக்கும்போது கூட. பிரியாதிருக்கக் கேட்டதும் நினைவு இருக்குமே!" என்றான் அவன்,

கண் மூடித் திறந்து. "சாரி, அந்தப் பெயர் வாயில் வந்திருக்கக் கூடாது, ஏதோ அதிர்ச்சியிய் தவறிப் போய்ச் சொல்லிவிட்டேன், ஆனால் தெரிந்து கொள்ளுங்கள், அந்தப் பிறவியே முடிந்து நாளாகி விட்டது! அவள். உங்களை அப்படிக் கூப்பிட்டவள் எப்போதோ செத்துவிட்டாள்! " என்றாள் மகதி உணர்ச்சி துடைத்த குரலில்,

"சாவா? என்னைப் பார்த்தபிறகுதான் பிறந்திருப்பது போலத் தோன்றுவதாகச் சொல்லுவாயே! " என்று மீண்டும் நினைவூட்டினான் நிரஞ்சன்,

அவனது பார்வையைத் தவிர்த்து "சொன்னேனே. அந்த முட்டாள் செத்துவிட்டாள் என்று!" என்றாள் அவள் மறுபடியும்,

அவளை அணுகியபடி "செத்தவர்கள் பிழைத்ததாகக் கதை இருக்கிறது! மீண்டும் உனக்குப் புது உயிர் கொடுக்க நானும் தயார், " என்றான் அவன்,

சூடு பட்ட பூனையாய் " வெளியே போங்கள்! " என்று சீறினாள்

மகதி,

"என் குடும்ப  வீட்டில் இருந்துகொண்டு. என்னையே வெளியே போகச் சொல்லுவதா? பக்கத்தில் வருகிற அத்தனை ஆண்களுக்கும் உன் உறவு கிடைக்கிறது,, நீயே தேடிப் போய்ப் பேசுகிறாய்? நான் மட்டும் என்னடி விதி விலக்கு?"

ஒரு நிதானத்துடன்  நிரஞ்சன் நெருங்கிய விதம் மகதியுள் குளிர் பரப்பியது,

வார்த்தைகளால் கொத்தியது அலுத்துவிட்டதா? இது புது மாதிரிச் சித்ரவதையா? இருக்கும் இடம் கூட மறந்து விடும்படி என்ன நேர்ந்தது?

மேலும் இன்னும் இதற்கு மேல் எவ்வளவு தூரம் பின்னே செல்ல முடியும்?

தவிப்பை வெளியே காட்டாமல். "உங்களை எனக்குப் பிடிக்கவில்லை! அவ்வளவுதான், போய்விடுங்கள்!" என்றாள் அவள்,

"ஞாபக சக்தி ரொம்பக் குறைவு போல? கடைக்குப் போகக் கூட விடாமல் கட்டிப் பிடித்த நினைவுகள் அப்படியா மறக்கும்? எனக்கு மறக்கவில்லை! மேலும் அன்று போலவே. இன்றும் நீ மிகவும் அழகாகத்தான் இருக்கிறாய் ... "

அவளை வருத்த நிரஞ்சன் எந்த அளவுக்குப் போவான்? மற்றவர்கள் முன் கேவலப்படாமல். இவனையும் கேவலப்படுத்தாமல் இவனை எப்படி வெளியேற்றுவது?

முதுகில் சுவர் தட்டவே நிமிர்ந்து நின்று. "பிடிக்கவில்லை என்றேனே! பிடிக்காததைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்கிற அவசியமும் எனக்கு இல்லை! இதற்கு மேல்கிட்டே வந்தால் உங்கள் சித்தியைக் கூப்பிடுவேன்! ஜாக்கிரதை!" என்று உறுதியோடு எச்சரித்தாள் மகதி,

"ஏய் ..." என்று கையை ஓங்கிவிட்டு. "சை!" என்று கையைக் கீழே போட்டான் அவன், நிதானப்படுத்திக்கொள்ள அவனுக்கு ஒரு பெரிய மூச்சு தேவைப்பட்டது போலும்,       மெல்லத் திரும்பி நடந்தவன் கதவருகில் நின்று. "உத்தமி நாடகம் பிரமாதம், ஆனால் உன்னை நம்புவதற்கு நான் சித்தியோ. சுதாங்கனோ கிடையாது, என் தம்பியைக் காப்பாற்ற நான் எந்த எல்லைக்கும் போவேன், நினைவிருக்கட்டும்," என்று அவன் பங்குக்கு எச்சரித்துவிட்டுப் போனான்,

ஓடிப் போய்க் கதவை உள்ளே தாளிட்டுவிட்டு வந்த மகதிக்கு வெகு நேரம் மூச்சு விடுவது கூடச் சிரமமாகிப் போயிற்று,

யாரை யாரிடமிருந்து யார் காப்பாற்றுவது? அவளை நோகடிப்பதற்காக நிரஞ்சன் எந்த எல்லைக்கும் போவான் போலிருக்கிறதே!

சாந்தமதியை மீறி நிரஞ்சன் எதுவும் செய்துவிட மாட்டான், ஆனால் அவனைப் பிள்ளையாகவே நினைக்கும் அந்த நல்ல பெண்மணியிடம் இதைப் பற்றி எப்படிக் கூறுவது?

ஒரு மகன் அப்படி. இன்னொருவன் இப்படி என்று அறிந்தால் உடைந்து போவார்கள்!

விவரம் சொல்ல முடியாதபோது. இங்கிருந்து மகதிதான் சென்றாக வேண்டும், ஏனெனில் இது போன்ற இன்னொரு தாக்குதலை அவளால் தாங்க இயலாது,

நம்பிக்கையைத் தளர விடக் கூடாது, முன்பு உடைந்து கிடந்தபோது. ஒரு வழி கிடைக்கவில்லையா? அதே போலக் கடவுள் வேறு ஒரு நல்ல திருப்பத்தையும் காட்டுவார்,

நம்ப வேண்டும், நம்பி முயற்சியும் செய்ய வேண்டும், அவ்வளவே!

ஹஹஹ ஹஹஹ ஹஹஹ

அத்தியாயம் -12

மறு நாள் பத்திரிகையை எடுத்துப் போய் ஒரு மூலையில் அமர்ந்து. அதைப் படிக்கும் சாக்கில் வேலைக்கு ஆள் தேவைப் பகுதியை மகதி தீவிரமாக ஆராய்ந்தாள், அவளுக்கு ஏற்ற வேலை. கிட்டத்தட்டவேனும் ஒன்று கிடைக்காமலா போகும்?

திடுமென சாந்தமதி “அடக் கடவுளே!” எனவும் எல்லோரும் அவளைத் திரும்பிப் பார்த்தனர்,

“என்ன சித்தி?”

“சொல்லுங்கம்மா. இப்போது கடவுளை இங்கே எதற்குக் கூப்பிட்டீர்கள்? அவர் வந்து செய்யும்படியாக ஏதேனும் பெரிய பிரச்சினையா?”

“ஐயோப்பா! எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லைடா, சும்மா ஓர் அதிர்ச்சி ... எனக்குப் ,பெரிதாக ஒன்றுமில்லை, அதாவது .............என் சினேகிதி சுந்தரி எல்லோருக்கும் தெரியுமில்லையா? மகதி. உன்னைக் கூட அவள்தானே என்னிடம் அனுப்பி வைத்தாள்?”

விழி உயர்த்திப் பார்த்துவிட்டு மீண்டும் பத்திரிகையில் மகதி மூழ்கினாள்,

“சொல்லுங்கள் சித்தி, அவர்களுக்கு என்ன?”

“அவளுக்கு ஒன்றுமில்லை, ஆனால் சுந்தரி வாட்ஸ்ஆப்பில் ஒன்று போட்டிருக்கிறாள், சூட்சுமன் என்கிற ஆய்வாளர் கோயில்கள் பற்றி எழுதுகிறவர் ... அவரது புதிய கட்டுரையைப் பற்றி! கட்டுரை மகா மட்டமாம் பழைய ஆய்வுகள். சரித்திரச் சான்றுகள். கல்வெட்டுப் பதிவுகள் என்று எதுவுமே இல்லையாம், இப்படி இருந்திருக்கலாம், .அப்படி இருந்திருக்கலாம் என்று எல்லாம் வெறும் ஊகங்களாம், மட்டமான பாலினக் கற்பனைகள்! கோயில் சிலைகளில் பெண்களின் உடம்பைப் பற்றி அவர் எழுதியிருப்பதைப் படித்தால் போய் அடித்துப் போட்டு விடலாமா என்று வருகிறது என்று எழுதியிருக்கிறாள், இத்தனைக்கும் அந்த ஆய்வாளர் அரசுப் பரிசு கூட வாங்கியிருக்கிறார், கூட வேலை செய்கிறவர்களை ஏமாற்றி. அவர்களது வேலைக்குத் தன் பெயரைப் போட்டுப் பேர் வாங்கிக் கொண்டிருந்தார் போல என்று கூறுகிறாள், வெறுத்துப் போய்ப் பழைய ஆள் போய்விட்டாளாம், இப்போது. கிடைத்திருக்கும் புது ஆள் இவரைப் போலவே ஒன்றும் சரியில்லையாம், நுனிப்புல் மேய்கிறவர் போல! ஆழமான வேலை செய்யப் பிடிக்காத சோம்பேறித்தனத்தில் ரொம்ப மோசமாகச் செய்துவிட்டார்களாம், சுந்தரி வேறு சரித்திரப் பேராசிரியையா? பொறுத்துக் கொள்ள மாட்டாமல் வாட்ஸ்ஆப்பில் ரொம்பக் கோபமாகப் போட்டிருக்கிறாள்,” என்றாள் சாந்தமதி,

தாயிடம் சுதாங்கன் ஏதோ கூற. விலகி அமர்ந்து பத்திரிகையில் ஆழ்ந்திருந்த மகதியை நிரஞ்சன் திகைப்புடன் பார்த்தான்,

முன்பு அவருக்கு உதவியவள் மகதிதானே? அவளது உழைப்பைத் திருடி. அதைக் கொண்டுதான் அந்த சூட்சுமன் பரிசுகள் வாங்கினாரோ?

இன்னும் .....மகதியின் உழைப்பு அவருக்குத் தொடர்ந்து கிடைப்பதற்காகத் தன்னை அவரே விரட்ட முயன்றிருப்பாரோ?

மகதியைப் பற்றி வெளியே “நாலு” பேரிடம் விசாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தவர் அவரே! பிறகும் “பசு போல” என்று அவளைப் பற்றிப் படுமட்டமாகப் பேசினாரே!

ஆனால். அந்த லாட்ஜ் பையன்? பொறுப்பாளர்? அவர்கள் பொய் சொல்லுவானேன்? ஒருவேளை அவர்களையும் அவரே தூண்டியிருக்கலாமோ?

மகதியின் மீது குற்றம் இல்லையோ என்ற சந்தேகம் நிரஞ்சனுக்கு ஒரு பொறியாய்த் தோன்றிக் காட்டுத் தீயாய் விரைந்து பெருகியது,

ஆனால் அது ஒரு சின்ன நூல்தான்! எனினும் அதைச் சும்மா விட்டுவிட அவனுக்கு மனமில்லை,

கவனத்துடன் விலகி விலகிச் சென்ற மகதியை முயன்று தனியே பிடித்து. அவளிடமே கேட்டான்,

முன்பிருந்த நிலையைப் பற்றிச் சில கேள்விகள்,

ஆனால் முன் தினம் அவன் நடந்துகொண்ட விதத்தில் மகதி கொதிப்பில் இருந்தாள், எனவே "அந்தக் கட்டுரை பற்றி உங்கள் சித்தி சொன்னது நினைவில்லை? சான்றே இல்லாமல் கற்பனையிலேயே எழுதியது என்றார்களே! கெட்டவர்களுக்குக் கற்பனை வளம் நிறைய இருக்கும், அது சமயத்துக்கு ஏற்றபடி என்னென்னவோ சொல்லி சமாளிக்கும்! இப்போது நான் சொல்வது அப்படிப்பட்டது இல்லை என்று உங்களுக்கு என்ன நிச்சயம்?" என்று சீறினாள்,

"உன் கண்களில் பொய் தெரியவில்லை. மகதி,"

"வேண்டாம். வேண்டாம்!" என்று மறுப்பாகக் கையசைத்தாள் அவள், "கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு இருந்ததும் இதே கண்கள்தான்," என்றவளின் கண்களில் ஒரு கணம் மின்னல் வெட்டியது,

கையை உதறி. "அடடா மறந்துவிட்டதே, இடையில் கண்களில் பிரச்சினை வந்து. அறுவை சிகிச்சையில் எனக்குக் கிடைத்த புதிய கண்கள் அல்லவா இவை! யாரோ பயங்கரமான உண்மைவாதியின் கண்கள் போல! அதுதான் மதிப்பிழந்து போய் அந்த மனிதர் சீக்கிரமே செத்திருப்பார் என்று நினைக்கிறேன்! ஆனால் பாவம். என்னைப் போல ஒரு மகா மோசமான ஒருத்திக்கு அவரது கண்கள் பொருத்தப்படப் போவது தெரிந்திருந்தால் ஏதாவது பண்ணிக் கண்களை முதலில் நாசம் பண்ணிவிட்டு அப்புறம் செத்திருப்பார்! " என்றாள் ஏளனமாக,

"மகதி ப்ளீஸ்! இப்படியெல்லாம் பேசி உன்னை நீயே நோகடித்துக் கொள்ள வேண்டாம், நீ சொல்வது போல எதுவும் நடக்கவில்லை என்று எனக்குத் தெரியும், ஆனால் அந்த லாட்ஜ் பையன் ........................................................................................... "

"தெரிகிறதுதானே? அந்த லாட்ஜ் பையன் சொன்னது முழுதும் அப்பட்டமான உண்மை, அப்புறம் ... இன்னும் அந்தப் பொறுப்பாளர்! அவரும் மகா சத்தியசீலனே! போதுமா? ஆளை விடுங்கள்!" என்று படபடப்பாகப் பேசிப் பட்டென்று கைகுவித்துவிட்டு வேகமாக அங்கிருந்து அகன்று போனாள் அவள்,

அவள் நல்லவள் எனும்போது மிகவும் நியாயமான கோபமே!

பின்னோடு போய்த் தணிந்தே பேசினான், "என்னோடு வர முடியுமா? தயவு பண்ணி மகி! "

முகம் மேலும் கடுக்க. “முடியாது,” என்று உறுதியோடு அறிவித்தவள் மேற்கொண்டு பேசவே இடம் கொடுத்தாளில்லை,

இருமுறை முயன்றுவிட்டு நிரஞ்சன் தம்பியிடம் போய்ப் பேசினான்,

“என்ன ஏது என்று கேளாமல். எனக்கு உதவி செய்ய முடியுமா? மகதியை அழைத்துக்கொண்டு தஞ்சைப் பகுதிக்குச் செல்ல வேண்டும், ஏற்பாடு செய்வாயா?” என்று கேட்டான்,

சிரிப்பை அடக்கிக்கொண்டு சாதுவாகத் தலையாட்டினான் சின்னவன்,

அவன் தாயிடம் என்ன சொன்னானோ?

“பண்ணை மொத்த விற்பனைக் கிடங்குக்குச் சரியான இடம் பார்க்க நாங்கள் மூவரும் போகிறோம், நீ தனியே இங்கே என்ன செய்யப் போகிறாய்? சேர்ந்து போய். வேலை முடிந்ததும் அந்தப் பக்கம் நாலைந்து கோயில்களைப் பார்த்து ரசித்துவிட்டு வரலாம்,” என்று சாந்தமதியும் மக்களோடு கிளம்ப. மறுக்க மாட்டாமல் மகதியும் உடன் சென்றாள்,

தஞ்சையை அடைந்ததும் சினேகிதியைப் பார்க்கப் போவதாக சாந்தமதி கூற நால்வருமாகக் கிளம்பினார்கள்,

பேராசிரியையின் வீட்டை அடைந்ததும். “பெரியதம்பிக்கு ஏதோ வேலையாம், உன் உதவி தேவைப்படுமாம், நீ அவனோடு சென்றுவா, இங்கிருந்து என்னை சுதா கூட்டிச் செல்வான், வா சின்னவனே, “ என்று சொல்லிவிட்டு சாந்தமதி இறங்க சுதாங்கனும் தாயைப் பின் பற்றினான்,,

“அது … “ என்று மகதி ஏதோ கூறத் தொடங்கியது காதில் விழாதது போல நிரஞ்சன் காரைக் கிளப்பி ஓட்டலானான்,

நிந்தனையாக நோக்கி. “நான் பேராசிரியையிடம் நன்றி தெரிவிக்க நினைத்தேன், இவ்வளவு தூரம் வந்துவிட்டு. அதைச் செய்ய வேண்டாமா?” என்றாள் மகதி,

“ஏதாவது காரணம் கிடைக்கும் என்று எனக்கும் தெரியும், ஆனால் சித்தி என்ன முட்டாளா? அவர்கள் கூட சினேகிதியிடம் தனியாகப் பேச விரும்பியிருக்கலாம்,” என்ற நிரஞ்சனிடம் மகதியால் மறுத்துப் பேச முடியவில்லை,

ஆனால் சாந்தமதி கூறியது வேறல்லவா? உதவி அவனுக்கல்லவா?

சற்று யோசித்துவிட்டு. “வதைப்பதற்குப் புதிய முறை ஏதாவது யோசித்து வைத்திருக்கிறீர்களா? ஆன்ட்டி வேறு மாதிரிச்

சொன்னார்களே?” என்று வினவினாள்

“ஒரு வழியாகக் கேட்கத் தோன்றியதே! ஆனால் சித்தி உன்னை எனக்கு உதவத்தானே சொன்னார்கள்? அதைச் செய் போதும்,” என்றான் அவன்,

சாந்தமதியே அனுப்பி வைத்திருக்கும்போது. அத்து மீற இவனுக்குத் தைரியம் இராது, அப்புறம் இந்த நிரஞ்சன் ஆன்டிக்குப் பதில் சொல்ல நேரும், அதனால் பிரச்சினை எதுவும் இராது,

மடியில் கோத்திருந்த விரல்களைப் பார்த்தபடி மௌனமாக அமர்ந்திருந்தாள் அவள்,

கார் நிற்கவும் நிமிர்ந்து பார்த்தால். அது ஒரு பழைய கோயில் வளாகம், அவள் முன்பு ஆராய்ச்சி செய்த இடமே,

அதுவும் நிரஞ்சனுக்குச் “சுற்றிக் காட்டிவிட்டு வா” என்று சூட்சுமன் சார் அவளை அனுப்பிய முதல் இடம்!

“இங்கே என்ன உதவி?” என்று நிமிர்ந்தால். முன் சீட்டில் இருந்து திரும்பி அமர்ந்து நிரஞ்சன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்,

“எஎன்ன?”

“சித்தி உதவி பண்ணச் சொன்னார்கள் அல்லவா? அது எனக்கு மட்டுமல்ல, உனக்கும்தான், இறங்கிப் போ, போய். அன்று உன்னை ஒரு கேள்வி கேட்டானே நினைவிருக்கிறதா? நீ கூடப் புரி ... புரியாதது போல என்று அப்போது நினைத்தேன், ஆனால் அன்று அவன் பேச்சுப் புரியாமல் விழித்தாயே. அந்தப் பையனிடம் பேசு,” என்றான் அவன் தணிந்த குரலில்,

அகன்ற விழிகளால் அவனைப் பார்த்தாள் மகதி, என்னவோ புரிகிற மாதிரி நெஞ்சு தடதடத்தது அவளுக்கு,

ஒப்புதலாகத் தலையசைத்து. “ஆமாம்மா, எனக்குக் கிட்டத்தட்ட முழுதாக எல்லாமே தெளிவாகிவிட்டது, நீயும் அறிய வேண்டும் இல்லையா? போம்மா, போய் அவனிடம் உன் சந்தேகத்தைக் கேள், அன்று உனக்குப் புரியாத பேச்சு ஏன் பேசினான் என்று கேள்!” என்று அவளை அனுப்பிவிட்டு ஒரு கறுப்புக் கண்ணாடியை அணிந்து நிதானமாக. சற்று மெதுவாக அவளைப் பின் தொடர்ந்தான் நிரஞ்சன்,

தடுமாறிய கால்களை அழுத்தி வைத்து நடந்து. உள்ளே தகவல்கள் தரும் இடம் நாடிச் சென்றாள் மகதி,

அந்தப் பையன் இருப்பானா? கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகிவிட்டனவே! “ரூமாம்மா?” என்ற கேள்விக்குத் தலையாட்டியபடி சுற்றிலும் பார்த்தால். “அக்கா!

தப்பிச்சுட்டீங்களாக்கா? என்று ஓடி வந்து முக மலர்ச்சியுடன் கேட்டான் அவன், அதே பையன்,

"எஎன்ன என்ன மணி தப்பிப்பது? எனக்குப் புரியவில்லையே! "

"அதான்க்கா. ஒண்ணரை ...ரெண்டு மாசம் மின்னாடி நம்ம ஆய்வாளர் சார் வந்து உனக்கு உதவி செய்யணுமின்னு என் கிட்டே சொன்னாரு, உன்னை நாஸ்தி பண்ணிட்டு. உன்னைக் கெட்ட மாதிரி இடத்துக்கு அனுப்பத் திட்டம் போட்டு ஒரு புது சார் வந்திருக்கிறதாலே. வேற மாதிரிப் பேசச் சொல்லி எழுதிக் கூடத் தந்தாருக்கா, அந்தச் சமயத்திலே அவரு சொன்னாப்புலச் சொல்லிட்டேன், ஆனா உடனேயே நீயும் காணாமப் போக. எனக்கு ஒரே கவலையாப் போச்சுதுக்கா, ஆய்வாளர் சார் சொன்னாப்புல புது சாரு தப்பா உன்னை எங்கேயும் கொண்டு தள்ளிட்டாரோன்னு பயந்திட்டோம், ஆனா அப்பறமாத்தான் அல்லாம் குளம்பிப் போச்சுதுக்கா," என்று காதைச் சொறிந்தபடி நிறுத்தி யோசித்தான் அவன்,

மகதியின் குரல் கிணற்றுக்குள்ளிருந்து கேட்டது, "எஎன்ன குழப்பம்?"

"அதான்க்கா நாலஞ்சு நாள் கழிச்சு. திடீர்னு நம்ம கோயில் ஆய்வாளரு சாரு வந்தாரு, என்னையத் தனியாக் கூப்பிட்டு. புது சாரு மின்னாலே அந்த மாதிரி அவருதான் சொல்லச் சொன்னாருன்னு வெளியே யார் கிட்டவும் சொல்லவே படாதுன்னாரு, மனப்பாடம் பண்ணச் சொல்லி அவரு எழுதிக் குடுத்ததை எரிக்கணும். கொடுன்னாரு, அதுக்குள்ளாரவே நாங்க. பசங்க சேர்ந்து பேசியிருந்தமா? எங்களுக்கு சந்தேகம் சாஸ்தியாப் போச்சுது, நல்லது செய்தா ஏன் மறைக்கணும்? அல்லாரும் சேர்ந்து பேசுனாக்க. ஆய்வாளர் சாருதான் தப்பாத் தெரிஞ்சுது, இதப் பாருக்கா அவரு எளுதிக் கொடுத்தது, அத என் காசுப் பைலயே வச்சிருக்கேன்," என்று அரை டிராயரில் கையை விட்டுச் சுருக்குப் பையை எடுத்தவன் அவளைத் தாண்டிப் பார்த்து. "அய்யோம்மா!" என்று பயந்து விழித்தான்,

கடவுளே. என்ன மாதிரிக் கொடுமை!

திகைத்துத் தடுமாறியவளைத் தன் மீதே சாத்திக்கொண்டான் நிரஞ்சன்,

அச்சத்துடன் நோக்கிய லாட்ஜ் பையனிடம். "பயப்படாதே, நீ அஞ்சிய மாதிரி உன் ஆய்வாளரின் சதி வெற்றி பெறவில்லை, இப்போது எங்களுக்குத் திருமணமே ஆகிவிட்டது, நீ எப்போது சென்னைக்கு வந்தாலும் இந்த முகவரிக்கு வா, வந்து இந்த அக்காவைப் பார்த்துவிட்டுப் போ," என்று ஒரு கார்டைக்

கொடுத்துவிட்டு. மகதியைத் தோளோடு அணைத்து அழைத்துக்கொண்டு போனான்,

காரில் முன்புறம் அருகே உட்கார வைத்துச் சற்று தூரம் காரை ஓட்டிச் சென்று ஓர் அடர்ந்த மரத்தின் நிழலில் நிறுத்தினான்,

ஏற்கனவே வாங்கி வைத்திருந்தான் போலும்,

ஃப்ளாஸ்கிலிருந்த பழச்சாறை ஒரு கப்பில் ஊற்றிக் கொடுத்துக் குடிக்க வைத்தான், மீண்டும் காரை ஓட்டலானான்,

அவர்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்த ஹோட்டலுக்குச் சென்று. அறைக்குள் சென்று அமர்ந்துவிட்ட போது கூட. அவன் சொல்லச் சொல்ல ஒரு பொம்மை போல இயங்கினாளே தவிர. மகதியின் மனதில் ஒன்றுமே உறைக்கவில்லை,

அன்றுவரை அவள் நினைத்தது என்ன? சூட்சுமனின் தவறான முயற்சியைக் கூட. அவர் ஒரு தியாகமாகச் செய்தாரோ என்று எண்ணினாளே!

கடைசியில் என்ன மாதிரி சூழ்ச்சி! சதி!

ஓர் இளம் தம்பதியரின் வாழ்வை அழிக்க அவருக்குக் கூசவே இல்லையே!

ஒரு தந்தை போல அவள் நினைத்தால் அவர் என்னென்ன பண்ணிவிட்டார்!

சற்று நேரம் யோசிக்க விட்டுவிட்டு. “மகி ...” என்று அவள் அருகில் வந்து அமர்ந்து. நிரஞ்சன் அவளை வருடிக் கொடுத்தான்,

உணர்வு வந்தது போல. மகதி விலுக்கென்று நிமிர்ந்து அவனை நேராகப் பார்த்தாள்,

யார் என்ன சொன்னாலும் இவன் எப்படி நம்பலாம்? அதுவும் யாரோ சொன்னதை. அப்படி இருக்கக் கூடுமா ஒரு வார்த்தை சந்தேகிக்காமல் அப்படியே ஏற்றிருக்கிறானே!

“என்னடாம்மா?”

இந்தக் கனிவை அவளால் ஒப்ப முடியவில்லை,

விறைப்புடன் விலகி அமர்ந்து கேட்டாள், “குறைந்த காலமாகவே இருக்கலாம், ஆனால். உயிராகப் பழகிவிட்டு யாரோ சொன்னதை உங்களால் நம்ப எப்படி முடிந்தது? வேறு பெண் பார்த்திருப்பதாக உங்கள் சித்தி சொன்னபோது கூட மனதார ஒத்திருக்க மாட்டீர்கள் என்றுதான் எண்ணினேன், நீங்களானால் யாரோ சொன்ன ஒரு வார்த்தையில் என்னை மோசமானவளாக சந்தேகப் பட்டு ...ஏன். கெட்டவள் என்று முடித்தேவிட்டீர்களே!

உங்களால் எப்படி முடிந்தது?” என்று ஆத்திரத்துடன் கேட்டாள்,

“ஒரு காரணம் இருக்கிறது,” என்றவன் அவள் முகம் மாறவும் அவசரமாக “பொறு பொறு, காரணம் உன்னைப் பற்றியது அல்ல, அப்போது நான் உலகில் உள்ள இளம் பெண்கள் அனைவரையும் வெறுத்திருந்தேன், சரியாகச் சொல்வதானால் உன்னை நம்பி மணந்ததே அதிசயமான ஆச்சரியம்!”

“ஏன்? ஏதேனும் காதல் தோல்வியா?”

“இல்லையில்லை, நண்பர்களும் நானும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டோம், அதன்படி. தொழில் தொழில் என்று வேறு நினைவே இல்லாதிருந்தேன், அப்போது என் அத்தை ... “ என்று சரளாவின் முயற்சி பற்றிக் கூறினான்,

“கடைசியாக ஒரு நாள் இரவில் அத்தைக்குத் தெரியாமல் என் அறைக்குள் செல்ல எண்ணிக் காரையும் தூர நிறுத்திவிட்டு சத்தமின்றி வந்தேன், அத்தையும் அத்தை மகளும் சேர்ந்து ஒரு கேவலமான திட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள், என் அறையில் ஐஸ்வர்யா மறைந்திருந்து நான் திரும்பி வந்ததும் என்னை எப்படியாவது தப்பு செய்ய வைத்துவிடுவதாக ... தன்னால் முடியும் என்று கர்வமாக அவள் கூறிய விதம்! அப்புறம் அவளது “சிக்னல்” கிடைத்ததும் அத்தை வந்து கையும் களவுமாக எங்களைப் பிடிப்பதாக
சே, அவர்களது பேச்சைக் கேட்கும்போதே எனக்கு வாந்தி வந்தது, வந்த சுவடே இல்லாமல் வெளியே போய்விட்டேன், அந்த வெறுப்பில் சுற்றிக் கொண்டு இருந்தபோதுதான் உன்னைக் கண்டு ... “ என்று முழு விவரமும் சொன்னான் நிரஞ்சன்,

“கூட வளர்ந்த பெண், குடும்பத்தில் உள்ளவள், எப்படி இறங்கத் தயாராகி விட்டாள்! இன்றையப் பெண்களிடமே நம்பிக்கையே போய் விட்டது, 1”

“ஆனால் என்னைத் திருமணம் செய்தீர்களே? நீங்கள் சொன்னதைக் கேட்ட பிறகு . இப்போது எனக்கு ஒரு சந்தேகம்! ஒருவேளை அந்தத் திருமணமே நாடகமா?”

“இல்லை மகிம்மா. சத்தியம்! உன்னைக் கண்டதுமே மனைவியாகத்தான் நினைக்க முடிந்தது, ஆனால் அடி மனதில் இருந்த வெறுப்பு வாய்ப்புக் கிடைத்ததும் சட்டென்று தலை தூக்கிவிட்டது,” என்று விளக்கினான் அவன்,

அப்போதும் முழுதாக சமாதானம் அடையாமல் “ஆனாலும் ,, யாரோ ஒருவன் ...” என்று இழுத்தாள் மகதி,

ஒரு பெருமூச்சு விட்டான் நிரஞ்சன், “ஓரளவு காரணம் நீயும்தான. மகி,, இதைச் சொல்லி உன்னை வருத்த எனக்கு

மனமில்லைதான், ஆனால் சொல்லாமல் உனக்குப் புரியாது, தந்தைக்கு ஒப்பானவர். அவரிடம் அபிப்பிராயம் கேள் என்றாயே! அவர் உன்னைப் பற்றி என்ன சொன்னார் தெரியுமா?" என்று தொடங்கி அவன் பாதி சொல்லும்போதே அவளது முகம் ரத்தப் பசையே இல்லாதது போல வெளுக்கவும் பேச்சை நிறுத்தி. அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்,

மார்பில் புதைநது கிடருந்தவளிடமிருந்து தெளிவற்ற குரல் கேட்டது, "இவ்வளவுக்கும் மேல் எப்படி. எப்ப்படி அவர் மேல் சந்தேகம் வந்தது. ரஞ்சன்?"

"சொல்கிறேன்," என்று அவன் தொண்டையைச் செறுமிக் கொள்ள. எழுந்து சென்று அவனுக்குத் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தாள் மகதி,

குடித்துவிட்டு நிரஞ்சன் தொடர்ந்தான், "அன்றைக்குச் சித்தி அவர்களுடைய சினேகிதியின் வாட்ஸ்ஆப்பைப் பற்றிச் சொன்னபோதுதான் எனக்குள் மணியடித்தது, அவர் ஒன்றுமில்லாத காலிப் பெருங்காய டப்பா, உன் பணி தொடர்ந்து கிடைப்பதற்காக உன்னிடமிருந்து என்னைப் பிரித்து விரட்ட அவரே முயன்றிருப்பாரோ என்று ஓர் ஐயம் ஏற்பட்டது, ரொம்பச் சின்ன நூல்தான், ஆனால் யோசிக்க யோசிக்க ........................இந்த இரண்டு இடங்களுக்கும் போகச் சொன்னதே அவர்தானே? தப்பான கருத்தை உருவாக்கவும் ஆட்களைத் தயார் பண்ணி வைத்திருந்தால்? கூடவே உன் புரியாத பார்வை! கிட்டத்தட்ட எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது, பிறர் உழைப்பைத் திருடித் தன்னதாகக் காட்டுகிறவன் எந்தக் கேவலத்துக்கு அஞ்சுவான்? ஆனால். இப்போது உனக்கு என்னைப் புரிய வைக்க வேண்டியது ஆயிற்று!"

காதில் விழுந்ததை ஜீரணிக்க முயன்றபடி. " ஆன்ட்டி வீட்டில் தினமும் நீங்கள் என்னைப் பற்றி உங்கள் கருத்தைச் சொல்லி என்னை வெளியேற்றுவதை உள்ளூர எதிர்பார்த்துக்கொண்டே இருந்தேன்,," என்றாள் வருத்தத்தோடு,

"மனம் வரவில்லை," என்றான் நிரஞ்சன், "அத்தனை நாட்கள் உன்னைப் பாராததே வேதனை, ஏதாவது சொல்லி. மீண்டும் உன்னைப் பார்க்கவே முடியாது போய்விடுமே என்பது உன்னைப் பற்றிப் பேசாததன் முக்கியமான காரணம்,, அத்தோடு ஒரு வேளை நூற்றில் ஒரு சதவீதமாக உன் உறவு நிலைக்கக் கூடுமானால். சித்தியோ தம்பியோ உன்னைத் தவறாக நினைத்துவிடக் கூடாது என்றும் எண்ணினேன், பைத்தியக்காரத்தனம் என்று என்னை நானே ஏளனம் செய்துகொண்டபோதும். உன்னை மற்றவர் முன் கேவலப்படுத்த மனம் வரவில்லை, என் தாய்க்கே ஒப்பான சித்தி.

உடன் பிறந்தவன் போன்ற தம்பி யாரும் உன்னை இழிவாக நினைத்து விடக்கூடாது என்ற பிடிவாதம் எனக்கு இருந்தது, இப்போது கூட ஒரு சிறு கருத்து வேறுபாடு என்றுதான் சொல்லியிருக்கிறேன் …….. ஹேய் …என்ன இது?" என்று திகைத்தான் நிரஞ்சன்,

ஏனெனில் அவன் பேசப் பேச அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள் எழுந்து வந்து அவனை அணைத்திருந்தாள்,

தாமதிக்காமல் அவனது கைகளும் மகதியைச் சுற்றிக் கொள்ள. "யூஸ் அன்டு த்ரோ மாதிரி என்னை கைவிட்டு விட்டீர்கள். அடியோடு வெறுத்து விட்டீர்கள், என்றெல்லாம் நினைத்தென். ரஞ்சன், ஆனால். தீபம் அணையாமல் நீங்கள் காப்பாற்றிக்கொண்டே இருந்திருக்கிறீர்கள்," என்றாள் அவள் பூரிப்புடன்,

"ஆனால் என் தங்கத்தைத் தப்பாகவும்நினைத்தேனே! அந்தப் பணத்தை நீ எடுக்காததைக்கூட. செக் எதுவும் வீணாகி இருக்கக் கூடும் என்றுதான் எண்ணினேனே தவிர. நீ வேண்டாம் என்று இருந்ததாக எண்ணவில்லையே," என்று வருந்தினான் அவன், "அதை நான் கிழித்து எறிந்துவிட்டேன், ஆனால் … " என்று அவள் சொல்ல வரும்போதே. அறைக் கதவு தட்டப் பட்டது,

சுதாங்கன்தான், "சாரி பூஜை வேளையில் கரடிதான், ஆனால் பொறுமையாக இருக்க முடியவில்லை, உங்களுக்குள் எல்லாம் சரியாகிவிட்டதா என்று நேரில் கேட்டறிய வந்தேன்," என்றவன் தொடர்ந்து. "ஆனால் முகங்களைப் பார்த்தால் கேட்கவே தேவையில்லை என்று தெரிகிறது," என்று சிரித்தான்,

"உ உங்களுக்குத் தெரியுமா?" என்று ஆச்சரியத்துடன் வினவினாள் மகதி,

"ஆமாம் இப்போது கேளுங்கள், கழுத்துச் சங்கிலியை அம்மனுக்குப் போட்டு எடுக்கக் கூடக் கழற்ற மாட்டார்களாம், புருஷனுக்கு நல்லது என்று சொன்னதும் தருவார்களாம்! சங்கிலி அடையாளம் தெரிந்தது, அதில் உன் மோதிரம் வேறு! இதற்கு மேல் சந்தேகம் வராமல் போகுமா? அண்ணா. உங்கள் மகதிக்குத் தெரியாமல் அறையை சோதனை போட்டேன், செக் கிழிந்து போனதில் உன் கையெழுத்துப் பகுதி மட்டும் கண்ணாடித் தாளில் பத்திரப்படுத்தி வைக்கப் பட்டிருந்தது! ஆஹ்ஹா! என்னமோ பெரிய காதல் கதை என்று புரிந்து போனது," என்றவன். மகதியை விழியால் எச்சரித்து. "வேறு எதற்காகக் கணக்கு வழக்கு என்று உங்களை வரவழைத்தேனாம்? அத்தோடு மேடம் சொல்படி ஏன் நடந்தேனாம்? அண்ணியார் ஆயிற்றே! அண்ணன் வரும்போது அருமையான ஒரு

காதல் கதை நல்லபடியாக முடியும் என்று காத்திருந்தேன்! என் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை!” என்று மகிழ்ச்சியோடு உரைத்தான்,

கூடச் சேர்ந்து நகைத்தபடி தம்பியை அணைத்துக் கொண்டான் நிரஞ்சன்,

புன்னகையோடு சுதாங்கனை நோக்கி “சட்டுப் புட்டென்று நீங்களும் ஓர் உத்தம புத்திரனாய் ஆன்ட்டிக்கு ஒரு நல்ல மருமகளைக் கூட்டி வாருங்கள், அப்போதுதான் எல்லோருக்கும் பேரானந்தமாக இருக்கும்,” என்றாள் மகதி,

புரிந்தவனாக “உத்தம புத்திரனா? அப்படியே அண்ணியாரே, ஆனால்  அண்ணியார் பொல்லாதவர் அண்ணா! இப்போதே அதிகாரம் பண்ணத் தொடங்கி விட்டார்கள், பார்த்து நடந்துகொள், அத்தோடு உங்களுக்கு இடையூறாக இன்னமும் இங்கேயே இருந்து சோதிக்க எனக்கு மனமில்லை, நான் போய் அம்மாவை அழைத்து வருகிறேன், அதுவரை நீங்கள் தொடருங்கள்,” என்று கலகலத்துவிட்டு சுதாங்கன் சென்றான்,

“இவ்வளவு கெட்டிக்காரத் தம்பி சொன்னால் கேட்டுக் கொள்ளத்தானே வேண்டும்,” என்று ஆசையுடன் மகதியை நெருங்கினான் நிரஞ்சன்!